ISSN 2021-9041

Aasiriyam (pedagogy)

# ஆசிரியம்

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

ஆசிரியம் எல்லையற்று விரியும் அறிவுத்தளம்...

இதழ் 006 ஒக்டோபர் 2011 ரூபா 50/=

## நூற்றாண்டு காணும் வவு/ஓமந்தை மத்திய கல்லூரி

முன்பள்ளிப் பாடசாலை

பாடசாலை முகாமைத்துவம்

ஆசிரியர்களின் பிரச்சினைகளும் தொழில் சங்கங்களும்




சு.பரமானந்தம்/ மா.கருணாநிதி/கி.புண்ணியமூர்த்தி/ க.பாஸ்கரன்
சபா.ஜெயராசா/செ.சேதுராஜா/அன்பு ஜவஹர்ஷா
ம.நிரேஷ்குமார்/ஆர்.தயாநிதி


# மே முதல்
# வெளிவந்துகொண்டிருக்கிறது...




## "AASIRIYAM"

180/1/50 People's Park, Colombo -11
Tel: 011-2331475
E-mail : aasiriyam@gmail.com

"அறிவுச் சமூகத்தின் வேட்கை
வினைத்திறன் மிக்க ஆசிரியர்"




# உள்ளே...


|| நூற்றாண்டு காணும் பாடசாலை... 04

|| ஆரம்ப வகுப்பு ஆசிரியரின் கற்பித்தல் பாங்குகள் 10

|| முன்பாடசாலைகளுக்கான கலைத்திட்டம்... 15

|| மாணவர்களிடையே மிருது திறன்களை விருத்தி... 22

|| சமூகமும் கல்வியும்... 26

|| சக்திமிகு பாடசாலை முகாமைத்துவம் 29

|| ஆசிரியர்களின் பிரச்சினைகளும்... 33

|| என்ன செய்வாள் சஞ்சுளா ? 36

|| குழந்தைக்கல்வி 39

ISSN 2021-9041

Aasiriyam

ஆசிரியம்

மாத இதழ் 006

**ஆசிரியர் :**

தெ.மதுசூதனன்

**இணை ஆசிரியர்கள் :**

அ.ஸ்ரீகாந்தலட்சுமி

எம்.என்.மர்சூம் மௌலானா

காசுபதி நடராசா

**ஆசிரியர்குழு :**

பேரா.க.சின்னத்தம்பி

பேரா.சபா.ஜெயராசா

பேரா.சோ.சந்திரசேகரன்

பேரா.எம்.ஏ.நு்.மான்

**சிறப்பு ஆலோசகர்கள் :**

சுந்தரம் டிவகலாலா

சி.தண்டாயுதபாணி

அன்பு ஜவஹர்ஷா

வல்வை ந.அனந்தராஜ்

**ஆலோசகர் குழு :**

பேரா.மா.கருணாநிதி

பேரா.மா.சின்னத்தம்பி

பேரா.மா.செல்வராஜா

முனைவர் த.கலாமணி

ஆய்வாளர்.தை.தனராஜ்

முனைவர் அனுஷ்யா சத்தியசீலன்

முனைவர் ஜெயலக்சுமி இராசநாயகம்

செ.அருண்மொழி

சு.முரளிதரன்

பொ.ஐங்கரநேசன்

**நிர்வாக ஆசிரியர் :**

சதபூ.பத்மசீலன்

**இதழ் வடிவமைப்பு :**

கோமளா/மைதிலி

**Printed by: cbc prees**

Tel : 0777 345 666

**தொடர்புகளுக்கு :**

**"Aasiriyam"**

180/1/50 People's Park, Colombo -11

Tel: 011-2331475 E-mail : aasiriyam@gmail.com

## ஆசிரியரிடமிருந்து...

### வாசிப்பும் - நூற்றாண்டும்...

தற்போது நாம் "ஆசிரியம்" ஆறாவது இதழில் அனைவரையும் சந்திப்பதையிட்டு மகிழ்வடைகின்றோம். "ஆசிரியம்" தனக்கான இருப்பையும் அடையாளத்தையும் உறுதிப்படுத்துவதில் தனித்தன்மைகளை வெளிப்படுத்தி வருகிறது. சமூக இயல்போடும் கல்விக் கவிவு நிலையோடும் இணைந்த வாசிப்புச் செயற்பாட்டுக்கான இயக்கமாகவும் எழுச்சி பெறுகிறது.

இலங்கையில் "ஒக்டோபர் மாதம்" வாசிப்பு மாதமாகக் கொண்டாடப்படுகிறது. இந்நிலையில் வாசிப்பின் முக்கியத்துவத்தை அவசியத்தை சமூகமயப்படுத்த வேண்டும். இந்தத் தேவை முன்னரை விட அதிகரித்துள்ளது. சமூகம்- கல்வி - வாசிப்பு ஆகியவற்றுக்கிடையிலான தொடர்புகளை மீள வலியுறுத்த வேண்டியுள்ளது. இதற்கான புதிய அணுகுமுறைகளை இனங்காண வேண்டியுள்ளது.

இன்று மேலைநாடுகளில் நிதான வாசிப்புக்கென்று ஒரு இயக்கமே தொடங்கப்பட்டு வருகிறது. அவசரத்திலிருக்கும் ஒருவரால் சிந்தித்துக் கொண்டிருக்க முடியாது. சமகாலத்தில் துரித உணவகங்களின் பெருக்கம் போல் துரித சிந்தனையாளர்களின் பெருக்கமும் அதிகரித்துவிட்டது. இந்த ஆளனியினர்தான் கல்வித்துறையில் பெரும் செல்வாக்காகவும் அதிகாரம் கொண்டவர்களாகவும் உள்ளனர். ஆழ்ந்த வாசிப்பு, நிதானமான வாசிப்பு, சிக்கலான அறிவு, புதிய புதிய சொல்லாடல் முதலியவற்றை ஏற்க மறுக்கும் சமூகங்கள் அறிவுசார் பொருளாதாரத்தில் பின்னடையக் கூடியவர்களாகவும் உள்ளனர். இவர்கள் மலினமான நுண்வழி முறைகளை பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். அறிவுக்கு முன்னுரிமை வழங்காத தலைமைத்துவ வழிபாட்டை உருவாக்கும் எடுபிடிகளையும் அடிவருடிகளையும் உற்பத்தி செய்கின்றனர். இந்த அபாயத்தை விளங்கிக்கொள்ளும் நுண்ணறிவை வாசிப்புச் செயற்பாட்டை சாத்தியப்படுத்துவது தவிர்க்க முடியாது.

வாசித்தல் என்பது கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்கு முன்னூட்டல் நடவடிக்கையாகவும் அமைகிறது.

****

வ/ஓமந்தை மத்திய கல்லூரி 2011இல் நூற்றாண்டு காண்கிறது. இது மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்துக்கும் உரிய தருணங்களை நமக்குள் உருவாக்குகிறது.

இந்தக் கல்லூரி வன்னிப் பிரதேசத்தின் கல்வித் தேவைகளை மனிதவள அபிவிருத்திகளை நிறைவு செய்வதில் முதன்மைப் பங்குகொண்டு வருகின்றது. தரமான கல்வி ஊடாக தரமான சமூகத்தை உருவாக்கும் நீண்ட நெடிய பயணத்தில் தரமான கல்லூரியாக ஓமந்தை மத்திய கல்லூரி நிமிர வேண்டும்.

ஆம்! சாம்பல் மேட்டிலிருந்து உயிர்த்தெழும் பீனிக்ஸ் பறவை போன்று வரலாற்றில் இடம்பிடித்த பாரிய இழப்புகள் அழிபாடுகள் யாவற்றிலிருந்தும் மீண்டெழ வேண்டும். காலத்திற்கேற்ற தர ரீதியில் மேம்பட்டு வரும் ஒரு கல்லூரியாகவும் எழுச்சி பெற வேண்டும்.

இக்கல்லூரி ஆரம்பப் பாடசாலையாக 1911இல் ஆரம் பிக்கப்பட்டது. பல சமூக நலன்விரும்பிகளின் முயற்சி யால் இப்பாடசாலை முறைமைப்படுத்தப்பட்டு 1914இல் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது. இப் பாடசாலையின் முதலாவது அதிபராக எஸ்.சின்னத்தம்பி என்பவர் பொறுப்பேற்றார். ஆரம்பத்தில் ஆரம்பப் பாட சாலையாக இயங்கி வந்த இப்பாடசாலை க.பொ.த (சா/ த) வரை வகுப்புகள் நடத்தப்படும் அளவிற்கு உயர்ச்சி கண்டது. இப்பிரதேசத்தின் கல்வி வளர்ச்சிக்கு இப்பாட சாலை சிறப்புக் காரணியாக அமைந்தது.

1942இல் சி.டபிள்யு.டபிள்யு.கன்னங்கரா அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்ட விசேட கல்விக்குழு 1943இல் வெளியிட்ட அறிக்கையில் விதந்துரைக்கப் பட்ட விடயங்கள் கல்வியை சனநாயகப்படுத்தும் முயற் சிக்கும் இலங்கையின் கல்வி அபிவிருத்திக்கும் அடித்தள மிட்டன. அதாவது,

- பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரையில் இலவசக் கல்வி.
- ஆரம்ப நிலையில் தாய்மொழிக் கல்வி மொழியாதல்.
- மூன்றாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் கற்பிக்கப்படுதல்.
- மதச்சார்புடைய பாடசாலைகளின் செல்வாக்கினை மட்டுப்படுத்தல்.
- கலைத்திட்டச் சீர்திருத்தங்கள் மூலம் தராதர மேம்பாடு.

இதுபோன்ற அம்சங்கள் முக்கியமானவையாகக் கருதப் பட்டன. இவற்றை நடைமுறைப்படுத்துவதில் இலங்கை யின் மட்டத்தில் "மத்திய மகா வித்தியாலயங்கள்" பெரிதும் பங்களிப்புச் செய்துள்ளன.

1940களில் ஆரம்பத்திலிருந்து பிரதேசங்கள் தோறும் மத்திய மகா வித்தியாலயம் என்ற அடிப்படையில் 53 பாடசாலைகள் நிறுவப்பட்டமை முக்கியமானதொரு விடயமாகும். இந்த மரபில் வரும் எழுச்சி பெற்ற பாட சாலைகளுள் ஒன்றாகவே ஓமந்தை மத்திய மகா வித்தியாலயம் அமைந்திருந்தது.

1967இல் இங்கு உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டன. விடுதி வசதியுடன் கூடிய பாடசாலைக் கலா சாரம் மேம்பட்டது. இதனால் கிராமப்புற மாணவர் களின் நல்வாழ்வுக்கும் நம்பிக்கைக்கும் புதுப்பாதை அமைத்தது.

1975களிலிருந்து இக்கல்லூரி தனது மாணவர்களை பல்கலைக்கழகத்திற்கு அனுப்பும் மரபை உருவாக்கியது. அதிகமாக கலைத்துறைப் பட்டதாரிகளே உருவானார்கள். 1980களுக்குப் பின்னர் ஏற்பட்ட சமூக - அரசியல் - பொருளாதாரப் பிரச்சினைகள் பல இளம் மாணவர் களை தீவிர அரசியலில் பங்குகொள்ளத் தூண்டியது. இதனால் இந்தக் கல்லூரியில் கல்வி கற்றுக்கொண்டி ருந்த மாணவர்கள் பலர் அரசியலில் நேரடியாக ஈடுபடத் தொடங்கினர். இன்னும் பலர் நாட்டை விட்டு வெளியேறி அகதிகளாக ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் புகுந்தனர். இவற்றினால் வளமான மாணவர் அணியின் விரிவாக்கம் இடையில் தடைப்பட்டது.

நாம் இந்த மரபையும் உள்ளடக்கியே இந்தக் கல்லூரி யின் நூற்றாண்டு நினைவாக எழும் சிந்தனையை இனங் காண வேண்டும். அப்பொழுதுதான் 1990களுக்குப் பிறகு இந்தக் கல்லூரி எதிர்கொண்ட நெருக்கடிகள் சவால்கள் முதலானவற்றையும் நாம் புரிந்துகொள்ள முடியும்.

கல்லூரி தொடர்ந்து இடம்பெயர்ந்து இடம்பெயர்ந்து அகதிப் பாடசாலையாக இயங்கி வரவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதனால் பல மாணவர்கள் கல்லூரியை விட்டு இடைவிலகிச் செல்லவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளானார்கள். இன்று மீண்டும் பொதுவான பாடசா லைக் கலாசார மரபில் உள்ளீர்க்கப்படும் கல்லூரியாக உயர்வு கண்டு வருகிறது.

இன்று ஓமந்தை மத்திய கல்லூரியின் வளர்ச்சிக்கும் வரலாற்றுக்கும் உறுதுணையாக இருந்த அதிபர்கள் ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் மற்றும் மாணவர்கள் யாவரும் நினைக்கப்பட வேண்டியவர்கள். அவர்களது உழைப்பும் அர்ப்பணிப்பும் தியாகமும் என்றும் மதிக்கப் பட வேண்டும்.

தற்போது இக்கல்லூரியின் இன்றைய நிலையினையும் அதன் முக்கியத்துவத்தையும் வெளிக்கொணர்ந்து கல்லூரிச் சமூகத்திடம் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

நூற்றாண்டினைக் கொண்டாடும் கல்லூரி என்ற வகை யில் இக்கல்லூரி தொடர்பான வரலாற்றினை ஆவணப் படுத்தும் நோக்கில் பல்வேறு முயற்சிகளில் ஈடுபட வேண்டும்.

1960/ 70 களில் பிறந்து இந்தக் கல்லூரியில் கல்வி கற்று இன்று அரச நிர்வாக/ கல்வி நிர்வாக உயர் பதவிகளில் அமர்ந்திருக்கும் மண்ணின் மக்களுக்குப் பெரும் பொறுப்புண்டு. ஆனால் இவர்களுள் பெரும்பாலானோர் சமூக உணர்வும், பிரதேசப் பற்றும் இல்லாத சுயநலமி களாகவே இருப்பது வேதனைக்குரியது.

வன்னிப் பிரதேசத்தின் சமூக - பொருளாதார, கல்வி பண்பாட்டு அபிவிருத்திக்காக தூர நோக்கோடு சிந்திக் கும் உழைக்கும் சக்திகளை இனங்கண்டு செயற்படு வதற்கான உந்துதலை ஏற்படுத்துவதற்கு நூற்றாண்டுச் சிந்தனை உதவ வேண்டும். இதற்கு ஓமந்தை மத்திய கல்லூரியின் நூற்றாண்டு கால்கோள் இடவேண்டும்.

**தெ.மதுசூதனன்**



சு.பரமானந்தம்

# நூற்றாண்டு காணும் வவு/ஓமந்தை மத்திய கல்லூரி

வவுனியா மாவட்டத்தில் பல்வேறு சாதனைகளை நிகழ்த்தியிருந்த ஓமந்தை மத்திய கல்லூரி இவ்வருடம் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்றது. இந்நிலையில் நாம் யாது செய்ய வேண்டும்? என்ற தொனிப்பொருளில் மற்றும் இடம்பெயர்ந்து இயங்கும் பாடசாலைகள் அவை மேற்கொண்ட கல்வி நடவடிக்கைகள் போன்ற அனுபவங்கள் முதலானவற்றின் பின்புலத்தில் எமது மக்களின் ஆசிரியர்களின் சமூக உணர்வுகளைத் தட்டியெழுப்பும் நோக்குடன் இப்பாடசாலையின் அதிபருடனான கருத்தாடலின் போது பெறப்பட்ட விடயங்களின் தொகுப்பு இங்கு முன்வைக்கப்படுகின்றது. அதைவிட நாம் தொடர்ந்து சிந்திக்க வேண்டிய செய்ய வேண்டிய பணிகளையும் தொகுத்துள்ளோம்.





### ஓமந்தையின் கல்விச் சுவடு...

*ஓமந்தை பாடசாலை 20.01.1911 தொடங்கியதாக பதிவுகள் கூறுகின்றன. இப்பாடசாலையின் முதலாவது முதல்வர் எஸ்.சின்னத்தம்பி அவர்கள். அதன்பின் பல அதிபர்கள் நலன் விரும்பிகள், பழைய மாணவர்கள் போன்றோரால் பாடசாலை மேலும் வளர்க்கப்பட்டு விஞ்ஞானத் துறை, விவசாயத் துறை, விளையாட்டுத் துறை, மனையியல் துறை, கலைத்துறை போன்ற சலக துறைகளிலும் வளர்ந்த பாடசாலையாக உயர்வு கண்டது. பின்னர் 13.06.1997 இல் இப்பாடசாலை இடம்பெயர்ந்து சகல துறைகளிலும் வீழ்ச்சி கண்டது.*

*தொடர்ந்து 01.01.2004 இல் பாடசாலை சொந்த இடத்திற்கு நகர்ந்தது. வளர்ச்சிக்கான பல அடித் தளங்களை இட்டு செயற்படத் தொடங் கியது. ஆனால் மீண்டும் பாடசாலை மே 2008 இல் தெருவோரத்திற்குத் தள்ளப்பட்டு தத்தளித்துக் கொண்டிருந்தது.*

*மீண்டும் 02.06.2011 தொடக்கம் இப்பாடசாலை இயங்கத் தொடங்கியது. மாணவர்களின் முழுநிறைவான கல்வியைக் கற்பதற்*

காக தொடர்ந்து போராட வேண்டி இருந்தது. இந்நிலையில் ஊர் மக்களாலும், பழையமாணவர் களாலும், பாடசா லைச் சமூகத்தாலும் இந்தப் பாடசாலையின் நூற் றாண்டு விழாவை வெகு சிறப்பாக நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டது. நாம் கடந்து வந்த பாதையினை சாதனைத் தடங்களை நினைவுறுத்து வதன் மூலம் கல்வியில் மறுமலர்ச் சியை ஏற்படுத்திட சகல தரப்பினரும் ஒருங்கிணைந்துள்ளனர்.

பொதுவாக பாடசாலைகளின் சாதனைகள் உடன் தெரிவதில்லை. பாடசாலைகளால் உருவாக் கப்படுபவர் களின் சாதனைகள் பெரும்பாலும் சமூகத்திற்கே வழங்கப் பட்டு விடுகின்றது. ஆரம்பக் கல்வியுடன் ஆரம்பித்த இந்தப் பாட சாலை விரைவாக வளர்ச்சியடைந்தது. இச்சமூகத்திற் குத் தேவையான கல்விமான்களை உருவாக்கியது. ஆசிரியர்கள், தொழில் நுட்பவியலாளர்கள், வைத்தியத்துறை சார்ந்தவர்கள், தரமான விவசாயிகள், நிர்வாக சேவை சார்ந்தோர் என பல்வேறு துறைசார் நிபுணர்களை உருவாக்கியது. அதன் பயனாக வவுனியாவில் முதல் முதல் மாணவர் விடுதி உருவாக் கப்பட்டு அதில் மாணவரைத் தங்கவைத்து சிறந்த கல்வியும் பயிற்சியும் அளிக்கப்பட்டு பல முன்னேற்றங்களைக் கண்டு வந்தது.

பல தசாப்தங்களுக்கு முன்னமே இப்பாடசாலையிலி ருந்து மாணவர்கள் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றி சிறப்புக்களைப் பெற்றனர். பல்கலைக்கழகம் சென்று உயர் பட்டங்களை பெற்றனர். ஆனால் தொடர்ந்த போரியல் வாழ்வால் மாணவர்கள் சிதறடிக்கப்பட்டார்கள். புலம் பெயர்ந்தார்கள். தமது அடிப்படைக் கல்விக்காக தொடர்ந்து போராட வேண்டியவர்களாக இருந்தார்கள்.

இன்று நூறு வயதைக் கடந்துவிட்ட இந்தப் பாடசாலை யின் அபிவிருத்திக்காக பல முனைகளிலிருந்து தீவிரமாக செயற்பட வேண்டியுள்ளது. இது பற்றிய விழிப்புணர்வு பாடசா லைச் சமூகத்தில் மட்டுமல்ல பிரதேச உள்ளூர் மட்டத்திலும் எழுச்சி பெறவேண்டும். அப்பொழுதுதான் தரமான கல்வியை வழங்கும் தரமான பாடசாலையாக உருவாக்க முடியும்.

அதிபர் என்பவர் பாடசாலையின் நிர்வாகி, முகாமை யாளர் எனப் பல்வேறு வகிபாகங்களை எடுத்துக்கொண்டா லும் கலைத்திட்ட விருத்தியிலும் பார்க்க முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டிய தேவை அல்லது நிபந்தனைப்படுத்தல் காணப்படுவதைக் காணலாம். இதனால் இப்பாடசாலையைப் பொறுப்பேற்கும் அதிபர் பல்வேறு பிரச்சினைகளை சவால்களை எதிர் கொள்ள வேண்டியவராகவே உள்ளார்.

இது தொடர்பில் இன்றைய அதிபர் கருத்துத் தெரிவிக் கையில்,

"நான் பாடசாலையைப் பொறுப்பேற்றுக்கொண்ட போது இருந்த நிலை முக்கியம். அப்பொழுது பாடசாலையின் இல்ல விளையாட்டுப் போட்டி ஒன்று கோவில் குளத்தில் நடத்தத் திட்டமிடப்பட்டிருந்தது. இந்நிலையில் அதிபர் மாற்றலாகிச் சென்றார். இதனால் அனைத்து செயற்பாடு களும் கைவிடப்பட்ட நிலையில் இருந்தது. வவுனியாவில் இருந்து கடுமையான யுத்தப் பிரதேசத்தினூடாக பாடசாலையை நான் சென்றடைந்து பதவி ஏற்றேன். ஆயத்தமாக இருந்த விளையாட்டுப் போட்டியை நடத்தி முடித்தேன். இன்னும் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்தேன்.

பாடசாலையில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வந்தது. அப்பொழுது தொண்டர் ஆசிரியர்களே கைக்கொடுத்தார்கள். இவர்களின் சேவை உண்மை யில் பாராட்டக்கூடியது. நானும் நிர்வாகக் கடமைகளுடன் வகுப்பறைச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டேன். பலவருடங்கள் நான் கணித பாடம் கற்பிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இது எனக்கு வித்தியாசமான அனுபவங்களைத் கற்றுத் தந்தது. அதாவது மாண வர்களுடன் சிறந்த உறவினைப் பேணக்கூடியதாக இருந்தது. கலைத் திட்டச் செயற்பாடுகளின் விருத்திக்கு உதவியாக இருந்தது.

அப்பொழுது பாடசாலையின் கவிவுநிலை மிக மோசமா கவே இருந்தது. எங்கும் சேறு, வெள்ளம், மற்றும் யானை முதலான மிருகங்களின் அச்சுறுத்த லுடனான நீண்ட பயணம். 5-6 கிலோமீற்றர் வரையான தொடர் காட்டுப் பகுதிகளுக் கூடாக பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டன. கோவில் குஞ்சுக்குளத்திலிருந்து வவுனியாவுக்கு அல்லது வேறு இடங் களுக்கு சுலபமாக செல்ல முடியும். ஆனால் அக்காலப்பகுதி யில் வன்னியில் அதிகூடிய பிரயாண கஷ்டமுள்ள இடமாகவே எமது பாடசா லைச் சூழல் அமைந்திருந்தது. யுத்த மேகங்கள் சூழ்ந்த இடமும் ஆயுததாரிகள் அதிகபடியாக நடமாடுமிடமும் இப்பிரதேசமாகவே இருந்தது. இப்பகுதியினூடாக பிரயாணஞ் செய்வது மிகமிக கஷ்டம். அப்போது இப்பாதையினூடாக பிரயாணம் செய்த பலர் காணாமல் போயுள்ளனர்.

2004இல் இக்கல்லூரி சொந்த இடத்தில் குடியேறியது. அன்று மிகச் சிறிய தொகை மாணவர்கள் வந்தார்கள். இது 10, 100, 200, 300 ஆக வளர்ந்து வரும்போது மே 2008 இல் மீண்டும் பாடசாலையிலிருந்து வெளியேற்றப்பட்டோம். இக்காலப் பகுதியில் எமது கல்லூரி ஓமந்தையில் கோவிலைச் சூழவுள்ள தெருவோரத்தில் தற்காலிக கொட்டகை அமைத்து நடத்தப் பட்டது. வாகன இறைச்சல், தூசிகள், சேறு, கழிவறைகள் இல்லாத நிலை என பல்வேறு வசதியீனங்களுக்கு முகங் கொடுத்தோம். இந்நிலையில் தான் மாணவர்களுக்கு கல்வியூட்டி வந்தோம்.

02-06-2011 அன்று எமது கல்லூரி வவுனியா மாவட்ட அரசாங்க அதிபரினால் கையேற்கப்பட்டு பாடசாலை நிர் வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டது. அதைத் தொடர்ந்து வட மாகாண ஆளுநர் சந்திரசிறி அவர்களின் முயற்சியால் ஐம்பது இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு பாடசாலை மீள புனரமைக்கப் பட்டு வருகிறது.

இந்நிலையில்தான் பாடசாலையின் நூற்றாண்டு கொண்டாட்டத்திற்குத் தயாராகின்றோம். இக்காலத்தில் இந்த விழா மலர் வெளியீடு போன்றன எமக்கு முக்கியம் ஏனெனில் இவை நமக்குள் பெரும் விழிப்புணர்வை நிச்சயம் ஏற்படுத்தும். தரமான கல்வியை வழங்கும் தரமான பாடசாலையாக எழுச்சி பெறுவதற்கு பல்வேறு தூண்டல்கள் நமக்கு முக்கியம். எனது காலத்தில் பாடசாலை நூற்றாண்டை கொண்டாடுவதையிட்டு நான் பெருமைப்படுகின்றேன்."



**நூற்றாண்டை முன்வைத்து**

**ஓர் கருத்துப் பகிர்வு...**

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் குறிப்பாக இலங்கை போன்ற நாடுகளில் கல்வியில் மொழி, மதம், இனம் என சமூக அடிப்படையிலும்; நகரம், கிராமம் போன்ற பிரதேச அடிப்படையிலும் பாரிய ஏற்றத்தாழ்வுகள் காணப்படுகின்றன. இவற்றிற்கான காரணிகளாக கல்விக்கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துதல் போன்றவற்றில் காணப்படும் திருப்தியற்ற நிலைகளென கல்வி ஆய்வாளர்களினால் கூறப்படுகின்றது. இலங்கையில் உள்ள பாடசாலைகளில் நகரப் பாடசாலைகளில் அதீத வசதிகளும், சுமார் 856 பாடசாலைகளில் நீர் வசதியற்றும் இருப்பதாக குறிப்பிடப்படுகின்றது.

அதேவேளை வடக்குக் கிழக்கில் சுமார் 80% - 90% பாடசாலைகள் இடப்பெயர்வினால் பாதிக்கப்பட்டு அவற்றில் பல பாடசாலைகள் இன்னும் வழமை நிலைக்குத் திரும்பாத நிலையில் உள்ளன. கடந்த மூன்று தசாப்த காலத்தில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் ஏற்பட்ட போராட்டங்களினால் ஏற்பட்ட அழிவுகள் பல வழிகளிலும் தமிழர் கல்விப் பாரம்பரியத்தில் பல பின்னடைவுகளை ஏற்படுத்தியுள்ளன.

கல்வியில் முன்னிலையில் இருந்த சமூகத்தில் இன்று தமிழ்மொழி பேசக்கூடிய அறிஞர்களையும், ஆற்றல்மிக்க நிர்வாகிகளையும், கல்விமான்களையும் விரைந்து உருவாக்க வேண்டிய தேவை எமது சமூகத்தின் முன்னுள்ள பாரிய பொறுப்பாகும். இது பற்றிய சுயவிமரிசனங்களும் தேடல்களும் வழிகாட்டல்களும் இன்று அவசியமாகின்றன.

மாற்றம் தேவை என்று எல்லோராலும் உணரப்பட்ட நிலையைக் காணக்கூடியதாகவுள்ளது. பல சந்தர்ப்பங்களில் மாற்றம் தேவைதான் என்ற எளிதான விழிப்புணர்வு மட்டும் மாற்றத்தை உண்டாக்குவதற்குப் போதுமானதாக கருதிவிட முடியாது. மாற்றங்களை ஏற்படுத்தக் கூடிய அறிவு மட்டும் ஒருவரிடமிருந்தால் கூட மாற்றங்களை ஏற்படுத்திவிட முடியாது. உதாரணமாக எதிர்காலத்தில் தண்ணீருக்கான தட்டுப்பாடு ஏற்படும் என்று அறிவியல் ரீதியாக முடிவுகள் எடுக்கப்பட்டு அது பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் பொறிமுறைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால் அதன் விளைவுகள் குறைவானதாகவே காணப்படுகின்றன. அதாவது நீரைப் பேணும் செயன்முறைகளுக்கு குறைந்தளவு முக்கியத்துவமே தனிமனிதர்களால் வழங்கப்படுகின்றது. அவ்வாறே மாற்றத்திற்கான அறிவை ஆசிரியர்களும் அதிபர்களும் அதிகமாகக் கொண்டிருந்த போதிலும் அறிவையும் மனப்பாங்கையும், தூரநோக்கையும் இணைத்து வழங்கும் செயன்முறைகளில் நலிவுநிலையே காணப்படுகின்றது.

ஆலயங்களும் பாடசாலைகளும் காலம்செல்லச் செல்ல புனிதமடைகின்றன. பல ஆயிரக்கணக்கான சமூக உறுப்பினர்களை உருவாக்குகின்ற பாடசாலைகள் அச்சமூகத்தால் போற்றப்பட வேண்டும். ஆனால் எமது காலப்பகுதியில் இவ்வாறான நிலைமைகள் அருகி வரு கின்றதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. இந்நிலை யில் ஒரு மீண்டெழும் சமூகமாக எமது சமூகமும் முழு வீச்சுடன் செயற்பட வேண்டியுள்ளது. அதற்கு அடிப் படையான வெற்றிகரமான பாடசாலைகளை உருவாக்கு வதில் கல்விச் சமூகத்தின் கவனக் குவிப்பு அவசியமா கின்றது.

எமக்கு அறிவும், சமநிலை ஆளுமையும், உயர் வான மாணவர் நடத்தைகளின் வெளிப்பாடுகளுடன் கூடிய பரீட்சைப் பெறுபேறுகளும், சகல மாணவர்களும் பங்குபற்றக்கூடிய இணைப் பாடவிதானச் செயற்பாடு களின் பல்வகைமையும், முறைசாராக் கல்விச் செயற் பாடுகளும், விளைதிறனும் வினைத்திறனுமுள்ள பாடசா லைக் கலாசாரமும் முகாமைத்துவ அம்சங்களும் முக்கியம். மேலும் பாடசாலை இணைந்த செயற்பாட்டில் தளரா நிலை, அபிவிருத்திக்காக பாடசாலை மீது சமூகமும் சமூகம் மீது பாடசாலையும் பரஸ்பரம் கொண்ட அக் கறையும் கரிசனையும் இணைந்த பாடசாலை நிர்வாகம்; எதிர்கால நலன்கருதிய மாணவர் நலன்கருதிய பாடசாலை வளங்கள்; அதிலும் குறிப்பாக தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக தோன்றியுள்ள தவல் தொடர்பாடல் தொழில் நுட்ப வளங்கள்; விஞ்ஞான ஆய்வு கூட வசதிகள்; மற்றும் விடுதிவசதிகள் முதலானவை ஒரு வெற்றிகரமான பாடசாலைக்கு குறிகாட்டும் அம்சங்களாகும்.

இன்று தொழில்சார் தன்மையுடைய மாற்ற முகவர் களாக அதிபர்களும் ஆசிரியர்களும் செயற்படுவதற்கு வேண்டிய பிரதான தேர்ச்சிகளை வளம்படுத்துவதற்கான இயலுமைகளைக் கட்டியெழுப்ப வேண்டியும் உள்ளது. இதற்கு மாற்று ஏற்பாடுகளும் அவசியமாகவுள்ளது. அதி லும் குறிப்பாக வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கடமை யாற்றும் அதிபர்களும், ஆசிரியர்களும் ஏனைய பணியா ளர்களும் மாணவர்களும் ஒரு போர்ச் சூழலில் இருந்து விடுபட்ட நிலையில் இங்குள்ள மாணவர்களையும் பெற்றோர்களையும் கையாளுகின்ற நுட்பமுறைகளில் வித்தியாசமான தனித்துவமான கல்விசார் மற்றும் சமூக அணுகுமுறைகள் தேவைப்படுகின்றன.

மாணவர்களும் ஆசிரியர்களும் சுதந்திரமாகக் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடக்கூடிய வகை யில் அனைத்துத் தடைகளையும் இல்லாது செய்யும் வகையில் கல்வியில் புதுமைகளை உள்வாங்கிச் செயற் பட வேண்டும். ஒவ்வொரு மாணவரும் தனது சுய ஆற் றல்களை வளர்த்துக்கொண்டு சமுதாய வளர்ச்சியில் முழு மையாகப் பங்கொடுக்கும் வகையில் அவர்கள் சுயமாகக் கற்பதற்கும், அனுபவங்களைப் பெற்று பகிர்வதற்கும் போதுமான ஊக்குவிப்புக்களை வழங்க வேண்டும். இதற்கேற்ப ஆசிரியர், மாணவர் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் அமையப் பெறுதல் வேண்டும்.

தேசிய கல்வி நோக்கங்களையும், பாடவிதான நோக் கங்களையும் வகுப்பறை கற்றல்-கற்பித்தல் நோக்கங் களாக நிலைமாற்றம் செய்வதற்கான முயற்சிகளில் அதிக சிரத்தை எடுக்க வேண்டிய நிலை தற்போது காணப்படு கின்றது. நடைமுறைச் சூழலுக்கேற்ப கல்விக் கொள்கை களையும், கல்விக் கோட்பாடுகளையும் பிரயோகிப்பதற் கான தந்திரோபாய நுட்பங்களைப் பயன்படுத்துவதில் அதிபர்களும் ஆசிரியர்களும் முனைப்பாக இயங்க வேண்டும். இதற்கான அதிக தேடல்களும் பயிற்சிகளும் பயனளிக்கும்.

கல்வி வாய்ப்பின்மைகள் வசதியீனங்கள் தொடரும் சூழ்நிலையில் மாணவர்களிடம் ஏற்படும் அதிருப்தி, சந்தேகங்கள், விரக்திகள், வெறுப்புக்கள் சமூகத்தில் எதிர்மறையான பின்விளைவுகளை தோற்றுவிக்கும். இதனை ஆய்வுகள் வெளிப்படுத்துகின்றன. பல வருடங் களாக பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வாழ்ந்த மாணவர்களின் கற்றலுக்கான சந்தர்ப்பம் வலிந்து மறுக்கப்பட்ட நிலையில் தற்போதும் தற்காலிகக் கொட் டில்களில் கற்றல்-கற்பித்தல் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. இன்று அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் மனங்களை வெற்றிகொள்ளுவதே நம் முன்னுள்ள பிரதான சவாலாக இருக்கும்.

பொதுவாக இருக்கும் வளங்களின் உதவியுடன் ஆசிரியர்களிடம் காணப்படும் அர்ப்பணிப்பு சிந்தனை களினூடாகவுமே மாணவர்களின் மனங்களை வெற்றி கொண்டு கற்றல் செயற்பாடுகளை விரிவாக்க முடியும். மனித விழுமியம், ஆன்மீகச் செயற்பாடுகள் மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளினூடு மாணவர் களை இயல்பு நிலைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

பாடசாலை என்பது முழுமையான வளங்கள் உள்ள பாடசாலையாக அமைய வேண்டும். அறிவுப் பொருளாதாரம், ஆங்கிலக்கல்வி, தொடர்பாடல் தெழில் நுட்பக்கல்வி முதலான செயற்பாடுகளை மாணவர்கள் பெறுவதற்கு ஏற்ற வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். பாடசாலை மாணவர் தங்குமிட வசதியை மேம்பாடடையச் செய்து தொடர் பயிற்சிகளை மாண வருக்கு வழங்க ஆவண செய்ய வேண்டும். உடல் உள ரீதியான உறுதிப்பாட்டை அடைய விளையாட்டுத் துறையை மேம்படச்செய்ய வேண்டும். அனர்த்தங்களால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான மீள் எழுச்சியை உருவாக்க உளநல செயற்பாடுகளை உரிய வாறு மேற்கொள்ள வேண்டும். கற்பதற்கான மகிழ்ச்சி கரமான சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

மிக விரைவில் மேற்சொன்ன விடயங்களில் பாட சாலை நிர்வாகம் அதீத அக்கறையுடன் செயற்படுவதற் கான சாதகமான நிலைமைகளை உருவாக்க வேண்டும். இதற்காக நாம் அனைவரினது உதவிகளையும் பெறவேண்டும்.

குறிப்பாக மாகாண வலயக் கல்வித்திணைக்களம், பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய

மாணவர்கள், நலன்விரும்பிகள், புலம்பெயர்ந்து வாழும் எமது மக்கள் என எல்லோரினதும் ஆலோசனையும், வழிகாட்டல்களும் உதவிகளும் எம்மை மீண்டும் சாதனை படைக்க ஊக்குவிக்கும் ஒரு கருவியாக அமைய வேண்டுமென எதிர்பார்க்கலாம். அதிலும் குறிப்பாக பெற்றோர் ஆசிரியர்களின் பங்களிப்பே பிரதான உந்து சக்தியாக அமையும்.

**பெற்றோர்கள்**

பாடசாலை - பெற்றோர்- சமூகம் என்பவற்றிற்கிடையிலான நெகிழ்சியானதும் பயனுறுதிமிக்கதுமான தொடர்பாடல் பாடசாலை - சமூக உறவைக் கட்டியெழுப்பும் ஒரு நுட்பமாகவே கருதப்படுகின்றது. பாடசாலையின் வெளியீடுகள் சமூகத்திற்கேயுரியனவாகக் காணப்பட்டாலும், அவை பற்றிய உடனடிப் பயன்பாடு பற்றிய சிந்தனை மக்களிடம் காணப்படுகின்றது. பெற்றோர்கள் பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்ப வேண்டும். வீட்டில் கற்கும் வசதிகளையும், சந்தர்ப்பங்களையும் ஏற்படுத்த வேண்டும். பாடசாலை மேம்பாட்டில் இணைந்து உதவ வேண்டும். நலன் விரும்பிகள் - இனங்காணப்பட்ட குறைபாடுகளை நிமிர்த்த ஆலோசனை, பொருளுதவி, உடலுழைப்புப் போன்றவற்றை வழங்க வேண்டும். பழைய மாணவர்கள் - கல்லூரியின் வளர்ச்சியில் சகல துறைகளிலும் உதவ முன்வரவேண்டும்.

இன்றைய பாடசாலைகளை அதிபர், ஆசிரியர் மற்றும் கல்வித்திணைக்களத்து அதிகாரிகளே நடாத்தி வருகின்றனர். இந்நிலையில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டும். அதாவது அதிபர், ஆசிரியர்கள் மற்றும் அதிகாரிகளோடு இணைந்து பெற்றோர்களும் பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் தொண்டு நிறுவனங்களும் இணைந்து பொதுநோக்கத்திற்காக பாடசாலைகளை கூட்டாக உழைத்து பாடசாலைகளை மாற்றியமைக்க முடியும். கல்வியென்பது ஒரு சமுதாய நிகழ்ச்சி. இதன் வழியே சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றைப் பெறுகின்றனர். ஆகவே பாடசாலையின் பணிகள் சமுதாயத்தின் வளர்ச்சிக்கு என்பதை ஒவ்வொரு பெற்றோரும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

**ஆசிரியர்கள்**

இன்று உலகலாவிய ரீதியிலும் எமது நாட்டிலும் பாடசாலைகளில் மூன்று முக்கிய மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன.

(1) இதுவரை ஆசிரிரை மையப்படுத்தி நடை முறைப் படுத்தி வந்த கலைத்திட்டச் செயன்முறைகள் எல்லாம் மாணவர்களை மையப்படுத்தி மாற்றி அமைக் கப்பட்டு வருகின்றது.

(2) பாடவிடயங்களையும் கருத்துக்களையும் விளங்காமல் படித்து மனனம் செய்து பரீட்சை எழுதும் நிலை மாறி மாணவர்கள் தாமாகப் புரிந்து, விளங்கி படிக்கும் வகையில் கலைத்திட்டத்திலும் பாட விதானங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றது.

(3) வகுப்பறையில் கற்கும் பாடங்கள் வாழ்க்கை அனுபவங்களுடன் தொடர்புபடுத்தப்படுகின்றது.

இம்மாற்றங்கள் சரியா ஆசிரியர்களையும் மாணவர்களையும் சென்றடைந்துள்ளதை உறுதிப்படுத்த வேண்டிய தேவையுள்ளது. வெறுமனே பாடசாலை வகுப்பறையில் ஆசிரியர்- பாடநூல் - கரும்பலகை - மாணவர் இடைவினைச் செயற்பாடுகள் மூலம் இம்மாற்றங்களை கொண்டுவர முயற்சிப்பது எதிர்பார்த்த விளைவுகளை ஏற்படுத்தாது. ஆசிரியர்களிடம் புத்தாக்க சிந்தனைகள் வெளிக்கிளம்ப வேண்டும். அவை மாணவர்களை சரியான வழியில் வழிப்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும். பாரம்பரிய கற்றல்-கற்பித்தல் செயன்முறைகளில் இருந்து நவீன செல்நெறிகளை இயன்றளவு உள்வாங்க வேண்டும். நாம் இருக்கும் வளங்களை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும்.

பொறுப்புக் கூறுதல், தனது கடமைக்கூறுகளைச் சரியாகப் புரிந்துகொள்ளுதல், எதிர்காலம் பற்றிய கரிசனை, தன் பாடசாலை பற்றிய உயர்வான சிந்தனை, கணிப்பு, அர்ப்பணிப்பு போன்றவைதான் ஒவ்வொருவரினதும் செயற்பாடுகளைத் தீர்மானிக்கின்றன. எனவே இவ்விடயங்களில் ஆசிரியர்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். பொதுவாக ஆசிரியர்கள் தமது லீவுகளைக் குறைத்துத் திட்டமிட்டு முன்னாயத்தத்துடன் மாணவர்களுக்கு உதவ வேண்டும். மாணவர்களுடன் நட்பு ரீதியாகப் பழகி அவர்களின் சகலதுறை வளர்ச்சிக்கும் பக்க பலமாக இருக்க வேண்டும். நீதியின்பால் செயற்படும் சிறந்த முன்னோடியாக இருக்க வேண்டும். மாணவர்களின் வளர்ச்சிக்காக பாடசாலையினால் திட்டமிடப்படுகின்ற விடயங்களுக்கு திறந்த மனதுடன் ஊக்கமளிக்க வேண்டும். கல்வி என்பது வெறுமனே அறிவை மட்டும் புகுத்தும் ஒரு செயற்பாடல்ல என்பது இன்று எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். இதற்கேற்ப ஒழுகவேண்டும்.

இன்று கற்பித்தலில் முக்கியமாகக் கருதப்படுவது மாணவர் மையக் கல்வியாகும். சகல பிள்ளைகளுக்கும் கற்றலுக்கு உதவிசெய்பவர் கற்றலுக்கு உகந்த சூழலை ஏற்படுத்திக் கொடுப்பவர் போன்ற பல்வேறு வகிபங்குகளை நவீன ஆசிரியர் ஏற்றுச்செயற்பட வேண்டியுள்ளது. இங்கு மாணவர் தொழிற்படும் அளவுக்கேற்ப கற்றல் நிகழும் எனக் கொள்ளலாம்.

ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் தொடர்பான மனப்பாங்குகளை விருத்தி செய்யும் முகவர்களாவர். ஆசிரியர்கள் மாணவர்களின் கற்றல் தொடர்பான ஆர்வத்தையும் சுதந்திர உணர்வுகளையும் உயர் சிந்தனையாற்றலையும விருத்தி செய்யமுடியும். ஆசிரியர்களின் பணி பல அம்சங்களைக் கொண்டது. இவர்கள் மாற்று

முகவர்களாகச் செயற்பட்டு மாணவர்களிடையே புரிந்துணர்வையும், தாங்கிக்கொள்ளும் இயல்பையும் வளர்க்க வேண்டியுள்ளது.

அறிவு மட்டத்தை உயர்த்துவது ஆசிரியரின் கடமை யன்று. மாணவப் பருவத்திலிருந்தே சமூகத் திறன்களை விருத்தி செய்வதும் அவசியம். தொடர்பாடல் திறன், பன்மொழி, அறிவு குழுவாக செயற்படும் விருப்பம், நீண்ட நேரம் எங்கும் பணியாற்ற விருப்பம், ஆற்றல் மிக்க எவரது அறிவுறுத்தலையும் ஏற்றுச் செயற்படுதல் போன்ற திறன்களை மாணவரிடம் ஆசிரியர் விருத்தி செய்ய வேண்டியது அவசியமாகும்.

மேற்படி கருத்திலிருந்து இன்றைய ஆசிரியர்கள் எவ்வாறான சவால்களை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை நாம் அறிந்துகொள்ளக் கூடியதாயுள்ளது.

மாணவர் மையக் கல்வி என்னும் போது இங்கு சில முக்கிய விடயங்களைக் நாம் கருத்திற்கொள்ள வேண்டும். அதாவது ஆசிரியரின் தொழிற்பாடுகள், மாணவர் செயற் பாடுகள், கற்றல் சூழல், கற்றல் வளங்களின் ஒழுங்கமைப்பு ஆகியவை முக்கியம். கற்றல்-கற்பித்தலுக்காக ஏற்படுத் தப்படும் சூழலின் அடிப்படையிலேயே கற்றலின் விளைவு தீர்மானிக்கப்படும். கற்றல்-கற்பித்தல் சூழலின் சிறப்பை மேம்படுத்த நவீன தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்த வேண்டும்.

கல்வியின் தேசிய நோக்கங்களை வகுப்பறை நோக் கங்களாக மாற்றும் செயற்பாடுகளில் நவீன ஆசிரியருக்கு கல்வித்தொழிநுட்பமும் தகவல் தொழிநுட்பமும் பெரிதும் கைகொடுக்கும். பொதுவாக விளைதிறன் மிக்க கற்றல் செயற்பாடுகளுக்கு சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுக் கக் கூடியவராகவும் அதனை ஒழுங்குபடுத்தி முகாமைப் படுத்தும் முகாமையாளராகவும் ஆசிரியர் தன்னை வளப் படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கு கல்வித் தொழிநுட் பம் உறுதுணையாக விளங்கும். தொலைக்காட்சி, அசையும் படங்கள், வானொலி, பதிவுநாடாக்கள், இன்ரநெற், கணினி, இறுவட்டுக்கள் போன்றவற்றின் உதவியுடன் வெளிச்சூழலையும் வெளிஉலகையும் மிக எளிதில் வகுப்பறைக்குள் கொண்டுவர முடியும்.


மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையில் செயலை அடிப்படையாகக் கொண்ட கற்றல் மூலம் நடத்தையில் மாற்றங்களை உண்டாக்கலாம். இது தொடர்பாக பல்வேறு சவால்களை ஆசிரிய சமுதாயம் வெற்றிகொள்ள வேண் டும். அதற்கான முன் முயற்சிகளையும் ஏற்பாடுகளையும் ஆசிரியதிறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் விரைவு படுத்த வேண்டும். ஆசிரியர்கள் மாற்றத்திற்கு தயக்கம் காட்டுவதை வெற்றிக்கொள்ள வேண்டும். அதற்கான முன்முயற்சிகளையும் மாற்று ஏற்பாடுகளையும் ஆசிரிய திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்கள் மேற்கொள்ள வேண்டும். இதற்கு

- மாற்றம் தேவை என்ற விழிப்புணர்வு.
- மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான திறனும் பயிற்சியும்.
- நேர்வகையான மாற்ற முனைப்புகளுக்கான ஆதரவு.
- தவறுகளிலிருந்தும் கற்பதற்குச் சந்தர்ப்பம் வழங்குதல்.
- மற்றவர்களிடமிருந்து கற்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- நவீன தொடர்பு சாதனங்கள் பற்றிய அறிவைப் பெற முதலில் ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம் வழங்குதல்.
- நவீன செல்நெறிகளுக்கேற்ப புதிய ஆசிரிய கல்வியில் புதிய அணுகுமுறைகளைத் தோற்றுவித்தல்.
- எல்லாவற்றிற்கும் மேலாக ஆசிரியரின் தனித்துவப் பண்புகளை முதன்மைப்படுத்தக் கூடிய ஏற்பாடுக ளுக்கு முன்னுரிமை வழங்கி பண்புசார் ரீதியான அம்சங்களை வளர்த்தெடுக்கும் எண்ணங்களை ஊக்குவித்தல்.

இது போன்ற அம்சங்களில் கல்விப்பரப்பிலுள்ள அறிஞர்கள் கல்வியைத் திட்டமிடுவோர் கல்வியிய லாளர்கள் முன்வர வேண்டும். அதேவேளை அதிபர் களும் இவ்விடயத்தில் தம்மாலான ஒத்துழைப்பை ஆசிரி யருக்கு நல்க வேண்டும்.மேலும் அதிபர் மற்றும் ஆசிரி யர்கள் யாவரும் இணைந்து கூட்டாக இயங்கும் பண் பாட்டை வளர்க்க வேண்டும்.

ஆசிரியருக்கு கற்பிப்பதற்கான முழுப்பாதுகாப்பு தேவையானதும் உரித்தானதும் ஆகும். அதேவேளை மாணவருக்கு கற்கும் சுதந்திரமும் உத்தரவாதப்படுத்தப் படல் வேண்டும். இதுவே ஜனநாயகத்தின் அடிப்படை யாகும். இது ஆசிரியரின் புலமை, தொழில் திறமை என்பவற்றைக் கருத்தில்கொள்ளும் விடயமாகும்.

நிறைவாக தமிழர் கல்விச் சமூகத்திற்கு எதிர்கால நன்மை கருதி ஒவ்வொருவரினதும் தூய சிந்தனையுட னான சுயநலமற்ற உழைப்பினை நல்கி சர்வதேச மட்டத் தில் ஜனநாயக முறையில் உயர்ந்து நிற்க உதவவேண்டும். இதற்கு கல்வியொன்றே நம்முன்னுள்ள ஒரே திறவு கோள். அறிவை வழங்குவது இலகுவான வழியாக இருப்பினும் மனப்பாங்குகளில் மாற்றங்களையும் விருத்தியையும் ஏற்படுத்தி அதனூடாக வாழ்க்கை நெறி முறைகளையும் வாழ்வியல் விழுமியங்களையும் கடைப் பிடித்து வாழப் பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். இது பற்றி ஒவ்வொரு தமிழ் பேசும் மக்களும் அவர்கள் எத்திசையில் எந்நாட்டில் வாழந்தாலும் தமிழர் கல்விப் பாரம்பரியம் பற்றிச் சிந்தித்து செயலாற்ற வேண்டும். இதுவே நூற்றாண்டு காணும் பாடசாலைக்கான செய்தி யுமாகும்.




மா.கருணாநிதி

# ஆரம்ப வகுப்பு ஆசிரியரின் கற்பித்தல் பாங்குகள்

*"ஓர் ஆசிரியர் சாத்தியமற்ற பணியிலக்கு ஒன்றிற்காக தன்னை அர்ப்பணிக்க வேண்டியவராகின்றார்... மாணவராலும் பெற்றோராலும் சமூகத்தாலும் அரசினாலும் சுமத்தப்பட்டுள்ள சிக்கலான தேவைகளை திருப்திப்படுத்த முற்படுதல் ஆசிரியரின் சிந்தனைக்கும் செயலுக்கும் அப்பாற்படுகிறது. அத்தகைய தேவைகள் தீர்க்கப்படக் கூடியவை அல்லது நெகிழ்ச்சியானவையாக இருந்தாலும் அவற்றை அடைந்து கொள்வதற்கு நீண்டகாலம் எடுக்கும். சில தேவைகளை அடைந்துகொள்ள முயற்சிகள் எடுக்கப்படுவதற்கு முன்னரே சமூக மாற்றம் காரணமாக தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாத நிலை ஏற்பட்டுவிடும். இவற்றிக்கு மத்தியிலும் ஆசிரியர் தொழில்வழியே பெற்றுக்கொள்ளும் திருப்தி அளவற்றது. அளவுகடந்த மகிழ்ச்சியை ஏனைய தொழில்கள் வாயிலாகப் பெற்றுக்கொள்ள முடியாது. பிள்ளைகள் புதிய விடயங்களைக் கற்றல், அவர்களுடைய தேவைகளை நிறைவுசெய்தல், பிள்ளைகளின் ஆர்வம் மற்றும் ஈடுபாடு என்பவற்றைப் பார்க்கின்ற பொழுது ஆசிரியர் அடைந்து கொள்கின்ற மகிழ்ச்சியைப் போல ஏனைய தொழில்களில் காணமுடியாது."*

(ஏக்லெஸ்ரன் 1992)



மேற்கூறிய வாசகத்திலிருந்து ஆசிரியர் தொழிலின் இயல்பு சிக்கலானது. எனினும் அத்தொழிலில் அர்ப்பணிப்புடன் ஈடுபடும்பொழுது கிடைக்கும் மகிழ்ச்சி எல்லையற்றது என்பது வெளிப்படையானது. பிள்ளைகளின் எதிர்காலக் கல்விசார்ந்த முன்னேற்றங்களுக்கு ஆரம்பக்கல்வி அடித்தளம் என்பதனை நாம் எல்லோரும் அறிந்திருந்தும் அவ்வகுப்புகளில் கற்பித்தலில் ஈடுபடுதல் மதிப்பைக் குறைக்கும் என ஆசிரியர்கள் பலர் கருதுகின்றனர். இந்தக் கருத்துத் தவறானது மட்டுமன்றி ஆசிரியர் தொழிலுக்கே இழுக்கானது என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். ஆரம்ப வகுப்புகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் மாணவரின் பிற்கால வளர்ச்சியைத் தீர்மானிப்பதில் முக்கியப் பொறுப்பை ஏற்கின்றனர். சமகால ஆரம்ப வகுப்புக் கற்பித்தல் மற்றும் கற்றலில் துரித மாற்றங்கள் இடம்பெறும் பொழுது ஆரம்ப வகுப்பு ஆசிரியர் மத்தியில் பல தடுமாற்றங்கள் ஏற்படுகின்றன.

அவர்கள் தமது கற்பித்தலை நிதானமாக முன்னெடுப்பதற்கு கவனத்தில் கொள்ளக்கூடிய சில வழி முறைகள் அவர்கள் உயர்தொழில்சார் திறன்களைச் சரிவரப்பெற்று கற்பித்தல் பணிகளில் ஈடுபடுதல் வேண்டும் என்பதற்கான கருத்துகள் முதலானவற்றை இக்கட்டுரை எடுத்துக் காட்டுகின்றது.

**ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் பாங்குகள் ஆளுக்காள் வேறுபடுவதை நாம் அவதானிக்கலாம். அவர் கற்பித்தலை ஆரம்பிக்கின்ற பொழுதே தமக்கென ஒரு பாங்கினை உருவாக்க முற்படுகிறார்.**

ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தலில் ஈடுபடுகின்ற ஆசிரியர்கள் பெற்றிருக்க வேண்டிய திறன்கள் பல உள்ளன.

- பிள்ளைகள் ஒவ்வொருவரினதும் ஆற்றல்களைக் கண்டறிதல்.
- பிள்ளைகளிடத்தில் காணப்படும் எதிர்மறையான எதிர்பார்ப்புகளைத் தவிர்த்தலுடன் முக்கியமாக சமூக பொருளாதார மற்றும் பால்நிலையின் அடிப்படையில் வேறுபாடுகள் காட்டக்கூடாது.
- பிள்ளைகள் ஏற்கெனவே கொண்டிருக்கும் ஆற்றல்களிலிருந்து மேலும் ஆற்றலைக் கட்டியெழுப்புதல். அவர்களிடம் ஏற்கெனவேயுள்ள ஆற்றல்கள் எவையும் பயனற்றவையெனக் கருதக்கூடாது.
- பிள்ளைகள் மத்தியில் வேறுபாடுகளை உருவாக்குதல். அவ்வேறுபாடுகளை மேலும் விரிவாக்குதல். இவை பிள்ளைகளின் எதிர்காலத்தினையும் எதிர்காலச் சமூக அமைப்பினையும் தீர்மானித்து விடுகின்றன என்பதால் அவற்றின்மீது அவதானமாகச் செயற்படுதல்.

**கற்பித்தல் பாங்கு**

ஆரம்ப வகுப்புகளில் கற்பிக்கின்ற ஆசிரியர்களின் பாங்குகள் ஆளுக்காள் வேறுபடுவதை நாம் அவதானிக்கலாம். அவர் கற்பித்தலை ஆரம்பிக்கின்ற பொழுதே தமக்கென ஒரு பாங்கினை உருவாக்க முற்படுகிறார். அப்பாங்கானது அவர் ஏற்கெனவே அவதானித்த ஓர் ஆசிரியரின் பாங்காக இருக்கலாம் அல்லது மாணவராக இருந்த காலத்தில் பெற்றுக்கொண்ட பயிற்சியின் செல்வாக்காக இருக்கலாம் அல்லது அனுபவ முதிர்ச்சியினால் தாமாகவே மாற்றிக்கொண்ட பாங்காக இருக்கலாம். எவ்வாறாக இருந்தாலும் ஓர் ஆசிரியர் விருத்திசெய்கின்ற கற்பித்தல் பாங்கானது அவருடைய ஆளுமையின் பகுதியாக மாறிவிடுகின்றது. ஒருவருடைய கற்பித்தல் பாங்கு என்பது ஆளுமை, அனுபவம் கோட்பாடு, பெறுமானங்கள், அவர் பணியில் ஈடுபடும் சூழமைவு முதலிய காரணிகளின் செல்வாக்குக்கு உள்ளாகின்றது.

ஆசிரியர்கள் பலர் ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தல் பற்றிய பல்வேறு கருத்துகளுடன் கூடியவர்களாக இருப்பதால் ஆரம்ப வகுப்புக் கற்பித்தல் முறைகளைப் பின்பற்றும் பொழுது அவர்களுடைய கற்பித்தல் முறைகள் பாதிப்புக்குள்ளாகின்றன. இவ்விடயத்தில் அந்த ஆசிரியர் பணியாற்றும் பாடசாலையின் செல்வாக்கும் கவனத்திற்குரியது. பாடசாலை முகாமைத்துவமும் ஏனைய ஆசிரியர்களும் மாணவரும் முறைசார் எதிர்பார்புகளுக்கு அமையப் பணியாற்ற வேண்டுமென எதிர்பார்க்கும் பொழுது, அவற்றினின்றும் விலகிச் செயற்பட ஒருவர் விரும்புகின்ற பொழுது பல தடைகள் தோன்றலாம். ஓர் ஆசிரியர் வகுப்பில் எவ்வாறு நேரத்தை முகாமைத்துவம் செய்கின்றார், கற்பித்தலின்போது எத்தகைய பொருட்களை வழங்குகின்றார் பயன்படுத்துகின்றார் மற்றும் மாணவர்மீது கடைப்பிடிக்கும் நெகிழ்ச்சிப்போக்கு, வகுப்பறை வேலைகளை ஒழுங்கமைக்கும் விதம், ஆசிரியருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான ஊடாட்டம், தொடர்பாடல், பிள்ளைகளுக்கு வழங்கும் சுதந்திரம் போன்றவை ஆசிரியரின் பாங்கினை எடுத்துக் காட்டுகின்றன. இத்தகைய விடயங்களில் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்களாக இருந்தாலும் அரம்ப வகுப்பாசிரியர்கள் ஒவ்வொருவரும் இவ்வாறான விடயங்களில் அவதானம் செலுத்த வேண்டியது அத்தியாவசியமானது.

ஆரப்ப வகுப்புகளில் எவ்வாறு கற்பித்தல் வேண்டும் என்பது பற்றிய பல ஆராய்ச்சிகள் உள்ளன. ***வகுப்பறையில் முறைசார் கற்பித்தலில் ஈடுபடும்பொழுது, பெரும்பாலான மாணவர்கள் தாம்செய்ய வேண்டிய விடயங்களில் ஈடுபட்டிருந்த வேளையில் குறைந்த அடைவுகளை வெளிப்படுத்தும் பிள்ளைகள் பெரும்பாலும் முறையில் கற்றலில் அவதானம் செலுத்தினர்.*** இங்கு பிள்ளைகளின் கற்றல் தொடர்பான மூன்று விடயங்கள் அவதானத்துக்குள்ளாயின. ஆசிரியர்கள் சிலர் தனிப்பட்ட கற்றலில் அவதானம் செலுத்தினர். சிலர் குழுச்செயற்பாடுகளில் கவனஞ் செலுத்தினர். சிலர் விசாரணைகளில் ஈடுபட்டனர். ஆசிரியர்கள் சிலர் கலப்பு முறைகளை பின்பற்றித் தமது பாங்குகளை மாற்றினர். ஆயினும் முறைசார் கற்பித்தல் பாங்கினைப் பின்பற்றியோருக்கும் முறையில் கற்பித்தல் பாங்கினைப் பின்பற்றியோருக்கும் இடையில் வேறுபாடுகள் நிலவின. முறைசார் பாங்கினைப் பின்பற்றியோரின் விளைவுகள் உயர்வாக இருந்தனவென ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

**ஆரம்ப வகுப்புகளில் கற்றல்**

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்தலில் காட்டும் அக்கறை போலவே அவர்கள் கற்கின்ற முறைகளிலும் அவதானமும் அக்கறையும் செலுத்துதல் முக்கியமானது. ஒரு பிள்ளை கற்கும்பொழுது அப்பிள்ளையின் அணுகுமுறைகள் எவ்வாறு அமைகிறது என்பதனை எடுத்துக்காட்டுவது கற்றல்முறை எனப்படுகிறது. பிள்ளையின் அறிகையாற்றல் செயல்முறைகளுக்கும்

ஆளுமைக்கும் ஏற்ற வகையில் கற்றல் முறையில் மாற்றங்கள் உண்டாகலாம். ஆரம்ப வகுப்புகளிலே கற்கின்ற மாணவர்களில் 40 சதவீதமானவர்கள் சொல்சார் கற்றலிலும் பார்க்க காட்சிசார் கற்றலிலேயே ஈடுபடுவதாக ஆய்வு குறிப்பிடுகின்றது. ஆரம்ப வகுப்பு ஆசிரியர் என்ற வகையில் மாணவர் ஈடுபாடு காட்டும் செயற்பாடுகள் எவ்வாறானவை, அச்செயற்பாடுகளின் விளைவுகள் எத்தன்மையினவென அறிந்து கற்றலைக் கையாள வேண்டும்.

பொதுவாக பிள்ளைகள் நான்கு வகையான கற்றல் முறைகளில் ஈடுபடுவதை அவதானிக்கலாம்.

- பிள்ளைகளில் சிலர் ஆசிரியரின் கவனத்தை ஈர்க்கும் வகையில் செயற்படுகின்றனர்.
- சிலர் எவ்வித இடைத்தாக்கங்களுமின்றிச் செயற்படுவர். இவ்வாறான பிள்ளைகள் சில சமயங்களில் ஆசிரியரின் கவனத்தை திசைதிருப்புபவர்களாக இருக்கலாம்.
- பிள்ளைகள் சிலர் ஆசிரியரின் கவனத்தை ஈர்க்காமல் இருக்கலாம். இத்தகையோர் ஏனைய பிள்ளைகளுடன் இடைத்தாக்கமின்றியும் இருப்பார்கள். வகுப்பறையில் இடம்பெறுகின்ற கலந்துரையாடலில் பங்கேற்காமலும் ஒதுங்கியிருப்பர்.
- அமைதியான முறையில் கற்றல் கற்பித்தலுக்கு ஒத்துழைப்பு வழங்கும் குழுக்களுடனும் இடைத்தாக்கங்களில் ஈடுபடுவர்.

பிள்ளைகள் தொடர்பாக மேலே கூறிய பண்புகளை அறிந்து அவர்களுடைய கற்றலை வசதிப்படுத்துதல் ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது. பிள்ளைகளின் கற்றல் மற்றும் கற்பித்தல் பாங்குகளை இனங்காண்கின்ற வேளையில் ஆரம்பவகுப்பு ஆசிரியர்கள் தமக்கெனத் தனியான முறைகளை உருவாக்கிக் கொள்ளுதலும் முக்கியமானது. ஒரு சிறப்பான முறையைக் கண்டுபிடித்தல் அவசியமென்பது இங்கு வலியுறுத்தப்படுகிறது. இது ஆசிரியரின் ஆளுமை, அனுபவம், கற்பித்தல் கோட்பாடுகள் பற்றிய தெளிவு, தீர்மானம் மேற்கொள்ளும் ஆற்றல் ஆகிய பண்புகளில் தங்கியுள்ளது. பிள்ளைகளுக்கு ஆசிரியரால் வழங்கப்படும் வெவ்வேறு வகைப்பட்ட செயற்பாடுகள், அச்செயற்பாடுகளில் மாணவரின் ஈடுபாடு என்பன ஆசிரியரின் தனித்தன்மையைப் பொறுத்தது. எமது பாடசாலைகளைப் பொறுத்தவரையில் கலைத்திட்டத்தைத் திட்டமிடுவோர் தாம் திட்டமிட்டவற்றை நடை முறைப்படுத்தும் வழிமுறைகளையும் கூறுவதால் அவற்றினின்றும் விலகிச் செல்வதற்கு ஆசிரியர்கள் முற்படுவதில்லை. மேற்பார்வை நிகழ்ச்சித்திட்டங்கள் உள்ளதை உள்ளவாறே செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டில் இருப்பதனால் தனித்தன்மையுடன் செயற்படுகின்ற ஆசிரியர்களும் அவற்றை வெளிப்படுத்த விருப்பம் காட்டுவதில்லை. இவை ஆசிரியரின் ஆளுமை ஆற்றல் மற்றும் ஆக்கத்திறன் விருத்திக்குப் பெருந்தடையாக இருக்கின்றன. ஆயினும், பெரும்பாலான ஆசிரியர்கள் கட்டுப்படுத்தப்பட்ட முறையிலேயே செயற்படுகின்றமை பிள்ளைகளின் ஆற்றல் விருத்தியில் வேறுபாடுகளை வெளிக்கொணர இடமளிப்பதில்லை. ஆயினும் ஆசிரியர்கள் தமக்கென்ற தனிப்பாங்கினை உருவாக்குதல் அத்தியாவசியமானது.

பொதுவாக ஓர் ஆசிரியரின் கற்பித்தலின் வெற்றி அவர் கற்பிக்கும் விடயங்களை முன்கூட்டியே திட்டமிடுவதில் தங்கியுள்ளது என்பது அனைவரும் நன்கு அறிந்த விடயம். வகுப்பறையின் தேவைகளுக்கும் செயற்பாடுகளுக்கும் ஏற்றவகையில் ஏற்கெனவே திட்டமிட்டவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டிய தேவையும் எழலாம். இத்தருணத்தில் ஆசிரியரின் நெகிழ்ச்சிப்போக்கு, பிள்ளைகளின் தேவைகளுக்கேற்ப செயற்பாடுகளை மாற்றுதல், பிள்ளைகளுடன் மகிழ்ச்சியுடன் செயற்படுதல், அவர்களை மகிழ்வூட்டுதல், ஆச்சரியப்படக்கூடிய வகையில் ஆர்வத்தைத் தூண்டுதல் என்னும் விடயங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டும். ஏனெனில் ஆரம்ப வகுப்புப் பிள்ளைகள் தகவல்களிலும் பார்க்க செயற்பாடுகளுடன் கூடிய கற்றலிலேயே நாட்டமுள்ளவர்கள் என்பதால் கற்றலில் விருப்பமும் ஆர்வமும் இணைக்கப்படுதல் வேண்டும்.

ஆரம்ப வகுப்புகளிலே சிறப்பான கற்றலை விருத்தி செய்யும் இன்னொரு வழிமுறையாக போட்டிச் சூழலை உருவாக்குவதும் அச்சூழலில் ஒற்றுமையுடன் செயற்படுமாறு பணித்தலும் அவசியமானது. பிள்ளைகள் இயல்பிலேயே போட்டி மனப்பான்மையுடன் கூடியவர்கள். வகுப்பறையில் போட்டித்தன்மையை உருவாக்கும்போது அதற்கான சூழமைவினையும் கவனத்தில் கொள்ளும் போதே பிள்ளைகள் வளம்பெற முடியும். வகுப்பறையில் போட்டிச் சூழலை எதிர்கொள்ள முடியாத பிள்ளைகள் உற்சாகம் இழக்கலாம் என்பதால் போட்டிச் சூழலில் சமநிலை பேணுதல் வேண்டும். சில பிள்ளைகளுக்கு முதன்மை கொடுத்தல், சில பிள்ளைகளைத் தவிர்த்தல், வெகுமதி வழங்குவதில் பக்கச் சார்பாக நடந்துகொள்ளுதல் போன்ற நடைமுறைகள் ஆரம்ப வகுப்புப் பிள்ளைகளில் எதிர்மறையான சிந்தனைகளை ஆழப் பதித்துவிடும் என்பதால் போட்டிச் சூழலை எதிர்கொள்ளக்கூடிய சமநிலையான அணுகுமுறைகளையும் பயிற்சியையும் வழங்குதல் வேண்டும். இவ்விடத்தில் ஆசிரியரின் மனப்பாங்கு முக்கியத்துவம் பெறுகின்றது. ஆர்வமுள்ள ஆசிரியர் வகுப்பிலுள்ள பிள்ளைகளுக்கு தூண்டுதலளிக்கும் செயற்பாடுகளை வழங்குவார். செயற்பாடுகள் நன்கு ஒழுங்கமைக்கப்பட்டிருந்தால் பிள்ளைகளும் உற்சாகத்துடன் செயற்பாடுகளில் ஈடுபாடு காட்டுவர்.

கற்பித்தல் பயனுள்ள வகையில் அமைவதற்கு ஆசிரியரின் அவதானம், திட்டமிடல் கற்கும் சூழலை ஒழுங்குபடுத்துதல், பிள்ளைகளின் வினையாற்றலை கண்காணித்தல் மற்றும் கணிப்பிடுதல் அவை தொடர்பான பதிவுகளை திருப்திகரமான முறையில் மேற்கொள்ளுதல் முதலிய விடயங்களிலும் கவனமெடுத்தல் வேண்டும்.




**ஆரம்ப வகுப்பு ஆசிரியருக்குத் தேவையான அறிவும் திறனும்**

ஆரம்ப வகுப்புகளிலே சிறந்த முறையில் செயற்பட விரும்பும் ஆசிரியர்கள் முதலில் சுய அறிவினை விருத்தி செய்தல் அவசியமானது. ஆசிரியர் தம்மிடம் காணப்படு கின்ற பலம் மற்றும் பலவீனங்களை அறியும்பொழுது சிறந்த முறையில் பணியாற்ற முடியும். தம்மில் காணப் படும் குறைபாடுகளை வெற்றிகொள்வதற்கான வழி முறைகளைத் தேடியறிதல் வேண்டும். கற்பிக்கின்ற பாடவிடயங்களில் பரந்த, ஆழமான மற்றும் தெளிவான அறிவு இருத்தல் முக்கியமானது. இவ்விடத்தில் எண்ணக் கருக்கள் மற்றும் செயல்முறைகள் மட்டுமன்றி கற்பித்த லியலிலும் அறிவு இருத்தல் வேண்டும்.

ஆசிரியர்கள் பிள்ளைகளை நன்கு அறிந்தவராக இருத்தல் வேண்டும். பிள்ளைகள் எவ்வாறு கற்கின்றனர், பிள்ளைகளைத் தனியாகவும் கூட்டாகவும் எவ்வாறு ஊக்கவிக்கலாம், சில சமயங்களில் பிள்ளைகளின் குடும்ப மற்றும் சமூக பொருளாதாரப் பின்னணி, ஆளுமை மற்றும் கற்றல் பாங்குகளை அறிந்திருத்தல் பயனுள்ள தாக இருக்கும். மேலும் பிள்ளைகள் பெற்றுள்ள அனு பவங்களின் இயல்பு, அவர்களுடைய அபிவிருத்தி நிலை, விசேட ஆற்றல் ஆகியவற்றை அறிந்திருத்தலும் நன்மை பயக்கும். ஆசிரியர்கள் சிலர் கற்றலின் விளைதிறனுள்ள பகுதிகளுக்கு போதியளவில் முக்கியத்துவம் கொடுப் பதில்லை. பிள்ளைகள் வெறுமனே அறிவுசார்ந்த விட யங்களைக் கற்கின்றனரே தவிர தூண்டுதலளிக்கும் விடயங்கள், சவாலுக்குரிய விடயங்கள், கற்கும் விடயங் களைப் புலக்காட்சிபெறும் தன்மை, கவனஞ் செலுத்துதல் முதலிய விடயங்களில் அக்கறை காட்டு வதில்லை. ஆசிரியர்கள் மேலே எடுத்துக்காட்டப்படும் விடயங்களில் கவனஞ் செலுத்துபவராக இருந்தால் பிள்ளைகள் கற்றலில் ஆர்வமுள்ளவராகவும் சமநிலை விருத்திக்கு உட்படுபவர்களாகவும் கற்றலுக்கு ஆயத்த மாகவும் காணப்படுவர். ஆரம்ப வகுப்புகளில் பிள்ளை களின் இயல்புக்கேற்ப இவை இடம்பெறும்பொழுது இசைவாக்கமுள்ள வளர்ச்சியும் இடம்பெறும்.

இளம்பிள்ளைகளை அளவுக்கு அதிகமாக விமர் சித்தல், பிள்ளைகளைக் குறைகூறுதல் மற்றும் பயனற்ற வார்த்தைகளைப் பிரயோகித்தல் வெற்றி தருவதில்லை. மறுபுறத்தில், கட்டாயம் விருத்திசெய்யப்பட வேண்டு மெனக் கருதும் விடயங்களுக்கு உடன்பாடான பின் னூட்டலை பக்கச்சார்பின்றி வழங்கி மாணவர் நடத்தை யில் உடன்பாடான மாற்றங்களைக் கொண்டுவரலாம். மேலும் கற்ற விடயங்கள் பற்றி உடனடியாகப் பேசும் பொழுது, பொருத்தமான முறையில் வாழ்க்கை அனு பவங்களுடன் இணைத்துப் பயன்படுத்தும் பொழுது, கற்றல் மேம்படும். இவ்விடயத்தில் பிள்ளைகள் குழுக்க ளாகச் செயற்படுவதை அல்லது குழுக்களாகக் கலந்துரை யாடுவதை ஊக்கவிக்கலாம். முன்னைய அனுபவங்களை யும் இணைத்து விளக்கலாம். பிள்ளைகளுடைய அனு பவங்கள் வளர்ந்தோரது அனுபவங்கள்போல இல்லை யென்றாலும் அவர்களுடைய அனுபவங்களிலும் பொரு ளுண்டு எனக்கருதி அவற்றைக் கற்றல் கற்பித்தலுடன் இணைக்க முற்படுதல் நன்மை தரும்.

வகுப்றையில் கற்கும் சூழல் சிறப்பாக ஒழுங்கு செய்யப்படுதல் முக்கியமாகக் கற்கும் சூழலை உரு வாக்குதல் பயன்தரும். ஆரம்பக் கல்விக்கான கலைத்திட்டத்தில் கூறப்பட்டவற்றைச் செயற்படுத்த முற்பட்டாலும் பிள்ளைகளின் தேவைகள் விசேட ஆற்றல்கள், ஒழுக்கக் கட்டுப்பாடுகள், உருவாக்கப்ட்ட சூழலை சரிவரப் பயன்படுத்துவதற்குப் பிள்ளைகளைப் பயிற்றுவித்தல் மற்றும் கற்றல் கற்பித்தலின்போது பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்த்தல் போன்ற விடயங்களிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.




கற்றல் என்பது பிள்ளைகளில் மாற்றங்களை ஏற்படுத்துதல் எனக் கூறுகையில், பிள்ளைகளின் நடத்தை மாற்றம் பற்றியும் அதிகளவில் கவனம் கொள்ளுதல் அவசியமானது. நோக்கங்களைத் தெளிவாக வரையறைசெய்து, அதனடிப்படையில் கற்பித்தல் இடம் பெறுமானால், பிள்ளைகளின் உடன் பாடான நடத்தைகளை வலியுறுத்தும் வகையில் செயற்பாடுகளும் இடம் பெறும். கற்றலுக்கான காலம் நீடிக் கையில் பிள்ளைகளின் ஆர்வமும் மகிழ்ச்சியும் குறைந்து செல்லும். வகுப்பில் குழப்பங்கள் தலையெடுக்கும். ஆசிரியர்கள் பின்ளைகளின் தவறான நடத்தைகளை கண்டுங் காணாமல் விடுவதால் வகுப்பறைச் சூழல் சாதக மற்றதாக மாறலாம். பிள்ளைகளின் கவனத்தை ஈர்க்கும் வகையில் மீளவலியுறுத்தலைப் பிரயோகித்து நடத்தைகளைச் சாதகமான முறையில் சீராக்கம் செய்ய வேண்டும்.

ஆரம்ப வகுப்புகளில் தொடர்பாடல் திறன்களில் கவனம் செலுத்த வேண்டும். ஆசிரியரின் பாட விடயங்களை பயனுள்ளமுறையில் எடுத்துக்கூறும் திறன், விளக்கமளிக்கும் திறன், கலந்துரையாடலுக்கு இட்டுச் செல்லும் விதத்தில் வினாக்களைத் தொடுக்கும் திறன், பிள்ளைகள் கூறுபவற்றைச் செவிமடுக்கும் திறன், பிரச்சினைகளை ஆய்ந்தறியுந் திறன் முதலியன கற்பித்தலை மேம்படுத்தும்.

சமகாலப் பாடசாலைச் சூழமைவில் ஆசிரியரும் பிள்ளைகளும் பலவகைப்பட்ட அழுத்தங்களை எதிர் நோக்குகின்றனர்.

- தமது வேலைகளில் உடன்பாடற்ற மனப்பாங்கும் ஊக்கமும் குறைந்த பிள்ளைகள்.
- கட்டுப்பாடின்றி தம்மையும் மற்றவரையும் தவறாக நடத்தும் பிள்ளைகள்.
- கலைத்திட்டத்தில் அடிக்கடி ஏற்படும் மாற்றங்களால் உண்டாகும் விளக்கங் குறைந்த தன்மையும் ஒழுங்கமைப்புத் தேவைகளும் பிரச்சினைகளும்.
- பொருத்தமற்ற வேலைச்சூழல் வசதிகளும் வளங்களும் போதியளவில் இல்லாமை.
- நேர அழுத்தமும் வேலைச் சுமையும்.
- உடன் பணிபுரிவோருடன் உள்ள முரண்பாடுகள்.
- உணர்வுகளைப் புரிந்துகொள்ளாத சமூகம்.

விளைதிறனுள்ள கற்றலுக்கு மேலே எடுத்துக்காட்டப்பட்டுள்ள தடைகள் நீக்கப்படுதல் வேண்டும். ஆரம்ப வகுப்புகளில் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர்கள் பிள்ளைகளின் கற்றலுக்கு உதவக்கூடிய விதத்தில் தமது தொழில்சார் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்குகளை விருத்திசெய்து அவற்றை நடைமுறையில் பிரயோகித்து வெற்றிகரமான பயனுள்ள ஆசிரியர்களாக மாறுதல் சிறந்த எதிர்கால சந்ததியினரை உருவாக்குவதற்கு உதவும். கற்பித்தலைச் சிறு வயதிலிருந்தே விடயங்களைத் திணிக்கும் செயற்பாடாக இல்லாமல் பிள்ளைகள் சிந்தனை மற்றும் செயல்களைத் தூண்டும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் வழிமுறையாக அமையச்செய்வது ஆரம்ப வகுப்பு ஆசிரியர்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.



கி.புண்ணியமூர்த்தி

# முன்பாடசாலைகளுக்கான கலைத்திட்டம் : கவனத்தில் கொள்ள வேண்டியவை

பா லர் பாடசாலை, குழந்தைப் பாடசாலை, முன்பள்ளி, மொண்டிசோரி எனப் பல பெயர்களால் அழைக்கப்படும் முன்பாடசாலைகளின் கலைத்திட்டம் தொடர்பான சர்ச்சைகளும் விமரிசனங்களும் கல்வியியலாளர்களால் தொடர்ந்தும் எழுப்பப்படுவதாக உள்ளது.

இலங்கையில் 16318 முன் பாடசாலைகள் இயங்குகின்றன. இவற்றில் வருடமொன்றிற்குச் சராசரி 2,50,000 மாணவர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். அத்துடன் நாடு முழுவதிலுமுள்ள முன்பாடசாலைகளில் 27,408 ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர். இலங்கையில் மாகாண சபைகளே முன்பாடசாலைகளை வழிநடாத்துகின்றன. சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சு ஆலோசனைகளையே வழங்குகின்றது. ஆனால் முன்பாடசாலை ஆசிரியர் பயிற்சிக்காகத் தேசிய மட்டத்திலான பாடநெறிகள் உள்ளன.



இலங்கையில் முன்பாடசாலைக் கல்வி பல்வேறு அமைப்புக்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. முன்பாடசாலைக் கல்வியை நடைமுறைப்படுத்தும் ஒவ்வொரு நிறுவனமும் வெவ்வேறுபட்ட கலைத் திட்டத்தைப் பின்பற்றி வருகின்றன. அவற்றை ஒழுங்குபடுத்தி ஒரு பொதுவான கலைத்திட்டத்தை உருவாக்குவது இன்றைய அடிப்படைத் தேவையாக உள்ளது.

இலங்கையில் முன்பாடசாலைக் கலைத்திட்ட ஒழுங்கமைப்பு அவசியமாவதற்கான முக்கிய காரணங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- இலங்கையில் பல்வேறு நிறுவனங்கள் முன்பாடசாலைக் கல்வி தொடர்பான பயிற்சிகளை வழங்குகின்றன. அவை வெவ்வேறுபட்ட கலைத்திட்டங்களைப் பின்பற்றுகின்றன.
- முன்பாடசாலைக் கல்வி தொடர்பான பயிற்சியளிப்பவர்களுக்கு முன்பாடசாலைகள் தொடர்பான அனுபவங்கள் குறைவாகவே காணப்படுகிறது.
- பயிற்சி வழங்கப்படும் காலம் மிகவும் குறைவானதாகவேயுள்ளது.

- தரம் 8 வரை கற்றவர்களும் முன் பாடசாலைக் கல்வி தொடர்பான பயிற்சியே பெறாதவர்களும் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.
- கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் போதுமானளவு தர உள்ளீடுகள் பயன்படுத்தப்படுவதில்லை. படங்கள், பாடப்புத்தகம், கதைப்புத்தகம், எழுத்து,சொல் அட்டைகள், நிறக்கட்டிகள், பென்சில், கரும்பலகை போன்றவையே பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன.
- இலங்கையில் முன்பாடசாலை தொடர்பான எந்தவொரு சட்டரீதியான ஒழுங்கு முறைகளும் இல்லாத காரணத்தால் முன்பாடசாலை ஆசிரியைகள் தாம் கற்ற கலைத்திட்டத்தை மாணவர்களில் திணிக்கவே முயற்சிக்கின்றனர்.
- முன்பாடசாலை ஆசிரியர்களும் பெற்றோர்களும் தமது குழந்தைகளுக்கு அதிகளவு எழுத்துப் பயிற்சிகளை வழங்குகின்றனர்.
- சந்தைகளிலும், நடைபாதைகளிலும் விற்கும் சிறுவர் நூல்களையும் செயல் நூல்களையும் பயன்படுத்தக் கட்டாயப்படுத்துகின்றனர்.

இக் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் முதலாவது படியாக முன்பாடசாலைக் கலைத்திட்ட ஒழுங்கமைப்பு அமைதல் வேண்டும். இலங்கையில் முன்பாடசாலைக் கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்படும்போது பின்வரும் விடயங்களில் கூடிய கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

**பெற்றோர்களின் பங்களிப்பு**

இலங்கையில் முன்பாடசாலைக் கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்படும்போது பெற்றோர்களின் பங்களிப்பைப் பெருமளவில் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். ஏனெனில் இப் பருவத்துப் பிள்ளைகளின் கற்றல் செயற்பாடுகளில் பெருமளவில் பெற்றோர்களே பங்களிப்புச் செய்கின்றனர்.

பிரித்தானியாவின் பாடசாலை ஒழுக்கம் பற்றிய விசாரணைக்குழுவின் எல்ரன் அறிக்கை *(Elton Report-1989)* முன்பாடசாலைக் கலைத்திட்ட உருவாக்கத்தில் பெற்றோரின் பங்களிப்புப் பற்றி விதந்துரைக்கிறது.

அமெரிக்காவில் தாய்மார்கள் பிள்ளைகளின் வினையாற்றல்களில் பங்களிப்புச் செய்யும் வீதம் அதிகமாக உள்ளது என *Stevenson & Stigler* (1992) ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

ஜப்பானில் தமது குழந்தைகளின் வினையாற்றல் விருத்தியில் பெற்றோரின் பங்களிப்பு மிகவும் குறைவானதாகவுள்ளது. இதனால் ஆசிரியர்கள் பெருமளவு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர் என *Okano & Tsuchiya*, (1999) ஆகியோர் குறிப்பிடுகின்றனர்.

தற்போது பெற்றோருடனான தொடர்பை விருத்தி செய்ய ஜப்பானில் பல்வேறு வழிமுறைகள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பாக,

- பாடசாலை ஆரம்பத்தில் ஆசிரியர்கள் வீடுகளுக்குச் சென்று பெற்றோரைச் சந்தித்தல்.
- அவதானிப்பு நாளில் பெற்றோர் பாடசாலைக்கு வருகை தருதல்.
- பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தை ஏற்பாடு செய்தல்.
- பெற்றோரும் ஆசிரியர்களும் மாணவர்களின் வினையாற்றல்கள், முன்னேற்றங்கள் தொடர்பாகக் குறிப்புப் புத்தகம் ஒன்றைப் பேணி அதில் குறிப்புக்களை எழுதுதல்.

போன்ற செயற்பாடுகள் அவற்றில் முக்கியமானவை யாகும். *(Allison, 1991; Benjamin, 1997; Holloway, 2000b; Holloway & Yamamoto, 2003; Lewis, 1995).*

அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் முன்பாடசாலைக் கல்வியில் பெற்றோர்களின் ஈடுபாடுகள் அவர்களின் வினையாற்றல்களில் சாதகமான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கின்றன *(Hill & Taylor, 2004).*

பின்லாந்தில் 2001ம் ஆண்டிலிருந்து புதிய அடிப்படையிலான முன்பாடசாலைக் கலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இங்கு முன்பாடசாலைக் கலைத்திட்ட உருவாக்கத்தில் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பிள்ளைகள், ஆய்வாளர்கள், நிர்வாகிகள் எனப் பலர் கலந்து கொள்வர். ஒரு வருடத்தில் குறைந்தது 700 மணித்தியாலங்கள் கற்றல் இடம்பெறும். இங்கு நகர சபைகள்தான் முன்பாடசாலை களை ஏற்பாடு செய்தல் வேண்டும் தேசிய கலைத்திட் டத்தை அடிப்படையாகக் கொண்டு முன்பாடசாலைச் செயற்பாடுகள் திட்டமிடப் படுதல் வேண்டும். *Ulla Harkonen (Vol. 2, 2003)*

ஜப்பானில் முன்பாடசாலைக் கல்வி வீட்டிலேயே ஆரம்பமாகின்றது. பல்வேறு புத்தகங்களையும் தொலைக் காட்சி நிகழ்ச்சிகளையும் பயன்படுத்திப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு விளைதிறன்மிகு முன்பாடசாலைக் கல்வியை வழங்குகிறார்கள். சரியான சமூக நடத்தை, கட்டமைக்கப்பட்ட விளையாட்டு, சொல் சார்ந்த, எண்சார்ந்த திறன்களை இவர்கள் தமது பிள்ளைகளுக்குப் போதிக்கிறார்கள்.

எனவே இலங்கையிலும் முன்பாடசாலைக் கலைத்திட்டத்தை ஒழுங்கமைக்கும் போது பெற்றோரின் பங்களிப்புடனேயே ஒழுங்கமைத்தல் வேண்டும்.

**ஆரம்பப் பாடசாலைக்குரிய ஆயத்தப்படுத்தல்கள்**

குழந்தையின் முழுமையான விருத்தியுடன் தொடர்பான முக்கியமான வகைகூறல் முன்பாடசாலைகளுக்குண்டு. முறைசார் கல்வியைவிட மிகுந்த அவதானம் முன்பாடசாலைகளில் செலுத்தப்படுதல் வேண்டும்.

இலங்கையில் முன்பாடசாலைக் கலைத்திட்டத்திற்கும், முறைசார் பாடசாலைகளின் கலைத்திட்டதிற்கும் இடையிலான இடைத்தொடர்பில் பாரிய வேறுபாடுகள்



இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. குறிப்பாக முன்பாடசாலை மாணவர்களைத் தரம் 1ற்கு ஆயத்தப் படுத்தும் முக்கியமான பொறுப்பிலிருந்து முன்பாடசாலைக் கலைத்திட்டம் விலகிச் செல்வதாகக் குறிப்பிடப் படுகிறது. எனவே முன்பாடசாலைக்கான கலைத்திட்டத்தை ஒழுங்கமைக்கும் போது இவ்விடயம் கவனத்தில் கொள்ளப்படுதல் வேண்டும்.

நல்ல ஆயத்தப்படுத்தல்களுடன் ஒரு ஆரம்பப் பாடசாலைக்கு மாணவர்கள் நுழைவார்களேயானால் அவர்களை நல்ல பயனுள்ளவர்களாக அவ் ஆரம்பப் பாடசாலையால் உருவாக்க முடியும். ஆயத்தப்படுத்தல்கள் இல்லாமல் முறைசார் பாடசாலைக்குள் நுழையும் மாணவர்களே இடைவிலகுபவர்களாகவும், கற்றலில் பின் நிற்பவர்களாகவும் உள்ளனர். நல்ல ஆயத்தப்படுத்தல்களுடன் வரும் பிள்ளையை முன்பாடசாலை ஆசிரியையால் இலகுவாகத் தூண்ட முடியும் என *Lawrence J. Johnson* குறிப்பிடுகிறார்.

இங்கிலாந்தில் முன்பாடசாலைக் கல்வியின் முக்கிய குறிக்கோள் ஆரம்பப் பாடசாலைக்குரிய நுழைவுத் தகைமையை விருத்தி செய்வதாகும். வழமையாக இங்கு முறைசார் பாடசாலைகள் பின்வரும் நுழைவுத் தகைமைகளை எதிர்பார்க்கின்றன. அதற்கமைவாக இங்குள்ள முன்பாடசாலைகள் அவ் நுழைவுத் தகைமைகளை அடிப்படையாகக் கொண்டு முன்பாடசாலைக் கல்வியை வழங்குகின்றன. அவ் நுழைவுத் தகைமைகளாவன:

- தனியாள் சமூக மனவெழுச்சி விருத்தி
- மொழி, எழுத்தறிவு, தொடர்பாடல்
- கணித விருத்தி
- அறிவும் உலகத்தைப் புரிந்து கொள்வதும்.
- உடல் விருத்தி
- ஆக்க விருத்தி

என்பனவாகும்.

இஸ்ரவேலில் ஆய்வில் ஈடுபட்ட *Smilansky* குறித்துக் காட்டுவது என்னவென்றால் சமூக, பொருளாதாரம், கல்வி, போன்றவற்றில் சவால்களுக்கு முகங்கொடுக்கும் பிள்ளைகள் தொடர்பாக தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் சம்பிரதாயப் பூர்வமான முன்பாடசாலைகள் முறைசார் கல்வியைப் பெறத் தேவையான அடிப்படை ஆற்றல்களை விருத்தி செய்வதற்குப் போதுமானதாக இல்லை. அத்துடன் முன்பாடசாலைகளுக்கும் ஆரம்பப் பாடசாலைகளுக்கும் இடையில் தொடர்பிருப்பதாகவும் தெரியவில்லை என்கிறார்.

இஸ்ரவேலில் முன்பாடசாலைத் தகைமைகளைப் பூர்த்தி செய்தால் மாத்திரமே தரம் 1இல் சேர முடியும். இங்குள்ள தனியார் முன்பாடசாலைகள் கல்வி அமைச்சின் கண்காணிப்பின் கீழேயே இயங்குகின்றன. அரச முன்பாடசாலைகள் தகைமை பெற்ற முன் பாடசாலை ஆசிரியர்களால் மாத்திரமே நடாத்தப்படுகின்றன.

இவர்கள் 4 வருட காலப் பயிற்சியைப் பூர்த்தி செய்தவர்களாக இருத்தல் வேண்டும். இவர்கள் 3-6 வயதையுடைய பிள்ளைகளை 3 மட்டங்களாகப் பராமரிப்பர்.

**இலங்கையில் அனேகமான முன்பாடசாலைகளில் பின்பற்றப்படும் கலைத்திட்டங்களில் அறிவைச் சேமித்து வைப்பதற்காக மனனம் செய்விக்கும் முயற்சிகளே பெரு மளவில் உள்ளடங்கியுள்ளன.**

1ம் மட்டம் 3-4 (*Trom Trom Hova - pre pre mandatory*)

2ம் மட்டம் 4-5 (*Trom Hova - pre mandatory*)

3ம் மட்டம் 5-6 (*Hova - mandatory*)

மூன்றாவது கட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யாத பிள்ளைகள் தரம் 1இல் சேர முடியாது மீண்டும் 3 வது மட்டத்திற்கே செல்ல வேண்டும். அதாவது உளவியல் சார், அறிவாற்றல் சார் தயார் நிலையைப் பெற்ற பின்னரே இஸ்ரவேலில் பிள்ளைகள் தரம் 1 இல் சேர்க்கப்படுகிறார்கள். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் உள்ள அபாயங்களை எதிர்நோக்கும் குடும்பங்கள் (*high-risk families*) தமது குழந்தைகளை முறைசார் பாடசாலைகளுக்குத் தயார்ப்படுத்துவது தொடர்பாக முன்னுரிமை கொடுப்பதில்லை என பங்களாதேசில் முன்பாடசாலைக் கல்வி தொடர்பாக ஆய்வில் ஈடுபட்ட *Samir Ranjan Nath,(2006)* குறிப்பிடுகிறார்.

மலேசியாவில் ஆரம்பிக்கப்பட்ட அனைத்து முன்பாடசாலைகளினதும் (அரச தனியார்) பிரதான குறிக்கோள் ஆரம்பப் பாடசாலைக்கான வலுவான அடித்தளத்தை இடுவதாகும். சகல முன்பாடசாலைகளும் கல்வி அமைச்சில் பதிவு செய்யப்படுதல் வேண்டும். தொலைதூரத்திலும், வறுமையான குடும்பங்களிலும் வாழும் குழந்தைகளுக்காக அரசு பெருமளவு முன்பாடசாலைகளை 2004 இல் நிறுவியது. அனைத்து முன்பாடசாலைகளிலும் முறைசார் பாடசாலைக்கான முன் அனுபவங்கள், சுயநம்பிக்கை, உடன்பாடான மனப்பாங்கு, முறைசார் பாடசாலைக் கல்விக்கும், வாழ்க்கை நீடித்த கல்விக்குமான ஆயத்தப்படுத்துதல்கள் என்பன இடம்பெறுகின்றன. *(Abdul Halim Masnan, 2011)*

எனவே இலங்கையிலும் முன்பாடசாலைக் கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்படும்போது அது எந்தளவு தூரம் முறைசார் பாடசாலைகளுக்கான ஆரம்ப ஆயத்தப்படுத்தல்களுக்குத் தேவையான உள்ளடக்கத்தைக் கொண்டுள்ளது என்பதைக் கலைத்திட்ட உருவாக்குனர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

## 4. அனுமதி வயது

இலங்கையில் 3-5 வயதுக்கிடைப்பட்ட பிள்ளைகள் முன்பாடசாலைகளில் அனுமதிக்கப்படுகின்றனர். இங்கு 3-5 வயதுக்கிடைப்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் ஒரேவிதமான கலைத் திட்டமே பின்பற்றப்படு கிறது. ஆனால் இந்தியா வில் முன்பாடசாலைகள் மூன்று மட்டங்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவையாவன:

(1) விளையாட்டுக் குழு — *Playgroup* — 11/2 வயது — 21/2 வயது வரை

(2) கனிஷ்ட அல்லது கீழ் நிலைக் குழந்தைப் பூங்கா (*Junior Kindergarten (Jr. KG) or Lower Kindergarten (LKG)* —31/2 வயது — 41/2 வயது வரை

(3) சிரேஷ்ட குழந்தைப் பூங்கா அல்லது மேல் நிலைக் குழந்தைப் பூங்கா *Senior Kindergarten (Sr. KG) or Upper Kindergarten (UKG)* 41/2 வயது — 51/2 வயது வரை

இங்குள்ள குழந்தைப் பூங்காக்களில் இளம் பிள்ளைகள் பொருட்களுடன் விளையாடுவார்கள். ஆசிரியருடனும் ஏனைய பிள்ளைகளுடனும் ஒத்துழைப்புடன் செயற்படுவார்கள். இங்கு வளர்ந்த பிள்ளைகளும் கற்பார்கள் அவர்கள் இப் பிள்ளைகளைக் கவனிப்பதுடன் இவர்களுடன் சேர்ந்தும் விளையாடுவர். இதனை மனித உறவை விருத்தி செய்வதற்கான கற்றல் எனலாம்.

சிரேஷ்ட குழந்தைப் பூங்கா முடிவுற்றதும் ஒரு பிள்ளை ஆரம்பப் பாடசாலையின் தரம் 1ற்கு நுழைதல் வேண்டும். முறைசார் பாடசாலையின் ஒரு பகுதியே குழந்தைப் பூங்காவாகும். ஆனால் சில இடங்களில் அவை சுதந்திரமான அமைப்பாக உள்ளன. டென்மார்க்கில் குழந்தைகள் 3 வயதிலிருந்து ஆரம்பப் பாடசாலைக்குச் சேரும் வரை குழந்தைப் பூங்காக்களில் கற்கிறார்கள். குழந்தைப் பூங்காவினது வகுப்புக்கள் அதாவது தரம் 1 ற்கான புகுமுக வகுப்புக்கள் ஆரம்பப் பாடசாலைகளாலேயே நடாத்தப்படுகின்றன. இங்கு நகர சபைகளாலும் தனியார்களாலும் நடாத்தப்படும் பராமரிப்பு நிலையங்கள் (*day-care centres*) ஒரே கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டவைகளாகும். இங்குள்ள *forest kindergartens*களில் தினமும் குழந்தைகள் வெளிப்புற இயற்கைச் சுற்றாடலிலேயே பொழுதைக் கழிப்பர். சிலியில் குழந்தை பிறந்ததிலிருந்து ஆரம்பப் பாடசாலைக்குச் சேரும் வரை பிள்ளை கல்வி கற்பதற்குரிய வசதிகள் இங்குள்ள முன்பாடசாலைகளில் உள்ளன. சிலியிலுள்ள முன்பாடசாலை அமைப்புப் பின்வருமாறு உள்ளது.

கீழ் நிலைப் பாலர் பாடசாலை (*Low nursery*): 85 நாட்களிலிருந்து 1 வயதுவரை

மேல் நிலைப் பாலர் பாடசாலை (*High nursery*): 1-2 வயது வரை

கீழ் மத்திய மட்டம் (*Low Middle Level*): 2-3வயது வரை

மேல் மத்திய மட்டம் (*High Middle Level*) 3 - 4 வயது வரை

முதல் மட்ட மாறு நிலை (*First level of transition*) (*Pre-kinder*), 4 -5 வயது வரை

*இரண்டாம் மட்ட மாறு நிலை (Second level of transition) (kinder),* **5 -6 வயது வரை**

இரண்டாம் மட்ட மாறு நிலையில் கல்வி கற்ற பின்னரே சிலியில் குழந்தைகள் ஆரம்பப் பாடசாலையின் தரம் 1 இல் *"Primero Básico" (First grade of primary education)*அனுமதி பெறுவார்கள்.

கனடாவின் ஒண் டாரியோ *(Ontario)* மாநிலத்தில் இரண்டு மட்டத்திலான *(grades)* முன்பாடசாலைகள் உள்ளன. கனிஷ்ட முன்பாடசாலை *(junior kindergarten)* சிரேஷ்ட முன்பாடசாலை *(senior kindergarten)*

இதில் முதலாவதில் 4 வயதுக்குட்பட்ட குழந்தைகளும் இரண்டாவதில் அதற்கு மேற்பட்ட வயதுப் பிள்ளைகளும் கல்வி கற்கின்றனர். இரண்டு முன்பாடசாலைகளும் அரைநாள், முழுநாள் நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டுள்ளன. இரு நிகழ்ச்சித்திட்டங்களும் "ஆரம்ப வருடங்கள்" *("Early Years")* என்று அழைக்கப் படுகின்றன. கியூபேக் *(Quebec)* மாநிலத்தில் கனிஷ்ர முன்பாடசாலை, சிரேஷ்ட முன்பாடசாலை அமைப்புக்களில் சிரேஷ்ட முன்பாடசாலை (5 வயதுப் பிள்ளைகளுக்கானது) ஆரம்பப் பாடசாலையுடன் ஒன்றிணைந்ததாக உள்ளது. மேற்குக் கனடாவில் *(Newfoundland and Labrador)* ஒரு வருடம் மாத்திரமே முன்பாடசாலையில் கற்க வேண்டும் அடுத்த வருடம் ஆரம்பப் பாடசாலையில் தரம் 1 இல் சேர்தல் வேண்டும். நோவா ஸ்கொட்டியா *(Nova Scotia)* மாநிலத்தில் முன்பாடசாலைக் கல்வி ஆரம்பக் கல்வியாகவே வழங்கப்படுகிறது.

எனவே இலங்கையிலும் முன்பாடசாலைக் கலைத் திட்டத்தை ஒழுங்கமைக்கும்போது ஏனைய நாடுகளின் மாதிரிகளையும் கவனத்தில் கொண்டு அனுமதிக்கப் படும் வயது மட்டத்திற்கேற்ற வகையில் கலைத்திட்டத்தை ஒழுங்கமைப்பதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

### 3. செயற்பாடுகளுக்கான முக்கியத்துவம்

இலங்கையில் அனேகமான முன்பாடசாலைகளில் பின்பற்றப்படும் கலைத்திட்டங்களில் அறிவைச் சேமித்து வைப்பதற்காக மனனம் செய்விக்கும் முயற்சிகளே பெருமளவில் உள்ளடங்கியுள்ளன. முன்பாடசாலைக் கலைத் திட்டத்தில் செயற்பாடுகளும், அனுபவங்களுமே அதிகம் இருத்தல் வேண்டும். குழந்தையிடத்தே அடிப்படை மனிதவலுவை விருத்தி செய்தல் வேண்டும் *(Audrey Curtis NFER Nelson, 1986)*. முன்பாடசாலை வயதில் பிள்ளைக்கு அதிகம் பெற்றுக்கொடுப்பது செயற்பாடு சார்ந்த அனுபவமாக இருத்தல் வேண்டும். அவர்களது அறிவு விருத்தி பெறுவது ஆக்க ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடும் போதாகும்.

அனேகமான வளர்ந்தவர்கள் தமக்குரித்தான சமூக வழமைகளின் அடிப்படையில் பிள்ளையைத் திசைமுகப் படுத்த முயற்சிக்கின்றனர். பிள்ளை தொடர்பாகச் செயற் படுவதற்காக ஒரு சட்டகத்தை அமைத்துக் கொள்வர். உயர்மட்டத்தில் உள்ளவர்கள் நகரத்தவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நாகரிகத்தை ஊட்டுவதற்கு அல்லது பழக்கப்படுத்து வதற்கு முயற்சிப்பர். கிராமத்தைச் சேர்ந்தவர்களும் நகரம் சார்ந்த பழக்க வழக்கங்களையே தமது பிள்ளைகள் கடைப்பிடிக்க வேண்டும் என விரும்புவர். பிள்ளைக்குத் தேவையான அறிவு தொடர்பாகக் கூடுதல் கவனம் செலுத்த அதிகமான வளர்ந்தோர் தவறிவிடுகின்றனர். முறையான முன் பாடசாலைக் கல்வியால் மாத்திரமே பிள்ளைக்கு முறையான கல்வியை வழங்கக் கூடியதாக இருக்கும். (அபேபால. றோ, 2010,ப.125)

அய்தாரோவா (1987) குறிப்பிடுவதன்படி முன் பாடசாலைப் பிள்ளைகள் வளர்ந்தோருக்குச் சமமாக இருப்பதற்கு விரும்புவர். வளர்ந்தோர் பாத்திரங்களை ஏற்று விளையாட்டில் ஈடுபடுவர். இவ் விளையாட்டின் மூலம் குழந்தை பெற்றுக்கொள்ளும் அறிவும் அனுபவமும் தமது செயற்பாடுகளை (அதாவது முறைப்படி உணவு உண்ணல், ஆடை அணிதல், போன்றவற்றைக் குறிப்பிடலாம்.) தாமே செய்ய உதவுவதாக அமையும். இதனால் முன் பாடசாலைக் கலைத்திட்டத்தில் இவை தொடர்பான விளையாட்டுக்களை அதிகம் புகுத்துதல் வேண்டும்.

இவ் விளையாட்டுக்கள் மூலம் குழந்தையின் அறிவு விருத்தியில் அவதானம், அனுமானிக்கும் திறன், தீர்மானிக்கும் திறன், ஆக்கத்திறன், ஆராயும் திறன், மற்றும் உயரம், அகலம், நிறை, அமைப்பு போன்ற விடயங்கள் யாவும் விருத்திபெறும். அதாவது அறிவு விருத்திக்கு அத்திவார மிடப்படுவது இவ் முன் பிள்ளைப் பருவத்திலாகும் இவ் அத்திவாரமே முறைசார் பாடசாலையில் பிள்ளை கற்கும் ஆரம்பக் கல்விக்கு அத்திவாரமாகும். இவ் அத்திவார மிடப்படாமல் பிள்ளை தரம் I வகுப்பிற்குள் நுழையுமானால் அது ஆரம்பக் கல்வியைக் கற்பதில் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்கும். எனவே இவற்றைக் கவனத்தில் கொண்டே முன்பாடசாலைக் கலைத்திட்டம் வடிவமைக்கப்படுதல் வேண்டும்.

### 4. மதிப்பீட்டு,கணிப்பீட்டு முறைகள்

இலங்கையில் பின்பற்றப்படும் முன்பாடசாலைக் கலைத்திட்டத்தின் பொருத்தப்பாடுகள் தொடர்பாக முறையான மதிப்பீட்டுச் செயற்பாடுகள் காணப்படுவதாகத் தெரியவில்லை. அத்துடன் முன்பாடசாலை மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை முறையான கணிப்பீட்டுக்குட்படுத்தக் கூடிய முறையியல்கள் போதுமானளவு முன்பாடசாலைகள் பின்பற்றும் கலைத்திட்டங்களில் உள்ளடக்கப்படவில்லை. தோன மாலினி விஜயலதா முனசிங்க (2002)தனது ஆய்வின் மூலம் முன் பாடசாலை தொடர்பாக ஒரு தேசிய கொள்கை இல்லை என்று குறிப்பிடுகிறார்.

அத்துடன் முன் பாடசாலைக் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் தொடர்பான முறையான மதிப்பீட்டு, கணிப்பீட்டு முறையியல்கள் காணப்பட வில்லை என்கிறார் எனவே முன்பாடசாலைக் கலைத்திட் டத்தை ஒழுங்கமைக்கும் போது முறையான மதிப்பீட்டு,

கணிப்பீட்டு முறைகள் உள்ளடக்கப்படுதல் வேண்டும்.

**5. பாட உள்ளடக்கம்**

இலங்கையில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கலைத்திட்டத்தில் முக்கிய கருப்பொருட்களாக அமைந்துள்ளவை:

- உடல் விருத்தி
- மொழி விருத்தி
- கணித விருத்தி
- சூழலைப் புரிந்து கொள்ளல்
- காண்பியல் சித்திர ஆக்க விருத்தி
- இசைசார் விருத்தி
- சமூக மனவெழுச்சி விருத்த
- ஆளுமை விருத்தி

என்பனவாகும். முன்பிள்ளை விருத்திப் பருவங்களுக்கான கலைத்திட்டங்களைத் தயாரிக்கும்போது பாட விடயங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் சுயசிந்தனை, குறியீடுகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல், சிந்தனை வெளிப்பாடு, போன்றவற்றுக்கே முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். இதற்காக அனுபவங்களை வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் வழங்குதல், கதை கூறல், கேட்டல், இசையும் அசைவும், நாடகம், விளை யாட்டும் அசைவியக்கச் செயற்பாடுகளும், சேகரித்தலும் வகை பிரித்தலும், கணக்கிடுதல், அளத்தல், வரைதல், கட்டியெழுப்புதல், மாதிரிகளை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளைச் செயற்படுத்த முடியும். *(Geva Blenkin & Marian Whitehead, 2002)*

ஸ்ரோல்பேர்க், யூடின், றூத்ஸ்சைல்ட், டானியல், எலன் *(Stolberg, Judith, Rothschild, Daniels, Ellen, R,1998)* ஆகியோர் 3-6 வயதுள்ள பிள்ளைகளுக்கு விஞ்ஞானம், கணிதம் ஆகிய பாடங்களைக் கற்பிப்பதற்குப் பிள்ளையும் குடும்பமும் தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தைப் பயன்படுத்த முடியும் என்கின்றனர். அதன்படி பிள்ளை அனுபவங்களினூடாகவும் விருப்புக்களினூடாகவும் அயற்சூழலுடன் இடைத்தாக்கம் புரிவதினூடாகவும் இதனை மேற்கொள்ள முடியும். ஆசிரியர்கள் மாணவர்களின் வளர்ச்சியிலும் விருத்தியிலும் கவனம் செலுத்துவதினூடாகவும் அவர்களது விருப்புக்கள், தேவைகள்,பலம், பலவீனம், பாதுகாப்பு, அன்பான சூழலை உருவாக்கல் என்பவற்றினூடாகவும் இதனை மேற்கொள்ள முடியும். மத்திய கிழக்கு, ஐரோப்பிய நாடுகளில் இந் நிகழ்ச்சித்திட்டத்தினைப் படிப்படியாக மேற்கொண்டு வெற்றி கண்டுள்ளனர். இதற்கான ஆசிரிய கைந்நூலையும் தயாரித்துள்ளனர்.

இங்கிலாந்தில் 2008ம் ஆண்டின் பின்னர் 3-7 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கு "விளையாட்டினூடான கற்றல்" *(learning through play)* என்னும் குறிக்கோளின் அடிப்படையில் கற்பித்தல் செயற்பாடுகள் ஒழுங்கமைக் கப்பட்டுள்ளன. இதில் 7 பிரிவுகள் உள்ளடங்கி யுள்ளன. அவையாவன:

- தனியாள் சமூக விருத்தியும் நலவாழ்வும் *(Personal and Social Development and Well Being )*
- மொழி, எழுத்தறிவு, தொடர்பாடல் திறன் *Language, (Literacy and Communication Skills )*
- கணித விருத்தி *(Mathematical Development )*
- இரு மொழியையும் பல் கலாசாரத்தையும் புரிந்து கொள்ளுதல். *(Bilingualism and Multi-cultural Understanding)*
- உலகத்தை அறிவதும் புரிவதும் *(Knowledge and Understanding of the World)*
- உடல் விருத்தி *(Physical Development)*
- ஆக்க விருத்தி *(Creative Development )*

எனவே இலங்கையிலும் கலைத்திட்ட ஒழுங்கமைப்பின் போது பாட உள்ளடக்கத்தை மாற்றி யமைக்கும்போது சர்வதேச நாடுகளின் முன்பாடசா லைப் பாட உள்ளடங்ககங்களையும் கவனத்தில் கொள்ளுதல் பொருத்தமாக இருக்கும்.

**1. கற்பித்தல் முறைகள்**

இலங்கையில் முன்பாடசாலைகளின் கற்பித்தல் முறைகளாகப் பொதுவாக விளையாட்டு முறை, குழு முறை போன்றவையே பின்பற்றப்படுகின்றன. ஆனால் சர்வதேச ரீதியாக முன் பாடசாலைகளில் அடிப்படைத்திறன்கள் தொடர்பான பயிற்சிகளே வழங்கப் படுகின்றன. இதற்கேற்ப போதனை அணுகுமுறை, மாணவ மைய அணுகுமுறை, மொண்டிசோரி அணுகு முறை போன்ற அணுகுமுறைகள் கலைத்திட்ட விருத்தியில் பயன்படுத்தப்படுகின்றன.

அபிவிருத்தியடைந்த நாடுகளிலுள்ள சில முன்பாட சாலைகள் விசேடமான கற்றல் கற்பித்தல் முறையியல் களைப் பின்பற்றுகின்றன. அவையாவன:

- *Montessori*
- *Waldorf*
- *Head Start*
- *High Reach Learning*
- *High Scope*
- *The Creative Curriculum*
- *Reggio Emilia approach*
- *Bank Street*
- *Forest kindergartens*

இவற்றில் *The Creative Curriculum* ஒரு இணையத் தளத்தை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படுவது என்பது குறிப்பிட்டுக் கூறக்கூடிய அம்சமாகும். இதில்



ஆசிரியர்களும் பெற்றோர்களும் இணைந்து முன்பாடசாலை மாணவர்களை மதிப்பீட்டுக் குட்படுத்துவார்கள். இவ் இணையத்தளம் வகுப்பறைகளில் மாணவர்கள் தம்மை சுயமாக மதிப்பீடு செய்யும் வகையில் ஏராளமான மதிப்பீட்டுப் படிவங்களை அச்சிட்டு வழங்குகிறது அதுதவிர பல்வேறு வகையிலான செயற்பாடுகளை உருவாக்கி வழங்குகிறது. இவற்றில் ஒவ்வொரு செயற்பாடும் தொடர்ச்சியான 50 குறிக்கோள்களை உள்ளடக்கியிருக்கும். *(National Association for the Education of Young Children)*

ஹொங்கோங்கில் *(Hong Kong)* அனேகமான குழந்தைப் பூங்காக்களும் பிள்ளை பராமரிப்பு நிலையங்களும் அரை நாள் வகுப்புக்களை நடாத்துகின்றன. சில முழு நாள் வகுப்புக்களை நடாத்துகின்றன. இங்குள்ள முன் ஆரம்பக் கல்வியின் நோக்கம் பிள்ளைகளை மகிழ்வுடனும் ஓய்வுடனும் இயற்கைச் சுற்றாடலில் வைத்துக் கற்பிப்பதன் மூலம் அவர்களிடம் சமநிலை விருத்தியை ஏற்படுத்துவதாகும். பல்வேறு அடிப்படைத் தேர்ச்சிகளை மையமாக வைத்து இங்கு கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் இடம்பெறுகின்றன. அவற்றில் உடல் விருத்தி, அறிவாற்றல், மொழி, சமூக மனவெழுச்சி, கலையாற்றல் போன்றவை முக்கியமானவையாகும்.


பௌதிக, சமூக, சுற்றாடல்கள் நாடு முழுவதுக்குமான பொதுவான ஒரு முன்பாடசாலைக் கலைத்திட்டத்தை ஒழுங்கமைக்கும்போது அக் கலைத்திட்டம் அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள பௌதிக, சமூக, சுற்றாடல்களுக்கும் பொருத்தமானதாக அமைதல் வேண்டும். பல்லிஹகார *D.W (1989)* தனது ஆய்வில் பின்தங்கிய வருமான மட்டத்தைக் கொண்ட குடும்ப மட்டங்களிலிருந்து வருகை தரும் 4-5 வயதுக்கிடைப்பட்ட மாணவர்களது பெற்றோரின் தொழில், வருமானம், சமூக மட்டம், கல்வி மட்டம் போன்றவற்றுடன் அவர்களின் வீட்டினதும், குடும்பத்தினதும் பௌதிக, சமூக, சுற்றாடல்கள் போன்ற காரணிகளைக் கவனத்தில் கொண்டே முன் பாடசாலைக் கலைத்திட்டம் உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடுகிறார்.

### 5. ஆசிரியர் பயிற்சி

கல்வி உயர்கல்வி அமைச்சு (2003) வெளிப்படுத்துவதற்கிணங்க இலங்கையில் ஆரம்பப் பிள்ளைப் பாடநெறிக்காக திறந்த பல்கலைக்கழகத்தினூடாக முன் பாடசாலை ஆசிரியர்களுக்குக் கல்வி,தொழில் பயிற்சிப் பாடநெறி தேசிய ரீதியில் வழங்கப்படுகிறது. அது தவிர கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்விப் பீடத்தினூடாக இதே போன்றதொரு பாடநெறி ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதில் ஆரம்பப் பாடசாலைக் கல்வி, முன்பிள்ளைப் பாதுகாப்பும் கல்வியும் ஆகிய 2 பாடங்கள் கற்பிக்கப்படுகிறது.

தேசிய கல்வி நிருவகமும் முன்பாடசாலை ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியை மேற்கொண்டு வருகிறது. மேலும் அரச சார்பற்ற நிறுவனங்களால் முன் பாடசாலை தொடர்பான தொழில்சார் பாடநெறி மேற்கொள்ளப்படுகிறது. சர்வோதயம், எகெட் போன்ற நிறுவனங்களாலும் பல குறுங்காலப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இருந்தும் இவற்றில் சரியான முறையியல்கள் பின்பற்றப்படுவதாகத் தெரியவில்லை. தற்போது "ஆறுதல்" நிறுவனமும் முன்பள்ளி டிப்ளோமா பயிற்சி நெறிகளை மேற்கொண்டு வருகின்றது.

எனவே இலங்கையில் முன்பாடசாலைக் கலைத்திட்டம் ஒழுங்கமைக்கப்படும்போது மேற்கூறப்பட்ட விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படுவது மிகப் பொருத்தமாக இருக்கும். இக்கட்டுரை இதனையே வலியுறுத்துகின்றது.



க.பாஸ்கரன்

# மாணவர்களிடையே மிருது திறன்களை விருத்தி செய்வதன் முக்கியத்துவம்

தகவல் பொருளாதாரத்தோடு இணைந்த உலகமயமாக்கல் சவால்களை எதிர்கொண்டு வாழ்வதற்கும் தனியாள் ஒவ்வொருவரும் உயர் அறிவாற்றல்களும், திறன்களும் உடையவர்களாக வலுவூட்டப்படுவது தவிர்க்க முடியாததாகும். அதாவது நமது தேசத்தின் அபிவிருத்திக்கான மனிதவள முதலீடு இன்றியமையாததாகும். இம் மனிதவள முதலீடுகள் தரமான கல்விச் செயன்முறைக்கூடாகவே உருவாக்கப்பட வேண்டும். கல்விச்செயன்முறைகள் நன்கு திட்டமிட்டு அமுல்படுத்தப்படும்போது தேசம் எதிர்பார்க்கும் மனிதவள முதலீட்டினை விருத்தி செய்யமுடியும். எனவே பாடசாலை போன்ற கல்வி நிறுவனங்கள் கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கூடாக உயர் அறிவும் ஆற்றல்களும் கொண்ட மனித வளத்தினை எதிர்கால சமுதாயத்திற்காக உருவாக்குவது காலத்தின் கடமையாகும்.



கல்விசாரா திறன்களுடன் இணைந்த அறிக்கைக் கூறுகளை உள்ளடக்கிய *Generic Skill* இன் சகல அம்சங்களையும் ஒன்றினைந்த திறன்கள் மிருது திறன்கள் *(Soft Skills)* எனக் கொள்ளப்படும். விரைவாக மாற்றமுற்றுக் கொண்டுவரும் தொழில்நுட்ப யுகத்தின் வேலைச் சந்தைக்குத் தேவையான உலகமயமாக்கல் யுகத்தின் சவால்களை எதிர்கொள்வதற்குத் தேவையான மிகவும் முக்கியமான திறன்களாக மிருதுதிறன்கள் இனங் காணப்பட்டுள்ளன. கல்வியில் மீள்திசைமுகப்படுத்தல் என்பது நிலைத்து நிற்கக் கூடிய கல்வியைக் குறிப்பிட்டு நிற்கின்றது. இக்கல்வியானது மிருது திறன்களுடன் மிகவும் வலுவாகப் பின்னிப் பிணைந்துள்ளது.

மாணவர்களிடையே மிருது திறன்களை அறுவடை செய்வதென்பது இரு பிரதான நோக்கங்களைக் கொண்டது. அவையாவன: தரமான மனித முதலீட்டினை உருவாக்குதல், மாணவர்களது அறிவு, கிரகிப்பு, விழுமியங்கள் மற்றும் திறன்களை விருத்தி செய்தல் என்பனவாகும். பரந்துபட்ட ஆய்வு முடிவுகளின் அடிப்படையிலும் துறைசார் நிபுணர்களின் அபிப்பிராயங்களின் அடிப்படையிலும் கல்வி நிறுவனங் களில் மாணவர்களிடையே விருத்தி

செய்யப்படக்கூடிய சிறப்பான பல மிருது திறன்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவையாவன:

- தொடர்பாடல் திறன்கள்
- சிந்தித்தல் திறன்கள் மற்றும் பிரசினம் தீர்த்தல் திறன்கள்.
- குழுவாக செயற்படும் ஆற்றல்.
- தகவல் முகாமைத்துவம் மற்றம் வாழ்நாட்கல்வி.
- தொழில்சார் திறன்கள்.
- அறம், ஒழுக்கம் மற்றும் வாண்மைத்துவம்.
- தலைமைத்துவத் திறன்கள்.

மேலே கூறப்பட்ட ஒவ்வொரு மிருது திறன்களும் மேலும் பல உபமிருது திறன்களைக் கொண்டுள்ளன.

### 1. தொடர்பாடல் திறன்கள்

பல்வேறுபட்ட இடங்களில் பல்வேறுபட்ட நபர்களுடன், பலவேறுபட்ட மொழிகளில் தொடர்பாடலை மேற்கொள்ளும் ஆற்றலை தொடர்பாடல் திறன் குறிப்பிடுகின்றது. தொடர்பாடல் திறன்களின் உபதிறன்கள் பின்வருமாறு:

- கருத்துக்களை எழுத்து மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ நம்பிக்கையுடன் தெளிவாகவும் வினைத்திறனாகவும் முன்வைக்கும் ஆற்றல்.
- விடயங்களை ஆக்க பூர்வமான முறையில் கேட்கும் திறனிலும் துலங்கும் திறனிலும் பயிற்சி பெறும் ஆற்றல்.
- பார்வையாளர்கட்கு நம்பிக்கையுடன் தெளிவாக கருத்துக்களை சமர்ப்பித்தல்.
- முன்வைப்பு / சமர்ப்பிப்பின்போது தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும் ஆற்றல்.
- கலந்துரையாடவும் கலந்துரையபடி பொதுக்கருத்துக்கு வருவதற்குரிய ஆற்றல்.
- வெவ்வேறு கலாசாரப் பின்னணியில் இருந்து வரும் ஒவ்வொரு தனிநபர்களுடனும் தொடர்பாடலை மேற்கொள்ளும் ஆற்றல்.
- தனியாள் ஒருவர் தனது சுய தொடர்பாடல் திறனை விரிவாக்கும் ஆற்றல்.
- வாய்மொழி சாராத திறன்களைப் பயன்படுத்தும் ஆற்றல்.

பல்கலைக்கழக கல்வியாயினும் சரி, பாடசாலைக் கல்வியாயினும் சரி, கல்வி அமைப்பில் தொடர்பாடல் திறன்கள் மிகவும் முக்கியமானவையாகும். பாடசாலையை விட்டு விலகிய பின்னர், நிறவனச் செயற்பாடுகளில் அல்லது சமூகச் செயற்பாடுகளில் மாணவர்கள் பங்குகொள்வதற்கு தொடர்பாடல் திறன்கள் அவசியமாகும். எதிர்கால மனித மூலதனத்திற்கு மிகவும் பிரதானமான கூறாக தொடர்பாடல் திறன்கள் கருதப்படுகின்றது.

### 2. தர்க்கரீதியாக சிந்தித்தல் மற்றும் பிரசினம் தீர்த்தல் திறன்கள்.

தர்க்கரீதியாக, ஆக்கபூர்வமாக, புத்தாக்க ரீதியாக பகுப்பாய்வு ரீதியாக சிந்திக்கும் ஆற்றலையும் புதிய வேறுபட்ட பிரச்சினைகளை விளங்கிக்கொண்டு அறிவைப் பிரயோகிக்கும் ஆற்றலையும் இப்பகுதிக்குள் அடக்க முடியும். இவற்றுக்குள் அடங்கும் உபதிறன்கள் வருமாறு:

- கடினமான சூழ்நிலைமைகளில் பிரச்சினைகளை இனங்காணவும் பகுப்பாய்வு செய்யக்கூடியதாகவும் தெளிவான மதிப்பீட்டினை மேற்கொள்ளக் கூடிய தானதுமான ஆற்றல்.
- விளக்கமளித்தல், பகுப்பாய்வு செய்தல், மதிப்பிடுதல் ஆகிய சிந்திக்கும் திறன்களை மேம்படுத்தவும் விரிவுபடுத்தவும் கூடியதான ஆற்றல்.
- மாற்றுத் தீர்வுகளைக் கண்டறிவதற்கும், புதிய கருத்துக்களை கண்டறிவதற்குமான ஆற்றல்.
- பொருத்தமான நிறுவனங்களின் அடிப்படையில் தீர்மானங்களை மேற்கொள்ளும் ஆற்றல்.
- முழுமையாகப் பொறுப்புக்களை ஏற்றலும் அவற்றினை நிறைவேற்றுவதற்குமான ஆற்றல்.
- பல்வேறுபட்ட வேலைச் சூழலை தனியாள் ஒருவர் விளங்கிக் கொள்ளலும் அதற்கு இசைவாக்கமடைவதற்குமான ஆற்றல்.

பாடசாலையை விட்டு விலகிய பின்னர் நிலையான வாழ்க்கைக்காக தொடர்ந்து கற்பதற்கான நடைமுறைத் திறன்களை மாணவர்கட்கு வழங்க வேண்டும். தரவுகளையும் தகவல்களையும் ஒழுங்கமைக்கவும் வியாக்கியானம் செய்யக்கூடியதுமான ஆற்றல், வினாக்களை உருவாக்கும் திறன்கள் சமுதாயத்தில் எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்யக்கூடிய ஆற்றல் என்பனவற்றினையும் தர்க்கரீதியாகச் சிந்தித்தல் திறன்கள் குறிப்பிடுகின்றன.

### 3. குழுவாக இயங்குவதற்கான திறன்கள்

பல்வேறுபட்ட சமூக கலாசாரப் பிண்ணனியில் இருந்து வரும் நபர்களுடன் ஒரு பொது இலக்கினை அடைவதற்காக செயற்படும் ஆற்றலை குழுவாக இயக்குவதற்கான திறன்கள் குறிப்பிடப்படுகின்றன. மாணவர்கள் குழுவாக இயங்கவும், குழு அங்கத்தவர்களுக்கிடையே கருத்துக்களைப் பரிமாறவும் ஏனைய குழு அங்கத்தவர்களின் கருத்துக்களை மதிக்கவும் ஏற்றுக் கொள்வதற்கான மனப்பாங்கினை விருத்தி செய்யக் கூடியதான ஆற்றலை ஊக்குவித்தலை இங்கு கருதப்படுகின்றது. இத்திறன்கள் மேலும் பல உபதிறன்களாக பாகுபடுத்தப்பட்டுள்ளன. அவை வருமாறு:

> **பாடசாலைக் கல்விக்கூடாக, தேசத்தின் முன்னேற் றத்திற்கு தேவையான ஒன்றிணைந்து செயற்படக்கூடிய செயலணியொன்றினை எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எதிர்கால மனித முதலீடு கள் இத்திறன்களைக் கொண்டு அமைய வேண்டும்.**


- ஏணையோருடன் விணைத்திறனாகச் செயற்படுவதற்கான நல்ல தொடர்பு, இடைவினை என்பவற்றினைக் கட்டியெழுப்புவதற்கான ஆற்றல்.
- தலைமைத்துவம் மற்றும் அதனைத்தொடர்ந்து வரும் ஆளணியினரின் நடிபங்கினை விளங்கிக் கொள்வதற்கும் செயற்படுத்தவும் தேவையான ஆற்றல்.
- ஏணையோரது மனப்பாங்கு, நடத்தைகள், நம்பிக்கைகளை மதிப்பிடுவதற்கும் உணர்ந்து கொள்வதற்குமான ஆற்றல்.
- குழுவேலைகளை ஒழுங்கமைக்கவும் திட்டமிடவும் பங்களிப்புச் செய்வதற்கான ஆற்றல்.
- குழுவினது தீர்மானங்களை / முடிவுகளை மதிப்பளித்தல்.

பாடசாலைக் கல்விக்கூடாக, தேசத்தின் முன்னேற்றத்திற்கு தேவையான ஒன்றிணைந்து செயற்படக்கூடிய செயலணியொன்றினை எதிர்கால சந்ததியினருக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். எதிர்கால மனித முதலீடுகள் இத்திறன்களைக் கொண்டு அமைய வேண்டும்.

### 4. வாழ்நாட்கல்வி மற்றும் தகவல் முகாமைத்துவ திறன்கள்

தனியாள் ஒருவர் புதிய அறிவினையும் திறன்களையும் உள்வாங்கிக் கொள்வதற்கு சுயாதீனமாகக் கற்பதற்கு அல்லது சுய ஒழுங்காக்கப்பட்ட கற்றலில் ஈடுபடுவதற்கான முயற்சிகளை இப்பகுதிக்குள் உள்ளடக்க முடியும்.

- பல்வேறுபட்ட தகவல்கள் மூலாதாரங்களில் இருந்து தேவையான தகவல்களைக் கண்டறிந்து முகாமை செய்வதற்கான ஆற்றல்கள்.
- சுயகற்றலுக்கூடாக புதிய கருத்துக்களைப் பெற்றுக் கொள்வதற்கான ஆற்றல்.
- ஆராய்வு மனப்பாங்கினையும் புதிய அறிவைத் தேடுவதற்குமான ஆற்றல் விருத்தி செய்வதற்கும் ஆகிய உபதிறன்கள் இப்பகுதிக்குள் உள்ளடக்கப்படுகின்றன.

மாணவர்களிடையே ஆராய்வு மனப்பாங்கினை விருத்திசெய்தல் அறிவினைத் தேடியறிவதற்குமான விருப்பத்தினை ஏற்படுத்துதல் என்பன எதிர்பார்க்கப்படும் பிரதான மிருது திறன்களாகும். இதனூடாக தனியாள் ஒருவர் வாழ்நாள் தொடர்ந்து கற்று அறிவையும் திறன்களையும் விருத்திசெய்து கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தனியாள் ஒருவர் தகவல்களில் நல்லவை, தீயவை எவையென வேறு பிரித்தறியவும் முகாமை செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். இவற்றுக்குத் தேவையான நல்ல நடைமுறைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதுடன் அதனூடாக நல்ல தீர்மானங்களை எடுப்பதற்கும் தேவையான ஆற்றல்களைப் பெற்றுக்கொள்வதும் அவசியமானதாகும்.

### 5. தொழில்சார் திறன்கள்

தொழில்சார் திறன்கள் எனப்படுபவை, தொழில் மற்றும் வியாபாரம் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களைத் தேடுதல். இத்துறைகளில் ஏற்படும் ஆபத்துக்கள் தொடர்பான விழிப்புணர்வை விருத்தி செய்தல் தொடர்பான திறன்களையும், மேற்படி துறைகளில் புத்தாக்க, ஆக்கபூர்வமான செயற்பாடுகளை ஏற்படுத்துதல் தொடர்பான திறன்களையும் கருதுகின்றது. மேலும் இத்திறன்களில் உபதிறன்களாக.

- வேலை வாய்ப்புக்களுக்கான சந்தர்ப்பங்களை இனங்காணுதல்.
- வியாபாரம் மற்றும் வேலை வாய்ப்புக்கான சந்தர்ப்பங்களை முன்வைத்தல்.
- வேலை வாய்ப்புக்கள், மற்றும் வியாபாரம் மேற்கொள்வதற்கான வாய்ப்புக்களைக் கண்டறிதல், விரிவாக்குதல், கட்டியெழுப்பவதற்கான ஆற்றல்.
- சுய தொழில் விருத்திக்கான வாய்ப்புக்களை விருத்தி செய்தல்.

என்பன உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### 6. ஒழுக்கம், விழுமியம் மற்றும் வாண்மைத்துவம் சார்திறன்கள்


தனியாள் ஒருவர் தான் வாழும் சமூகத்தில் ஒழுக்கம், விழுமியம் மற்றும் வாண்மைத்துவம் மிக்க ஒரு பிரஜையாக மிளிர்வதற்கான திறன்கள் இங்கு முன்வைக்கப்படுகிறது.

சமூக இணைவினை, வாண்மைத்துவம்சார் செயற்பாடுகளால் உயர் ஒழுக்கம், விழுமியம் பேணும் திறனும் பயிற்சியும் தொடர்பான ஆற்றல்.

- ஒழுக்கம்சார் பிரச்சினைகளைத் தீர்த்தல், தீர்மானங்களை மேற்கொள்வது தொடர்பான ஆற்றல்.
- சமூகம் தொடர்பான பொறுப்புணர்ச்சி உடையவராகவும் அற ஒழுக்கம்சார் மனப்பாங்கை உடையவராகவும் வாழ்வதற்கான திறன்கள்.

### 7. தலைமைத்துவத் திறன்கள்

தனியாள் ஒருவரிடம் இன்று காணப்படும் முக்கியமான பின்னடைவு யாதெனில் முன்னிற்கு வருதல்,



பொறுப்புக்களை ஏற்றல் என்பனவாகும். இதனடிப் படையில் முன்னின்று தலைமைப் பொறுப்புக்களை ஏற்றுக் கருமமாற்ற வேண்டிய திறன்களை விருத்தி செய்தலே இங்கு பிரதானமாக கருதப்படுகின்றது.

- தலைமைத்துவம் தொடர்பான அடிப்படைக் கோட்பாட்டு ரீதியான அறிவைப் பெறுதல்.
- ஒரு செயற்திட்டத்தினை நிறைவேற்றி வெற்றி காண்பதற்கான ஆற்றல்.
- தலைவராகவும், தலைவரைப் பின்பற்றுபவராகவும் தன்னை மாற்றிக் கொள்வதற்கான திறன்களைப் பின்பற்றிக் கொள்வதற்கான திறன்களைப் பெற்றுக் கொள்ளல்.
- குழுவிலுள்ள அங்கத்தவர்களை மேற்பார்வை செய்யும் ஆற்றல் என்பன இத்திறன்களின் உப திறன்களாகக் கொள்ளப்படுகின்றன.


பாடசாலைகளில் மிருது திறன்களைத் திட்டமிடவும் அமுல்படுத்தவும் பல்வேறு அணுகுமுறைகள் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேற்கொள்ளப்படுகின்றன. எனினும் இவை மேலும் விரிவுபடுத்தப்பட வேண்டும்.

முறைசார் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகள் (சகல கலைத்திட்ட மற்றும் இணைக்கலைத்திட்ட செயற்பாடுகள் அடங்கலாக) மற்றும் கல்வி, கலாசார செயற்றிட்டங்கள் என்பவற்றிற்கூடாக நன்கு திட்டமிடப்பட்ட வகையில் இம் மிருதுதிறன்கள் விருத்தி செய்யப்பட வேண்டும்.

புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைவாகப் பாடசாலைகளில் அமுல்படுத்தப்பட்டு வரும் தேர்ச்சி மையக் கலைத்திட்ட அமுலாக்கமானது, இம்மிருது திறன்களையே முதன்மைப்படுத்தி அமுல்படுத்தப்படுகின்றது. கற்கை நெறிகளின் பெரும்பாலான கற்றல்பேறுகள் மிருது திறன்கள் தொடர்பானவையாகவே இனங்காணப்பட்டுள்ளன. கற்றல், கற்பித்தல் செயன்முறையில் பல்வேறு உத்திகளும் கற்பித்தல் முறையியல்களும் மிருதுதிறன்களை விருத்தி செய்யக்கூடிய வகையில் அறிவுரைப்பு வழிகாட்டிகளிலும் ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளது கவனத்தில் கொள்ளத்தக்கது. வினாவுதல் நுட்பங்கள், வகுப்பறைக் கலந்துரையாடல்கள் சிந்தனைக்கிளறல் செயன்முறைகள், குழுவேலைகள், முன்வைப்புக்கள், செயற்திட்டங்கள், களப்பயணங்கள் போன்ற கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் பாடசாலைகளில் அமுல்படுத்துவதனூடாக இம் மிருது திறன்களை மேலும் விருத்தி செய்வதற்கான வாய்ப்புக்கள் பாடசாலைக் கலைத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து மாணவர் மைய அணுகுமுறைகள், இத்திறன்களை விருத்தி செய்வதற்கு ஒரு நிலைகளையுடையவையாகவும் காணப்படுகின்றன. வினாவுதலூடாகக் கற்றல், கூட்டுறவுக்கற்றல் பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்ட கற்றல், இலத்திரணியல் கற்றல் (e-Learning) போன்ற உத்திகளும் முறையியல்களும் இத்திறன்களை விருத்தி செய்வதற்கு பொருத்தமானவையாக இனங்காணப்பட்டுள்ளன.

நிலைத்து நிற்கக்கூடிய நிலையான வாழ்க்கை முறையை நோக்கி எமது சமுகம் வெற்றி நடை போடுவதற்கு, பொது மக்களது விழிப்புணர்வு, கல்வி, பயிற்சி என்பன முக்கியமான அம்சங்களாகும். எதிர்கால சந்ததியினர் தமது சொந்தத் தேவைகளை தாமே நிறைவு செய்யக் கூடிய வகையில் விருத்தி செய்வதன் மூலம் அதாவது தரமான எதிர்கால முதலீடாக எதிர்காலச் சமூகத்தினை மாற்றுவதன் மூலம் தேசத்தின் அபிவிருத்தியை அடைய முடியும்.



சபா.ஜெயராசா

## சமூகமும் கல்வியும் 'பேர்ன்ஸ்டின்' கருத்துக்களை மீள்நோக்கல்

சமூகமும் கல்வியும் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டவர்களுள் பேர்ன்ஸ்டின் தனித்துவமானவர். சிறப்பாக சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளை அடியொற்றிய கல்விச் செயற்பாடுகளை அவர் விரிவான ஆய்வுகளுக்கு உட்படுத்தினார். சமூகத்திற் காணப்படும் பல்வேறு குழுக்களையும் அடியொற்றி ***"குறியீட்டு வளங்கள்"*** *(Symbolic Resources)* வேறுவேறுபட்ட வகையிலே கல்வியினூடாகக் கையளிக்கப்பட்டு வருதலைக் கண்டறிதல் அவரது சிறப்பார்ந்த ஆய்வுப் பணியாக அமைந்தது. அந்நிலையில் அதிகாரத்துக்கும் அறிவுக் கையளிப்புக்குமுள்ள தொடர்புகளை அவர் வெளிப்படுத்தினார்.



கல்விச் செயல்முறை, கற்பித்தலியல், ஆசிரியம் தொடர்பாகப் பேசுவதற்கு ஆய்வு செய்வதற்குமுரிய ***"புதிய மொழியை"*** உருவாக்குதல் அவரது இலட்சியமாக இருந்தது. கோட்பாட்டு வழியிலான அவரது மொழியாக்கம் ஒரே நேரத்தில் இரண்டு திசைகளில் நகர்ந்து செல்லக் கூடியது. அவை:

(1) எண்ணக்கரு மற்றும் விபரண அடிப்படைகளில் குறுக்குமுகமாக நகர்தல்.

(2) நிலைக்குத்து நிலையில் ஒரு மட்டத்திலிருந்து இன்னொரு மட்டத்துக்கு மேல்நோக்கி நகர்தல்.

அறிவின் உற்பத்தி ஒருபுறம் நிகழ்ந்த வண்ணமுள்ளது. அது அதிகார நிலைக்கு ஏற்றவாறு தெரிவு செய்யப்பட்டு மீள்உற்பத்தி செய்யும் நிலையங்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றது. இந்தச் செயல்முறை வெளிப்படையாகவோ நேரடியாகவோ நிகழ்த்தப்படுதல் இல்லை. அவற்றை மேலும் விளக்குவதற்குக் ***"குறியீட்டு நிலை ஆசிரிய வழிமுறை"*** *(Pedagogicdevice)* என்ற எண்ணக்கரு பயன்படுத்தப்படுகின்றது.

ஆசிரிய வழிமுறை குறியீடுகளை ஆட்சி செய்கின்றது. உற்றுணர்வுகளையும் ஆட்சி செய்கின்றது. மரபு வழியான கலைத்திட்டத்துக்கும் முற்போக்கானது என்று சொல்லப்படும் புதிய கலைத்திட்டத்துக்குமிடையே கருத்தியல் அடிப்படைகளில் வேறுபாடுகள் இல்லை. ஆனால் சூழமைவு,

கருத்து, செயற்பாடு ஆகியவற்றை அடியொற்றியே வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இச்சந்தர்ப்பத்தில் கோடல் *(Code)* என்ற எண்ணக்கரு சிறப்பாக எடுத்தாளப்படுகின்றது. அது அதிகார நிலையை ஒழுங்கமைக்கும் கோட்பாட்டைக் கொண்டது. மிக நுட்பமாக அறிவைத் தெரிவுசெய்து ஒன்றிணைத்துக் கொள்கின்றது. கோடலானது பின்வரும் மூன்று அடிப் படைகளையும் நிலைபெயர்த்த வண்ணமிருக்கும்.

(1) சூழமைவானது இடைவினை மற்றும் நடைமுறைகளாக நிலைபெயர்க்கப்படுகின்றது.

(2) கருத்துக்கள் திசைமுகப்படுத்தலாகவும் அறிபரவலாகவும் நிலைபெயர்க்கப்படுகின்றன.

(3) அறிந்துணர்தல் என்பது நூலிய உற்பத்திகளாக நிலைபெயர்க்கப்படுகின்றன.

அதிகாரத்தின் வேறுபட்ட பரவலுக்கு ஏற்றவகையிலே கட்டுப்படுத்தல் முறைகளும் வேறுபட்ட வழிகளில் அமைந்த நடைமுறைகளையும், திசைமுகப்படுத்தலையும், நூலிய ஆக்கத்தையும் ஆட்சி செலுத்தும்.

மரபு வழியான கலைத்திட்டமும் முற்போக்கான புதிய கலைத்திட்டமும் ஆசிரியத்தின் கட்புலனாதல் மற்றும் கட்புலனாகாது இருத்தல் என்பனவற்றால் வெளிப் படுத்தப்படும். ஆசிரியரும் மாணவரும் தொடர்பான அதிகார அடுக்கமைப்பின் முறைமை அறிவுக் கையளிப் பின் தொடர்ச்சியைக் கட்டுப்படுத்திய வண்ணமிருக்கும்.

வர்க்க நிலைகளிலே கல்வி பற்றிச் சிந்திக்காது வர்க்கத்தின் உள்ளமைந்த வேறுபாடுகளுக்கும் கல்விச் செயற்பாடுகளுக்குமிடையேயுள்ள தொடர்புகளை பேர்ன்ஸ்டின் விரிவாக ஆராய்ந்துள்ளார். தொழிலாளர் வகுப்பைச் சேர்ந்த பிள்ளைகள் ***"வரையறுக்கப்பட்ட மொழிக் கோடலின்"*** அடிப்படையாக உரையாடுகின்றனர். ஆனால் பாடசாலை அமைப்பிலே வசதிமிக்க மத்தியதர வர்க்கத்துப் பிள்ளைகள் ***"விரிந்த கோடலின்"*** அடிப்படையாகத் தொடர்பாடலை மேற்கொள்கின்றனர். கட்டுப்படுத்தல் என்பது அறிகை நிலையிலன்றிப் பண்பாட்டு நிலையிலும் நோக்கப்படுகின்றது.

மொழிக்கும் சமூக வகுப்புக்குமிடையிலுள்ள தொடர்புகளை ஆராய்ந்தவேளை அதற்கும் கல்விக்குமுள்ள தொடர்புகள் மேலும் விரிவாக நோக்கப்பட்டன. அந் நிலையில் மத்தியதர வர்க்கப் பிள்ளைகள் வரன்முறையான மொழியிலும் பொது மொழியிலும் பரிச்சியமுள்ளவர்களாக இருக்கின் றார்கள். கல்வியில் அவர்கள் முன்னேறிச் செல்வதற் அந்நிலை வாய்ப்பாக இருக்கின்றது. அதேவேளை சமூ நிரலின் அடிமட்டங்களில் உள்ளவர்கள், கல்வி நிலையில் மட்டுப்பாடுகளைக் கொண்ட "பொது மொழியில்" மாத்திரம் பரிச்சயமுடையவர்களாக இருக்கின்றனர். வரன்முறை மொழியில் அவர்கள் பின்னடைந்த நிலையில் உள்ளனர். அவர்களின் கல்வி முன்னேற்றத்துக்கு அது தடையாகவுள்ளது. அதாவது மொழி நிலையில் அவர்கள் பின்னடைவை எதிர்கொண்டுள்ளனர்.

இலங்கையின் நிலவரங்களோடு பேர்ன்ஸ்டினது கருத்துக்களைத் தொடர்புபடுத்தி நோக்கலாம். ஆங்கில மொழிவாயிலாகக் கற்கும் சமூகத்தின் அடிமட்டங்களில் வாழும் பிள்ளைகள் தமது கல்வியிலே பின்னடைவுகளை எதிர்கொள்வதற்கு அவர்களின் மொழியின் மட்டுப்பாடு பிரதான காரணியாக அமைந்துள்ளமையைக் காணலாம். அதாவது ஆங்கில மொழிவளமின்றி அந்த மொழி மூலம் கற்போர் தாக்கங்களுக்கு உள்ளாகின்றனர்.

ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பரீட்சையிலும் மொழிசார்ந்த இந்த மட்டுப்பாடுகளைக் காணலாம். சமூகத்தின் தாழ் மட்டங்களிலே வாழும் பிள்ளைகளின் மொழி மட்டுப்பாடு அவர்களின் அடைவுகளைப் பாதித்து வருதல் குறிப்பிடத்தக்கது.

மேலும் அவரால் முன்வைக்கப்பட்ட அறிவுக்கையளிப்பு வழிமுறை அல்லது ***"ஆசிரியம் சார்வழி முறை"*** *(Pedagogicdevice)* என்பது ஒரு முக்கியமான கருத்து. சமூகக் குழுக்களுக்கிடையே அறிவு வேறுபட்ட முறையிலே கையளிக்கப்படுவதற்கு ஆசிரியம்சார் வழி முறை அதிகாரத்தைக் கட்டமைப்புச் செய்து வருகின்றது.

ஆசிரியம் சார்வழிமுறை என்பதைத் தனித்து ஆசிரியருடன் கட்டுப்படுத்தி நோக்குதல் தவறானது. அறிவுக் கையளிப்போடு தொடர்புடைய முழுத்தொகுதியோடும் தொடர்புபடுத்தி அதனை நோக்குதல் வேண்டும். அவ்வாறு நோக்கும் பொழுது அதிகார நிலை நிறுத்தலுக்கும் சமூகக் குழுக்களுக்குமிடையே அறிவைக் கையளிப்புச் செய்வதற்குமிடையேயுள்ள தொடர்புகளை அறிந்துகொள்ள முடியும். அந்நிலையிலே கல்வியானது சமூக இயல்பை மாற்றியமைக்காது மீள உருவாக்கும் செயற்பாட்டையே வலியுறுத்திக் கொண்டிருத்தலைக் காணமுடியும். அதாவது சமூக ஏற்றத் தாழ்வுக் கல்விச் செயல்முறையால் உரிய முறையிலே பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஏற்றத் தாழ்வுகளைக் கல்வி மீளநிலை நிறுத்துகின்றது.

அறிவின் உற்பத்தியும் அறிவுக் கையளிப்பும் சமூக நிலவரங்களை அடிப்படையாகக் கொண்டே நிகழ்ந்து வருகின்றன. அவை தொடர்பான விரிந்த ஆய்வை முன்னெடுத்த பேர்ன்ஸ்டின் ***"ஆசிரியம் சார் வழிமுறையை"*** முன்வைத்தார். மேலும் ***"கருத்து வினைப்பாட்டின் கட்டமைப்பு"*** *(The Structure of Pedagogil Discourse)* என்ற அறிதலைப்பினூடாகத் தமது ஆய்வுகளைக் கூர்மையாக விரிவுபடுத்தினார். அவரது எழுத்தாக்கங்கள் சிக்கலாக இருந்தன. அதேவேளை ஆழமாகவுமிருந்தன. ஆழநோக்கலும் சிக்கலும் ஒன்றிந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது ஆய்வின் வழியாக வெளிப்படுத்தப்பட்ட இரண்டு எண்ணக்கருக்கள் சமகாலத்தைய சூழலில் மேலும் முக்கியத்துவம் பெறுகின்றன.

அ. அறிவின் உற்பத்தி மற்றும் உருவாக்கம்

ஆ. கட்புலனாதல் மற்றும் கட்புலனாகாத அறிவுக் கையளிப்புடன் தொடர்புடைய ஆசிரியம்

அதிகாரமும் அறிவும் தொடர்பான தெளிவான புலக்காட்சி மார்க்சியச் சிந்தனைகளிலிருந்து மேலெழுந்தது. ஆனால் பேர்ண்ஸ்டின் அவர்கள் சமூகவியலாளர் துர்க்கைம்மின் வழி நின்று தமது ஆய்வுகளை முன்னெடுத்தார். கார்ல்மார்க்ஸ் வர்க்க நிலையிலே கல்வியையும் அறிவுக்கையளிப்பையும் அணுகினார். பேர்ண்ஸ்டின் சமூகக் குழுக்களின் அடிப்படையில் அவற்றை நோக்கினார். அதிகாரத்துக்கும் கல்விக்குமுள்ள தொடர்புகளை அவர் முக்கியப்படுத்தியமை ஒரு சிறப்பு அவதானிப்பு. ஆனால் அதிகார முறைமைக்கு அவர் இலட்சிய நிலையில் விளக்கம் தந்தார். அதேவேளை கார்ல்மார்க்ஸ் நடப்பியல் நிலையிலே விளக்கம் கொடுத்தார். பொருளுற்பத்தி முறைமை, சொத்துரிமை முதலியவற்றின் அடிப்படையாக அதிகாரம் மேலெழுதலை மார்க்ஸ் தருக்கப்படுத்தினார். புதிய கருத்துக்களையும் புதிய காட்சிகளையும் விளக்குவதற்கும் புதிய சொற்களும், புதிய சொல்லாடல்களும் தேவை என்ற கருத்து முக்கியமானதாகும். இத்துறையில் சமகால நிலவரங்களின் பின்புலத்தில் மேலும் கவனம் செலுத்த வேண்டியுள்ளது. ஏற்கெனவேயுள்ள பழைய சொற்களோடு கட்டுப்பட்டு நின்று புதிய கருத்தாடல்களை முன்னெடுக்க முடியாது.

இங்கிலாந்திலே கால்கோள் கொண்ட முற்போக்குக் கல்வி இயக்கம் புதிய மத்திய தரத்தினது விருப்பங்களை அடியொற்றியதாக அமைந்தது. மத்தியதர வர்க்கத்தின் எழுச்சிக்கு அடிப்படையாக இருப்பது கல்வியாகும். அவர்களுக்குரிய அறிவுக்கட்டமைப்பும் கையளிப்பு முறைமையும், ஆசிரியம் சார் வினைப்பாடுகளின் உருவாக்கமும் சமூகத்தில் ஓரங்கட்டப்பட்ட எல்லை நிலையினருக்கும் கூலித்தொழிலாளர்களுக்கும் பாதகமாயிருத்தலை அவர் நிதானத்துடன் சுட்டிக்காட்டினார். சமகாலத்தைய சூழலுக்கு அந்தக் கருத்து மிகுந்த பொருத்தமுடையதாயிருத்தலைத் தொடர்புபடுத்த வேண்டியுள்ளது.

"கட்புலனாகக் கல்வி" என்று அவர் பயன்படுத்தும் தொடர் ஏழைகளுக்கும் ஓரங்கட்டப்பட்டவர்க்கும் புலப்படாத கல்வி என்பதாகும்.

கல்வியைச் சமூகப் பின்புலம் மற்றும் மொழிப் பின்புலம் ஆகியவற்றின் அடிப்படையிலே நோக்க வேண்டியதன் அவசியத்தை அவரது ஆய்வுகள் விரிவாக முன்னெடுக்கின்றன.

**(குழந்தைக் கல்வி)**


**39ம் பக்கத் தொடர்ச்சி...**

நினைவுகளால் ஆட்கொள்ளப்பட்டு அவஸ்தைப்படும் பிள்ளைகள் தம்மைத் தாமே மனநோயாளர்களாக, புத்தி பிசகியவர்களாகக் கருதி விடுவார்கள். உடல்ரீதியான பாதிப்புக்கள் குழந்தைகள் வாழ்வில் பாரிய தாக்கங்களைச் செலுத்தி விடுகின்றன. இதேபோல தவிர்த்தல் மனநிலையானது பிரச்சினைகளை எதிர்கொள்ளும் மனத்திடத்தினைக் குலைத்து விடுகின்றது. இவ்வாறான பிள்ளைகளைப் பொறுத்தளவில், ஆசிரியரின் அன்பும் அரவணைப்பும் முக்கியமாகின்றது. அன்பு கிடைக்கும் போது பிள்ளைகள் தமது பாதுகாப்புத் தொடர்பான உணர்வுகளில் திருப்தியடைவர். ஆசிரியர்கள் அவர்களுடன் உரையாடும்போது நல்லதொரு செவிமடுப்பாளராக கேட்பதில் சலிப்படையாதவராக இருக்க வேண்டும். இவ்வாறான நிலை மனந்திறந்த உரையாடலுக்கு வழிவகுக்கும்.

அடுத்து மாணவர்களின் நம்பிக்கைக்கு உரியவராக ஆசிரியர் இருத்தல் வேண்டும். தான் மாணவர் மட்டில் கொண்டுள்ள அக்கறை பற்றி உணர்த்தல் அவசியம். இவற்றின் மூலம் தனக்கும் மாணவர்களுக்குமிடையில் உளவியல் ரீதியான நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது முக்கியமானதாகும். உளம் தொடர்பான நெருக்கம் மட்டுமல்லாது அம்மாணவனுக்குரிய கற்பித்தல் நுட்பங்கள் பற்றிய தெளிவும் ஆசிரியருக்கு இருத்தல் வேண்டும். புலன்கள் சார்ந்த நுட்பங்கள் பொதுவாக கற்பித்தலின்போது சிறந்த பெறுபேறு களைக் கொடுக்கும் என்பது யாவரும் அறிந்த உண்மை. எனினும் இவ்வாறான குழந்தைகளுக்கு அந்த நுட்பங்களினூடாக சொல்லப்படும் விடயம் வித்தியாசமாக அமைகிறது. இவர்களுக்கு பாதிப்புடன் தொடர்புடைய உருவக உபாயங்கள், செவிப் புல உபாயங்கள், மோப்பம் சார் உத்திகளைக் கையாளுதல் பொருத்தமானது.

அத்துடன் வரைதல், வாசித்தல், விளையாட்டுக்கள், இசை,சகபாடிகளுடனான உறவாடல் ஆன்மீக ஈடுபாடு, பக்தி கீதங்கள் இசைத்தல், கேட்டல் போன்றன மனதை இயல்பு நிலைக்குத் திருப்பும். குழுச் செயல் முறைகளினூடாக அனுபவப் பகிர்வினை ஏற்படுத்தல் சிறந்த உத்தியாக விளங்குகின்றது. மற்றும் தசைகளை ஆசுவாசப்படுத்தல், தசைநார்ப்பயிற்சி, சுவாசக் கட்டுப்பாட்டுப் பயிற்சிகள், விளையாட்டுக்கள் போன்றன உடல்ரீதியான குழப்பங்களை அனுபவிக்கும் குழந்தைகளை அமைதிப்படுத்தும் வழிகளாகும். இதற்கான பயிற்சிகளை ஆசிரியர் பெற்றுக்கொள்வதுடன் அவற்றை பொருத்தமான இடங்களில் பிரயோகிப்பதற்கும் உரிய மனப்பாங்கையும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

ஆகவே போராட்டங்களினால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளின் உளவியல், உடலியல் தேவைகள் பற்றிய கவனத்தைச் செலுத்துவதன் மூலமும் அவர்களுக்கான பொருத்தமான கற்பித்தல் முறைகளைக் கையாளுவதன் மூலமும் அவர்களை ஆற்றுப் படுத்துவதும் இயல்பு வாழ்வுக்குத் திருப்புவதும் பெற்றோர், குடும்பம் மற்றும் முன்பள்ளி முதல் பல்கலைக்கழகங்கள் வரை உள்ளோரின் முன்னுள்ள முக்கிய பணியாகும்.



செ.சேதுராஜா

# சக்திமிகு
# பாடசாலை முகாமைத்துவம்



இன்றைய உலகில் கல்வியின் எல்லைகளும் இலக்குகளும் விரிவடைய கல்விக்களநிலைச் செயற்பாடுகளும் கல்விசார் தொழில்நுட்பமும் அவற்றின் அளவிலும் தரத்திலும் அதிகரித்துச் செல்கின்றன. இலங்கையின் பொதுக்கல்விக் கட்டமைப்பில் பாடசாலைகளின் செயற்பாடுகளே மனிதவள அபிவிருத்திக்கு அடிப்படையாக அமைகின்றன. அடிப்படைக் கல்வியென்பது மாணவரின் எதிர்கால வாழ்க்கையினை நிர்ணயிக்கும் நிபந்தனையாக உள்ளது. இன்றைய நிலையில் பயனுறுதிமிக்க பாடசாலைகள் மனிதவாழ்வுக்கான பயிற்சிக்களங்களாக மிளிர்கின்றன. ஆற்றல்மிக்க ஆசிரியர்கள் மாணவர்களது மகிழ்ச்சிகரமான மனிதவாழ்க்கைப் பாணிக்கு அவர்களை நெறிப்படுத்தி வழிகாட்டுகின்றனர்.

இலங்கையின் கல்வி வரலாற்றில் கல்வி முகாமைத்துவக் கட்டமைப்புக்களும் நிர்வாக உத்திகளும் காலத்திற்குக்காலம் ஏற்படும் மாறுதல்களுக்கும் தேவைகளுக்குமேற்ப மாற்றமடைந்து வருகின்றபோதும் பாடசாலைகளின் பிரத்தியேகமான முகாமைத்துவக் கலாசாரங்களே நிலைத்து நின்று நினைவுகூறப்படுவதனையும் விதந்து பேசப்படுவதனையும் காணலாம். பாடசாலைகளின் பண்பாடு, பாரம்பரியம் என்பன அதிற்கல்வி பயிலும் மாண வர்களது வாழ்க்கை கோலங்களாகப் பரிணமிக்கின்றன. கல்விக்கொள் கைக்கும் அவற்றின்வழி தோன்றும் குறிக்கோள்களும் இலக்குகளும் பாடவிதான மாற்றங்களினூடாக காலத்திற்குக் காலம் வேறுபட்டுச் செல்லினும் பாடசாலை செல்லுதல் என்னும் அம்சமானது மாணவரிடம் மறைக்கலைத்திட்டமாக அமுலாகி மனித வாழ்வுக்குத் தேவையான அடிப்படைப் பண்புகளையும் திறன்களையும் அவர்களிடம் வளர்க்கின்றது.

ஒழுங்கு, ஒழுக்கம், நேரந்தவறாமை, கட்டுப்பாடு, கடமைகளுக்கு மதிப்பளித்து ஒழுகுதல், கட்டளையிடுவதற்குத் தகுதியுடையவராதல், குழுவாகத் தொழிற்படுதல், நிறுவன மேண்மை மனப்பாங்கு முதலாக வாழ்வியல் திறன்களை அறிமுகப்படுத்தி மாணவர்களிடம் அவற்றை வளர்த்தெடுக்கும் கருவூலம் பாடசாலைகளின் அன்றாடச் செயற்பாடுகளேயாகும். இத்தொழிற்பாடுகள்

பாடசாலைக்குப் பாடசாலை வேறுபடுவதுடன் காலகதியில் அப்பண்புத் தத்துவங்களே பாடசாலை களின் கலாசாரமாகிவிடுகின்றன.

பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வியில் தரமும் மாணவர்களிடம் வளர்த்தெடுக்கப்படும் வாழ்க்கைத் திறன்களும் தேர்ச்சிகளும் அவ்வப்பாடசாலைகளின் கீர்த்தி நாமங்களுக்கு *(Good Well)* அடிப்படையாக அமைகின்றன. பாடசாலைகளின் பயனாளிகளாகவும் பங்காளிகளாகவும் சுற்றுத்தொடராக நடிபங்காற்றும் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், உதவிவழங்கும் நிறுவனங்கள், அரசியல்வாதிகள் முதலான பகுதியினரைக் கொண்ட பாடசாலைச் சமூகம் பாடசாலைகளின் கீர்த்தி நாமங் களுக்கும் சாதனைகளுக்கும் பக்கபலமாக விளங்குகின் றன. பாடசாலை வளங்களையும் பாடசாலைச் சமூகத்தி னையும் பயன்படுத்தி அதே பாடசாலைச் சமூகத்திற்கு உச்சப்பயனளிக்கும் தரமான கல்வியினையும் வாழ்க் கைத் திறன்களையும் வழங்க வேண்டிய பொறுப்பும், கடப்பாடும் பாடசாலை முகாமைத்துவத்திற்கே உரியனவாகும். பாடசாலை முகாமையாளரான அதிபரின் திறனிலும், தூரநோக்குகளிலும் அறிவியல் சார்ந்த முகாமைத்துவ அணுகுமுறைகளிலுமே பாடசாலை களின் வெற்றி தங்கியுள்ளது.


பாடசாலைச் சமூகத்தின் நிகழ்கால, எதிர்கால வாழ்வியல் தேவைகளை நிறைவு செய்யவல்ல செயற் பாடுகளைக் கொண்ட பாடசாலை சக்திமிகு பாட சாலைகள் *(Dynamic Schools)* எனலாம். தனது கல்விச் சமூகத்தின் பொருளாதார, அறிவியல், மானிடப் பண்பியல், ஆன்மீகம் சார்ந்த தேவைகளை நிறைவு செய்யக்கூடிய திறன்களை உருவாக்கும் பாடசாலை முகாமைத்துவம் சக்திமிகு பாடசாலை முகாமைத்துவம் *(Dynamic School Management)* எனப்படும். இலங்கை யில் நீண்டகாலமாக பாடசாலைகளின் தரத்திலும் வளநிலையிலும் கீர்த்தி நாமங்களிலும் இருந்துவரும் ஏற்றத்தாழ்வுகள், பன்முகத்தன்மைகள் காரணமாக பாடசாலை சமூகங்களிடையே உருவான ஏற்றத்தாழ்வு களை நீக்கி அனைத்து நிலைமைகளிலும் சமமான உயர ளவான தரத்தினை உருவாக்கும் கல்விமுயற்சிகள் இலங் கையில் கடந்த இரு தசாப்தங்களாகத் தீவிரமாக முன் னெடுக்கப்படுகின்ற போதிலும் பாடசாலைகளிடை யேயான ஏற்றத்தாழ்வுகளும் இருமைத்தன்மையும் தொடர்ந்து வளர்ந்து முனைப்படைந்து வருகின்றன. இலங்கையில் இருபத்தோராம் புதிய நூற்றாண்டின் ஆரம்பம் முதல் கல்வியின் தரமேம்பாட்டினை முதல் நோக்காகக் கொண்ட கல்வி முயற்சிகள் கோட்பாட்டு ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இலங்கையில் கல்வியானது ஆரம்ப வகுப்பு முதல் பல்கலைக்கழகம் வரை இலவசமாக வழங்கப்படுகின்ற போதிலும் கல்வியின் தரத்தைப் பொறுத்தமட்டில் இருமைத்தன்மை நீடித்த வண்ணமேயுள்ளது. வசதி படைத்தோரும் கல்விகற்கும் பாரம்பரியமுடையோரும் எவ்வகையிலாவது ஒப்பீட்டடிப்படையில் தரம்கூடிய கல்வியைத் தமது பிள்ளைகளுக்குப் பெற்றுக் கொடுக் கும் அதேவேளை ஏழைமக்களும் கல்வியில் எவ்வாறு கவனம் கொள்வது என்பதனை அறியாத மக்களும் தமது பிள்ளைகளுக்குத் தரமான கல்வியைப் பெற்றுக்கொடுக் கத் தவறுகின்றனர்.

இலங்கையில் தற்போது 10,429 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் 9,678 பாடசாலைகள் அரசாங்கப் பாடசாலைகளாகும். ஏனைய பாடசாலைகள் 751 ஆகும். இவற்றில் மொத்தமாக 4,098,000 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இவர்களுக்கு 219,000 ஆசிரியர்கள் கல்விகற்பித்து வருகின்றனர். மாணவ ஆசிரியர்கள் விகிதம் சராசரி 19:1 ஆகும். கல்வியை விரிவாக்கும் கொள்கைக்கமைவாக கல்வி வழங்கும் பணியாளர்கள தும் கல்வி பெறும் பயனாளிகளதும் தொகை எண்ணிக் கையளவில் அதிகரித்துள்ள போதிலும் கல்வியைத் தரரீதியில் நோக்குகின்றபோது முனைப்பான ஏற்றத் தாழ்வுகளே வெளிப்படையாகத் தென்படுகின்றன. கொள்கையளவில் கல்வியில் சமத்துவமும் சமசந்தர்ப்ப மும் வலியுறுத்திப் பேசப்படுகின்ற போதிலும் நடை முறையில் நகரப்புறப் பாடசாலைகளில் அல்லது வசதி வாய்ப்புக்கள் அதிகமுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்கள் கிராமப்புற அல்லது நகர் ஒதுக்குப் புற வசதி குறைந்த பாடசாலைகளில் கல்விக்கான வசதி வாய்ப்புக்கள் குறைவாகவேயுள்ளன.

மாணவர்களது பாட அடைவு மட்டம் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளில் பங்குபற்றித் தேர்ச்சி பெறும் வாய்ப்புக்கள், பௌதிக மற்றும் மனிதவளச் செறிவுடைய பயிற்சிகள் என்பவற்றில் வளர்ச்சியடைந்த பாடசாலைகள் தொடர்ந்தும் முன்னிலை பெற வளர்ச்சி குன்றிய பாடசாலைகளில் இவற்றின் நிலை தொடர்ந்தும் பின்தங்கியிருக்கும் நிலைகள் பொதுவாகவே காணப்படு கின்றன. நாடுகளிடையே பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளில் காணப்படுகின்ற "நாசச்சக்கரம்" போன்று இலங்கையின் கல்வித்துறையிலும் வளர்ச்சி குன்றிய பாடசாலைகளிலே இந்த "நாசச்சக்கர: விளைவு" முனைப்படைந்து காணப்படுகின்றது. வளப்பற்றாக் குறை, தேர்ச்சி மிக்க ஆசிரியர்களின் பற்றாக்குறை, அதிபர்களது முகாமைத்துவத்திறன் குறைபாடு, கல்வி யில் கவனம் குறைவான வறிய குடும்பங்களைச் சேர்ந்த மாணவர் உள்ளீடு, அடைவுகுறைவான மாணவர்களின் அனுமதி, கல்வி நிர்வாகத்தினரின் கவன வீச்சுக்குள் அகப்படாமை, பெரிய, வசதியான பாடசாலைகளின் கீர்த்தி நாமக்கவர்ச்சி முதலான காரணிகளால் வசதிக்குறைவான பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்ந்தும் பின்தங்கியிருக்க வேண்டியுள்ளது.

இலங்கையின் அனைத்துப் பாடசாலைகளிலும் ஒரேவிதமான கல்வித் தரத்தினை வளர்த்தெடுப்பதற் கான அரச முயற்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டு வருகின்ற போதிலும் கல்வியில் தனியார்




துறைக்குரிய பண்புகள் அதிகரித்து, உண்மையாகவே வசதியான மற்றும் நடுத்தர வருமான வகுப்பைச் சேர்ந்த பெற்றோர் கள் தமது பிள்ளைகளின் கல்விக்காகத் தரம் நாடிப் பணம் செலவு செய்யத் தயாராக இருப்பதனால் அப் பாடசாலைகளின் கல்விச் செயற்பாடுகள் தரவளர்ச்சியு டையனவாகும் வாய்ப்புள்ளது. இன்று இலங்கையில் குறிபாக வடமாகாணத்தில் இவ்வாறான பாடசாலைகள் தத்தம் அளவில் சக்திமிகு பாடசாலைகளாகத் தோற்ற மளிக்கின்ற மயக்க நிலை காணப்படுகின்றது. அத்துடன் பொதுப்பரீட்சை முடிவுகளும் மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்தில் மிகுந்த நிதிமூலத்துடனும் அதிக பயிற்சி வசதிகளுடனும் முன்னெடுக்கப்படும் இணைப் பாடவிதானப் போட்டிகளில் பெறப்படும் வெற்றி அடை வுகளும் பாடசாலைகளின் சக்தியினை வெளிக்காட்டும் சுட்டிகளாகக் கொள்ளப்படுகின்றன. இச்சுட்டிகளின் புள்ளிவிபரக் கணக்குகளை தார்மீகம் சார்ந்த மீள் மதிப்பீட்டுக்கு உட்படுத்துதல் சாலச் சிறந்ததாகும். இவ் வாறான போக்கு மாணவர்கள், ஆசிரியர்கள் மத்தியில் நேரான உந்துதல்களை உண்டுபண்ண வல்லனவாய் இருப்பினும் இதன் மறுபக்க விளைவுகள் வறிய, வளங் குன்றிய பாடசாலைகளின் வளர்ச்சியில் பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தக்கூடும். இவ்வறிய வளங் குன்றிய பாடசாலைகளின் வளர்ச்சிகள் முறையான மதிப் பீட்டுக்கோ மதிப்பளிப்பிற்கோ உட்படுத்தப்படுவதில்லை என்னும் விமரிசனம் கல்வி நோக்குடையோரிடையே தொடர்ந்து இருந்து வருகின்றது. வர்த்தக உலகில் பல்தேசியக் கம்பனிகளில் காணப்படும் போட்டி மற்றும் தனியுரிமைப் பண்புகள் போன்று பெரிய பாடசாலைகளி டையேயும் போட்டாபோட்டி நிலைமைகள் காணப்படு கின்றன. இது கல்வியின் ஏற்றத்தாழ்வற்ற தரமேம்பாட் டுக் கொள்கைக்கு இடையூறானதாகும். இவ்வாறாகக் கல்வியின் பொது இலக்குகளுக்கும் குறிக்கோள்களுக்கும் மாறான செயற்பாடுகளுடன் கல்வி அபிவிருத்தி நோக்கி கலந்து முன்னெடுக்கப்படும் பாடசாலைகளின் முகா மைத்துவ நடவடிக்கைகள் அதிபர்களது திறன்களையும் முகாமைத்துவ வலுவினையும் வெளிப்படுத்தும் காட்டி களாக குறுகிய கருத்தில் இன்று பார்க்கப்படுகின்றன. இவ்வாறான குறுக்கு நோக்கில் பாடசாலைகளைச் சக்தி மிகு பாடசாலைகளாக வளர்த்தெடுக்கும் முனைப்பில் அதிபர்கள் தொழிற்பட்டு வருவதனை கல்வியில் தரமேம் பாட்டிற்கான உத்வேகமாகக் கொள்வது கடினம். பாட சாலைகளின் சக்திமிகு முகாமைத்துவம் என்பதன் உண்மையான நோக்குப் பற்றிய தெளிவு பாடசாலைச் செய்றபாடுகளூடாக வெளிப்படுத்தப்படுவதனை உறுதிசெய்ய வேண்டியது மிகமிக அவசியமாகின்றது.

பாடசாலை முகாமைத்துவத்தில் மனிதவள முகா மைத்துவமென்பது மற்றெல்லா நடவடிக்கைகளை விடவும் முக்கியத்துவம் உடையதாகும். பாடசாலை களில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஏனைய கல்வி நடவடிக்கைகள் யாவும் மனிதவள முகாமைத்துவத்தின்

பலம் மற்றும் பலவீனங்களினால் தாக்கமடைகின்றன. இன்றைய கல்வி இலக்குகள் எய்தப்படுவதனை நோக் காகக் கொண்ட கல்வி முகாமைத்துவச் செயற்பாடுகளில் பாடசாலை முகாமைத்துவமென்பது மனிதவளத்தி னூடாக மனிதவளத்தினை அபிவிருத்தி செய்கின்ற சக்திமிகு களநிலைச் செயற்பாடாகும். எனவே பாடசா லைப் பணியாளர்களது குறிப்பாக ஆசிரியர்களது தரத்தினை அபிவிருத்தி செய்வதன் மூலம் பாடசாலை களை அதிபர்கள் சக்திமிகு பாடசாலைகளாக வலுவூட்டலாம்.

பாடசாலை அதிபர்கள் பின்வரும் முகாமைத்துவச் செயற்பாடுகள் மூலம் தமது பாடசாலை சக்திமிகு பாட சாலையாவதற்கான அடிப்படையினை ஏற்படுத்தலாம் என இனங்காணப்பட்டுள்ளது.

(1) பிரச்சினை தீர்த்தலுக்கான நிறுவனச் சூழலினை யும் அறிகைக் கட்டமைப்பினையும் இலக்கு நிர்ணயித்தலையும் ஆசிரியர்களினூடாக மேற் கொள்வதனை உறுதிப்படுத்தல்.

(2) அனைவரதும் பங்களிப்புடனான தீர்மானமெடுத் தல் பொறிமுறையினை உருவாக்குதல்.

(3) சகபாடிகளினூடனான தொடர்புகளையும் தொடர்பாடலினையும் பெறுவதற்கான வாய்ப்புக் களை வழங்குதல்.

(4) ஆசிரியர்களை ஏற்றுக்கொள்ளலும் அவர்களுக்கு மதிப்பளித்தலும்.

(5) சகல முன்னேற்ற முயற்சிகளும் செயற்பாடுகளும் நிலைபெறுவதற்கான சகல வளங்களையும் தொழில்நுட்ப ஆதரவுகளையும் பெற்றுக்கொடுத்தல்.

(6) உண்மையான வாண்மைவிருத்திச் செயற்பாடு களை விருத்தி செய்தல்.


இந்த ஆறு அடிப்படை முகாமைத்துவக் கருமங் களையும் பாடசாலையின் அதிபர் சரிவர மேற்கொள் வாராயின் பாடசாலையின் கல்வித்தரமும் கலாசாரப் பண்புகளும் மேலோங்கி சக்திமிகு பாடசாலை உருவாக வழியேற்படும். இவ்வாறான முகாமைத்துவப் பொறி முறை நுட்பங்கள் பின்பற்றப்படும் போது ஏனைய கல்வி வளங்கள், சேவைகள் முதலியன இவற்றிற்குத் துணை யாகப் பிரயோகிக்கப்படலாமே தவிர தனியாக அவற்றை ஏற்பாடு செய்வதன் மூலம் மாத்திரம் கல்வியில் எதிர் பார்க்கும் தரத்தினை எய்திவிட முடியாது.

இன்று இலங்கையில் தரமான கல்வியை மாணவர் களுக்கு வழங்குவதனை முன்னிலைப்படுத்தி கல்வி முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதனை அவதானிக்க லாம். "தரமான வாழ்வுக்குத் தரமான கல்வி" என்னும் சுலோகம் முனைப்புற்று புதிய கல்விச்சீர்திருத்தச் செயற்பாடுகள் செறிவாக முன்னெடுக்கப்படுகின்றன. பாடசாலைகளில் வழங்கப்படும் கல்வியானது மாணவர் களிடம் அறிவினையும் அதனைப் பிரயோகிக்க வேண் டிய திறன்களையும் வாழ்க்கைக்கான தேர்ச்சிகளையும் அனுபவப் பயிற்சிகளினூடாக வழங்கி ஆளுமைமிக்க தும் நடைமுறை உலகிலும் எதிர்கால வாழ்விலும் பொரு ளாதார வலுக்கொண்ட, மானிடப்பண்புமிகு ஆளணியை உருவாக்கும் இலக்குகளை நோக்கி நகர்த்தப்படுகின்றது. இக்கல்வி இலக்குகள் எவ்வாறெனினும் அடையப்பட வேண்டியவை என்பதில் இரு கருத்துக்களுக்கு இட மில்லையாயினும் இந்த இலக்கு நோக்கிய செயற்பாடு களுக்கான களநிலை வசதிகள், வளங்கள் போதுமான வையா? அன்றியும் பிரயோகிக்கப்படும் வளங்களிலி ருந்து உரிய பயன்கிடைக்கின்றதா? என்பதும் இன்று விமரிசனத்துக்கு உரியனவாயுள்ளன.

இலங்கையின் பொதுக்கல்வித்துறையில் பாட சாலைக்கல்வி நடவடிக்கைகளும் பொது மதிப்பீட்டு முறைகளும் நவீன கல்வி இலக்குகள் நோக்கி ஓரளவு மாற்றமடைந்துள்ள போதிலும் பொதுப் பரீட்சைகள் சார்ந்த மதிப்பீட்டு முறைகள் இன்னமும் பெரும்பாலும் அறிதல் சார்ந்தவையாகவேயுள்ளன. பாடசாலைகளில் மாணவர்கள் பெறுகின்ற ஒழுக்க விழுமியப் பண்பு களோ அல்லது மானிடக்கலாசார வெளிப்பாடுகளோ இதுவரை மதிப்பீட்டுக்குட்படுத்தப்பட்டு சான்றிதழ் படுத்தப்படாமை ஒரு பெரும் குறைபாடாகும். மாண வர்களுக்கு அறிவையூட்டும் செயற்பாடுகளை பாட சாலைகள் மாத்திரமன்றி தனியார் கல்வி நிலையங்களும் தனிப்பட்ட போதனாசிரியர்களும் மேற்கொள்கின்றனர்.


ஆனால் மாணவர்களது முழுநிறைவான ஆளுமை விருத்திக்குரிய அனுபவங்களை மாணவர்கள் பாட சாலைகளிலிருந்து மாத்திரமே பெறவேண்டியுள்ளது. மாணவர்கள் பொதுப் பரீட்சைகளில் பெறுகின்ற அதிகூடிய பெறுபேறுகளுக்காக அனைத்துத் தரப்பாரும் உரிமை கோருகின்ற அதேவேளை அவர்களது ஒழுங்கு, ஒழுக்கம், வாழ்க்கைத் தேர்ச்சித் திறன்கள் முதலானவற் றிலான குறைபாடுகளுக்கு எத்தரப்பாரும் பொறுப்புக் கூற முன்வருவதில்லை. மாணவர்களது உண்மையான வாழ்க்கைக்குரிய நலன்சார்ந்த விடயங்களில் போதி யளவான வினைதிறன் வெளிப்பாடுகள் காணப்படாமை அவதானிக்கப்பட்டுள்ளது.

பாடசாலைகள் சக்திமிகு பாடசாலைகளாக மாற்றமடைந்தால் மாத்திரமே இவை சாத்தியமாகும். பாடசாலைகள் தேவையான வளவசதிகளுடனும் ஆளணிவளத்துடனும் சிறப்பான முகாமைத்துவக் கலா சாரத்துடனும் காணப்பட்டால் மாத்திரமே கல்வியின் இன்றைய இலக்குகளை அடைய முடியும். இவற்றில் ஒரு சிலவற்றை மாத்திரம் கொண்டிருப்பதானது பூரண சக்திமிகு பண்பாகாது. ஆரோக்கியமானதும் நிலைத்து நிற்கும் அபிவிருத்திப் பாங்கினைக் கொண்டனவுமான சக்திமிகு பாடசாலைகளின் உருவாக்கத்திற்கு வினைத் திறனும் விளைதிறனும் மிக்க முகாமைத்துவமே வழிசமைக்கும்.



அன்பு ஜவஹர்ஷா

# ஆசிரியர்களின் பிரச்சினைகளும் தொழில் சங்கங்களும்



1994.10.06 முதல் ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை ஆசிரியர் சேவை தொடர்பாக நூற்றுக்கு மேற்பட்ட சுற்றறிக்கைகளும் விளக்கங்களும் வெளியிடப்பட்டுள்ளபோதும் இன்னும் தொடரும் முரண்பாடுகளுக்கு தீர்வு கிடைத்ததாகத் தெரியவில்லை.

தரமிக்க ஒரு சேவையாக உருவாக வேண்டிய இச்சேவையின் ஏற்பாடுகளும், முரண்பாடுகளும் கவனிக்கப்படாத நிலையில் சம்பளப் போராட்டமாக மட்டும் இனங்காணப்பட்டு ஏளனமாகப் பார்க்கும் நிலையிலேயே உள்ளது.

1997ஆம் ஆண்டு பி.சி பெரேரா சம்பள ஆணைக்குழுவானது தோற்றுவித்த முரண்பாடு கடந்த 14 வருட காலமாகத் தீர்க்கப்படாமை காரணமாக கடந்த காலங்களில் பல்வேறு வகையான போராட்டங்களில் ஆசிரியர் தொழில் சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த நாற்பது வருட காலமாக தொழிற்சங்கம் உட்பட இச்சேவை தொடர்பான பல்வேறு விடயங்களில் ஈடுபாட்டுடன் உள்ளவன் என்ற வகையிலும், இச்சேவை தொடர்பான முதலாவது நூலையும் நூற்றுக் கணக்கான கட்டுரைகளையும் எழுதியவன் என்ற வகையிலும் சில விடயங்களை ஒளிக்காது எழுத வேண்டியுள்ளது. இது யாரையும் அல்லது எந்த தொழில்சங்கத்தையும் சாடுவதாக எண்ணக்கூடாது. அப்படியான எந்தத் தேவையும் கட்டுரையாளருக்கு இல்லை. ஆனால் யாருக்கு தொப்பி பொருந்துமோ அவர்கள் போட்டுக் கொள்வது பற்றி ஆட்சேபனை இல்லை.

ஆசிரியர் சேவை உருவாக்கத்தில் ஈடுபட்ட மூத்த அனுபவம்மிக்க தொழில் சங்கவாதிகள் இன்று சேவையில் இல்லை. பத்து அல்லது பதினொரு தொழிற்சங்கங்களே இதில் ஈடுபட்டு இதற்கான வரைபை பூரணமாக்க ஒத்துழைத்தன.

கல்விச் சேவை, அரச சேவை தொடர்பான ஆக்கங்களை எழுதுவதற்காக தமிழ், சிங்கள, ஆங்கில பத்திரிகைகளை நூலகத்திலும்,

இணையத்திலும் தேடிப்படித்துக்கொண்டு இருப்பதால் பல விடயங்களை அறிய முடிகின்றது. கடிதத் தலைப்பில் பெயர் இருந்தால் அது தொழிற்சங்கமென்று கருதி பத்திரிகைகளும் அறிக்கைகளை வெளியிடுகின்றன.

குறிப்பிட்ட தொகை அங்கத்தவர்களைக் கொண்டு இருக்கின்றதா? பதிவு செய்யப்பட்டுள்ளதா? தொடர்ச்சியாக இயங்கி வருகின்றதா? ஆண்டுக்கூட்டங்கள் நடைபெற்று நிருவாகிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களா? என்று பத்திரிகைகள் பார்ப்பது இல்லை. முரண்பாடு அல்லது கோரிக்கை என்று அறிக்கை வந்தால் பத்திரிகைகள் பிரசுரிக்கின்றன. இவை மொழி, பிரதேச, இன, தொழில் வகுதி சார்ந்த சங்கங்களாக இருக்கலாம்.

ஆசிரியர்களின் உரிமைகள் தொடர்பாக மிக மோசமான நிலைபாட்டிலேயே கல்வியமைச்சு இயங்கி வருகின்றது. இன்று தோன்றியுள்ள சகல பிரச்சினைகளுக்கும் கல்வியமைச்சும் அரசாங்கமுமே பொறுப்பெடுக்க வேண்டும். இவைகள்விடும் தவறுகளால் வழிதெரியாமல் பிழையான முன்னெடுப்புக்களில் தொழிற்சங்கங்கள் ஈடுபட்டு வருகின்றன.

க.பொ.த (சா), க.பொ.த (உ) பரீட்சைக் காலங்களிலும் கோரிக்கைகளும் அறிக்கைகளும் சூடுபிடிப்பதும் பிறகு ஓய்ந்துவிடுவதும் ஆசிரியர் சேவை ஆரம்பித்த காலம் தொட்டு வழங்கிவிட்டன. 2008ஆம் ஆண்டு இந்த போராட்டம் க.பொ.த (உ) பரீட்சை விடைத்தாள் பணி திருத்தல் பகிஸ்கரிப்பு வரை சென்று உச்ச நீதிமன்றத் தீர்ப்பால் தணிந்தது. 2008.07.01 தொடக்கம் புதிய பிரமாணக் குறிப்பும் மேலதிக சம்பள ஏற்றமொன்றும் வரும் என்று எதிர்பார்த்து நாற்பது மாத காலமாக ஏமாந்த நிலையிலேயே ஆசிரியர்கள் உள்ளார்கள்.

2010ஆம் ஆண்டு ஜனவரி 06/2006 (VIII) இலக்கச் சுற்றறிக்கை கூட வெளியிடப்பட்டது. 2011 ஆம் வரவு செலவுத் திட்டத்தில் இச்சுற்றறிக்கை 2011.01.01க்கு பிற்போடப்பட்டது. புதிய ஆசிரியர், அதிபர் சேவைப் பிரமாணக் குறிப்புக்களை கல்வியமைச்சு, தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழு, பொது நிருவாக அமைச்சு அதிகாரிகள் சேர்ந்து தயாரித்துள்ளார்கள். இது உத்தியோகபூர்வமாக கடந்த வாரமே ஆசிரியர்கள் தொழிற்சங்கங்களுக்கு வழங்கப்பட்டது. கல்வியமைச்சின் www.moe.gov.lk இணையத் தளத்திலும் வெளியிடப்பட்டுள்ளது.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டு காலமாக தொழிற்சங்கவாதிகளின் கைகளில் இது நடமாடுகின்றது. நான்கூட இரண்டு வருட காலமாக இது தொடர்பாக பல கட்டுரைகள் எழுதியுள்ளேன.

ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இது தொடர்பாக ஒரு திறந்த கலந்துரையாடலை நடத்தாமல் தங்களோடு கந்தாலோசிக்காமல் தயாரிக்கப்பட்டது என்ற கௌரவப் பிரச்சினை மட்டும் சொல்லி அரசுடன் சேர்ந்து காலம் கடத்துகின்றன. கடந்த மாதம் பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பளப் போராட்டத்தின்போது சில ஆசிரிய சங்கங்கள் தாமும் பரீட்சை விடைத்தாள் திருத்தல் பணியைப் பகிஸ்கரிக்கப் போவதாக அறிக்கை விட்டன.

வேறு மூன்று சங்கங்கள் ஆசிரியர் பிரச்சினைகளைத் தீர்க்காவிட்டால் மேற்படி பணியைப் பகிஸ்கரிக்கப் போவதாக கூறி வந்தன. பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பள பிரச்சினை தீர்க்கப்பட்டவுடன் சகலதும் நிசப்தமாகிவிட்டது. தேவையற்ற வகையில் மாணவர்களினதும், பெற்றோர்களினதும் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்வதோடு, ஆசிரியர்களின் தொழிற்சங்கப் போராட்டங்களும் மலினமாக்கப்பட்டு விடுகின்றது இந்தவாறான அறிக்கைகளால் புதிய பிரமாணக் குறிப்பில் இது சேவையின் குணாம்ச தன்மையை வளர்க்கக் கூடிய பல்வேறு நல்ல விடயங்கள் உள்ளன. சம்பள விடயம் தேசிய சம்பள பதவியணி ஆணைக்குழுவின் இறுதித் தீர்மானமாகும்.

கல்வியமைச்சர் கடந்த மாதம் 26ஆம் திகதி பல ஆசிரியர் சங்கங்களை திடீரென அழைத்து பின்வரும் விடயங்கள் தொடர்பாக 31ஆம் திகதி அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிப்பதாக உறுதியளித்தார். ஆசிரியர் தொழிற்சங்கங்கள் இக்கலந்துரையாடலில் விடுத்த கீழ்வரும் கோரிக்கைகளை நியாயமென்று ஏற்றுக்கொண்டு உறுதியளித்துள்ளார்.

- பிசி எப்ஆர் /282/2008 இலக்க உச்சமன்ற வழக்குத் தீர்ப்பின்படி மேலதிக சம்பள ஏற்றத்தையும் நிலுவையும் வழங்க வேண்டும்.
- ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வை வழங்க 2009 ஆம் ஆண்டு வரவு செலவுத்திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 300 கோடி ரூபாய்களைப் பயன்படுத்தல்.
- ஆசிரியர் தொழிற்சங்கங்களின் ஆலோசனை பெறாமல் தயாரிக்கப்பட்ட புதிய பிராமணக் குறிப்பு தொடர்பான விடயம்.
- இலங்கை அதிபர் சேவை, கல்வி நிருவாக சேவை பதவி உயர்வுகளை அமுல் நடத்துதல்.
- 2010-12-31 வரை ஆசிரியர் சேவை பதவி உயர்வுக்கான காலக்கெடுவை நீடித்தல்.
- வழங்கப்படாதுள்ள நிலுவைகளை ஆசிரியருக்கு வழங்கல்.
- இடைக்கால சம்பளத் திட்டத்தை அமுல் நடத்தல்.

மேற்சொல்லப்பட்ட கோரிக்கைகளின் உள்ளடக்கம் தொடர்பாக கல்வியமைச்சர் பூரணமாகத் தெரிந்து கொண்டுதான் வாக்குறுதியளித்தாரோ இல்லையோ என்பது தெரியாது

இலங்கை ஆசிரியர் சங்கம், கல்வி உத்தியோகஸ்தர் சங்கம், அகில இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட ஆறு சங்கங்கள் இக்கோரிக்கைகளை முன்வைத்து இருந்தன. இனி இக்கோரிக்கைகளை பார்ப்போம்.

06/2006 (VIII) இலக்கச் சுற்றறிக்கைச் சம்பளத் திட்டம் கல்வியமைச்சால் சமர்ப்பிக்கப்பட்டபோதே அதற்கு மேலதிக சம்பள ஏற்றமொன்றை வழங்குமாறு உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. இதை ஏற்றுக்கொண்டே போராட்டம் கைவிடப்பட்டது. 2008.07.01 தொடக்கம் செயற்பட வேண்டிய இந்த சுற்றறிக்கையை பட்டதாரி ஆசிரியர் சங்கங்கள் அமுல் நடத்துமாறு கோர, மேல் சொல்லப்பட்ட சங்கங்கள் எதிர்க்கவே அது கிடப்பில் போடப்பட்டது. அரசால் கபடத்தனமாக 2011-01-01 க்கு பிற்போடப்பட்டு விட்டது.

இடைக்காலச் சம்பளத்திட்டம் எப்போதோ புறக் கணிக்கப்பட்டதொன்று. அதை அமைச்சரவை கூட ஏற்றுக்கொள்ளவில்லை. ஆகவே கலாவதியான ஒன்றை வைத்து கோரிக்கை விடுவது சாத்தியமாகும் விடயமல்ல.

2008.07.01 தொடக்கம் புதிய பிரமாணக் குறிப்பை உருவாக்கியிருந்தால் ஆசிரியர்களுக்கு விரைவாகப் பதவி உயர்வும் சம்பள உயர்ச்சிப்படி கிடைத்து இருக்கும். 300 கோடி ரூபாய்களை விழுங்கிவிட்டபடியால் தான் 2011.01.01 தொடக்கம் இது பின்போடப்பட்டது. ஆசிரியர்களுக்கு நன்மை செய்யவேண்டும் என்றால் 06/ 2006 (VIII) இலக்கச் சுற்றறிக்கையில் உள்ளது போல 2008.07.01 தொடக்கம் செயல்படுத்துமாறு கோரிக்கை விட வேண்டும். இதையே உச்ச நீதிமன்றத் தீர்ப்பு சொல்கின்றது. 2010.12.31 வரை சலுகையை நீடிக்குமாறு கோருவது 2011.01.01 வரை பிற்போட்டதை ஏற்றுக் கொண்டது போல உள்ளதல்லவா.

கல்வியமைச்சரும் நல்ல பிள்ளையாகி 31ஆம் திகதி அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிப்பதாக வாக்குறுதியளித்தார். ஆனால் அமைச்சரவைப் பத்திரம் தயாரிக்கப்படவில்லை. கோரிக்கை மனுவொன்றே தயாரிக்கப்பட்டது. அதற்கு என்ன நடந்ததோ தெரியவில்லை.

கல்வி அமைச்சர் தமது வாக்குறுதியைக் காப்பாற்ற வில்லை என்று கூறி பின்வரும் தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப் போவதாக செப்டெம்பர் முதல் வாரத்தில் அறிக்கை விட்டன.

இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கம், அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம், தேசியக் கல்விச் சேவைச் சங்கம், சுதந்திர ஆசிரியர் சேவைச் சங்கம், இலங்கை அதிபர் சேவைச் சங்கம், தேசிய கல்வி அதிபர் சேவைச் சங்கம், பயிற்றப்பட்ட கல்வி உத்தியோகஸ்தர் சங்கம், பயிற்றப்பட்ட ஆசிரியர் தொழிற்சங்கம், இலங்கை பிரிவேனா ஆசிரியர் சங்கம், ஐக்கிய இலங்கை கல்விச் சேவையாளர் சங்கம், இலங்கை பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கம் இலங்கை விவசாய விஞ்ஞான, மனையியல் டிப்ளோமா ஆசிரியர் சங்கம் ஆகிய சங்கங்களே ஊடகங் களுக்கு மேற்படி அறிக்கையை விடுத்துள்ளன.

இதில் உள்ள பெரும்பாலான சங்கங்களின் பெயர்கள் இப்போதே அறியப்படுகின்றன. இவைகள் எந்த வகையான போராட்டத்தில் ஈடுபடப் போகின்றன என்பதை இன்னும் அறிவிக்கவில்லை.

2010.12.31 வரை பதவி உயர்வுக்கான காலகெடுவை நீடிக்கும் கோரிக்கையை அரச சேவை ஆணைக் குழுவுக்கு எப்போதோ கல்வி அமைச்சு அனுப்பி விட்டது. அனேகமாக இதற்கு அனுமதி வழங்க வேண்டும். ஏனென்றால் புதிய ஆசிரியர் சேவை பிரமாணக் குறிப்பு 2011.01.01 தொடக்கம் செயல்படவுள்ளதால் இது சாத்தியமாகும்.

மேல்சொல்லப்பட்ட விடயங்களில் ஆழ, அகலங் களை அறியாத அப்பாவி ஆசிரியர்கள் அரசாங்க பிரச்சாரங்களிலும், வெளியாகும் ஆக்கங்களிலும் மயங்கி சம்பளம் கிடைக்கும் என எதிர்பார்த்துக்கொண்டு இருக்கின்றார்கள். அது மட்டுமே அவர்களுக்கு தேவை யாகவுள்ளது.

தமிழ், முஸ்லிம் பிரதேசங்களிலும், தேசிய மட்டத்தி லும் இயங்கும் சிறுபான்மையினரின் சங்கங்கள் சில சட்டப்படி இயங்கி வந்தாலும் பிரமாணக் குறிப்பு போன்ற கொள்கை வகுப்பு விடயங்களில் மௌனமாக அடக் கியே வாசித்து வருகின்றன. இதற்கு மொழி பிரதான தடையாகவுள்ளது. சில கலந்துரையாடல்களில் தெரிவிக் கப்படும் பயனுள்ள கருத்துக்கள்கூட மொழிபெயர்ப்புத் தடைகளால் உரிய கவனத்தைப் பெறுவதில்லை.

நான் அடிக்கடி குறிப்பிடுவது போல சம்பள அமைப்பானது முற்றாக திருத்தியாக இல்லாவிட்டாலும் பல பயனுள்ள விடயங்கள் புதிய பிரமாணக் குறிப்பில் உள்ளன. சகலரும் பட்டதாரி ஆசிரியராக வேண்டிய ஊக்குவிப்புக்கள் உள்ளன. திறமையான ஆசிரியர்கள் விரைவாகப் பதவி உயர்வு பெற வழிவகைகள் உள்ளன.

இதை தொழிற்சங்கங்கள் இன்னும் ஆழமாக ஆராய்ந்து தீர்மானமொன்றுக்கு வரவேண்டும். 2011.01.01 கடந்து 9 மாதங்கள் ஆகிவிட்டன. 2012ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டமும் வரப்போகின்றது. புதிய ஆசிரியர் சேவை செயற்பாட்டுத் திகதி 2012.01.01க்கு கொண்டு சென்றால் கூட ஆச்சரியம் இல்லை.


ஆசிரியர்களின் பிரச்சனைகளை ஆழமாக, முதிர்ச் சியுடன், சாத்தியமான நிலையில் அணுகவேண்டிய தேவையுள்ளது. பயிற்றப்பட்ட, பட்டதாரி, டிப்ளோமா என்ற பேதங்களை மறந்து சகல ஆசிரியர்களும் பயன் பெறத் தக்க வகையில் இயங்க வேண்டிய அவசியமுள் ளது. இல்லாவிட்டால் இந்த பிரிவினையைச் சாட்டாகக் கொண்டு கடந்த காலங்களைப் போன்று ஆசிரியர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதை அரசாங்கம் காலங்கடத்தி, ஒதுக்கப்படும் காசையும் தொடர்ந்து விழுங்கி வரும்.

ம.நிரேஷ்குமார்



# என்ன செய்வாள் சஞ்சுலா?

சிறுகதை



ஆயிரம் கனவுகளை உள்ளத்திலே சுமந்து, கண்களில் எதிர்பார்ப்புக்கள் நிறைந்தவளாய், பட்டாம் பூச்சியாய் படபடக்கும் மனதுடன் பாடசாலையில் கால் பதிக்கிறாள் சஞ்சுலா. சஞ்சுலாவிற்கு இது ஒன்றும் முதல் அனுபவம் அல்ல. இதற்கு முன்னரும் பல வருடங்கள் சரியாகச் சொன்னால் பதின்மூன்று வருடங்கள் பாடசாலைக்குச் சென்றவள்தான்.

ஆனால் இன்று மட்டும் ஏன் இந்தப் படபடப்பு? எதிர்பார்ப்பு.....?

அவளது கனவு நனவாகும் நாள் அல்லவா இன்று......?

பள்ளிப் பருவத்திலேயே அவள் கண்ட கனவு இன்று நனவாக......

"பிள்ளையள் நீங்கள் எதிர்காலத்தில் என்னவாய் வரப்போறீங்கள்?"

சிவனேசன் சேர் ஆவலுடன் காத்திருப்பார்.

"நான் டொக்டராய் வரப்போறன் சேர்"

"நான் இஞ்சினியராய்...."

"நான் எக்கவுண்டனாய் வரப் போறன் சேர்"

"நான் சிறிமா மாதிரி, இந்திரா காந்தி மாதிரிப் பிரதமராய் வரப் போறன் சேர்"

"நான் சுதந்திரப் பறவையாய் வரப்போறன் சேர்"

இப்படி ஒவ்வொருவரும் தம் ஆவலைச் சொல்லிக் கொண்டிருக்கச் சிவனேசன் சேர் முகம் மலர்ந்து கேட்டுக் கொண்டிருப்பார்.

"சஞ்சுலா நீங்கள்?"

"நான் ரீச்சராய் வரப் போறன் சேர்"

"ஏனம்மா உங்களுக்கு மட்டும் ரீச்சராய் வர விருப்பம்?"

"நான் ரீச்சரா வந்து உவ சொன்ன மாதிரி ஆக்களையெல்லாம் உருவாக்கப் போறன் சேர்"

"அப்ப நாடு உருப்பட்ட மாதிரித்தான்"

எதற்குமே எதிர்க்கதை தொடுக்கும் செல்வராகவன் வேண்டுமென்றே அவளைச் சீண்டுவான்.

"ராகவன் உப்பிடிக் கதைக்கக் கூடாது. ஒவ்வொரு பிள்ளையளும் தங்கட விருப்பத்தச் சொன்னவ.....

அவளும் தன்ர விருப்பத்தச் சொன்னாள்.... அவ்வளவு தான்...."

சிவனேசன் சேரின் அதட்டும் குரலால் முழு வகுப்பும் அமைதியாகிவிடம். அவள் அன்று சொன்னதை இன்று சாதித்தும் விட்டாள். ஒரு பட்டதாரி ஆசிரியை யாக இன்று பாடசாலைக்குள் காலடி எடுத்து வைக்கிறாள்.

"உவளுக்கென்ன விசரோண அம்மா.... அவனவன் மெடிஷின் கிடைக்கேல... டென்ரல் கிடைக்கேல எண்டு தல கீழாய் நிக்கிறான். உவள் டென்ரலுக்கு போமாட்டன்.... பயோசயன்ஸ்க்குப் போப்போறன் எண்டு நிக்கிறாள்....?"

"கொண்ணன் சொல்லுறது சரிதானேடி பிள்ள.... டாக்குத்தராய் வாறதுக்கு எல்லாருக்கும் குடுத்து வக்கிறேல.... உனக்கு ஆண்டவன் படி அளந்திருக்கி றான்..... போய்ப்படியன்ரி...."

"உனக்கென்னப்பா..... அவள் தான் விரும்பினதப் படிக்கட்டுமன். இப்பவே உனக்கு எல்லாப் பல்லும் விழுந்து போச்சு.... அவள டென்ரல் டாக்குத்தராக்கி என்ன செய்யப் போறாய்?"

அப்பா வழக்கம் போலவே, தனது கிண்டல் பாணியில் அவளுக்காகப் பரிந்து பேசுகிறார்.

"உவள் இஞ்ச யாழ்ப்பாணக் கம்பஸில்... தன்ர பழைய பெட்டக் கோஷ்டியோட சேந்து கும்மாளம் அடிக்கப் பாக்கிறாள். பேசாமல் டென்ரல் படிக்கப் போகச் சொல்லண அம்மா...."

"எனக்கு பயோ சயன்ஸ் மெரிற்றில கிடைக்கும். கொழும்பில படிக்கப் போறன்......"

"எனக்கு இப்பதான் விளங்குது... மொறட்டுவக் கம்பஷில நான் என்ன செய்யுறன் எண்டு நோட்டம் பாக்க வாறியோ....?"

"அப்ப நீ என்னை பெரதெனியா போகச் சொல்லுறது என்னைப் பாக்க வாற சாட்டில.... வாசுகியைப் பாக்க வாறதுக்கோ?"

அம்மா அருகில் நிற்பதை உணர்ந்து அவள் சட்டென்று பல்லைக் கடித்து தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள்.

"அதாரடி வாசுகி? அவளப் பாக்குறதுக்கு உவன் ஏனடி வர வேணும்?"

அம்மா ஆரம்பித்து விட்டால் நிறுத்த முடியாது என்பதை உணர்ந்த அப்பா பேச்சை மாற்றினார்.

"ஏன் பிள்ளை நீ பயோ சயன்ஸிக்குப் போக விரும்பிறாய்? கொம்மாவும் கொண்ணனும் சொல்லுறதக் கேளனண....."

"இல்லயப்பா நான்.... நான்.... ரீச்சராய் வர வேணும்...."

அவள் சொன்னதைக் கேட்டு அதிர்ந்து நிமிர்ந்தான் ராசன். தங்கையின் கனவை சிறு வயதிலேயே அவன் அறிவான்.

குழந்தைகளாய் இருந்த போது ஆண் பிள்ளைகள் "ஆமி-பெடியள்" விளையாட்டும் "ஐஸ்போலும்" விளையாடிக் கொண்டிருக்க....

பெண் பிள்ளைகள் "சோறு கறி காச்சியும்" பொம்மைக் குழந்தைகளை "பராக்குக் காட்டியும்" விளையாடிக் கொண்டிருக்க....

இவள் மட்டும் வேறு பட்டவளாய்... தாயின் பழைய சேலையைச் சுற்றிக்கொண்டு, கையிலே பிரம்புடன் "ரீச்சர்" வேலை பார்த்துக் கொண்டிருப்பாள்.

"உண்மையா உனக்கு ரீச்சராய் வர விருப்பமோடி?"

"ஓமடா அண்ணா"

"அப்ப அவள் பயோ சயன்ஸ் படிக்கட்டும் அப்பா. கொழும்பு யுனிவஸிற்ரில படிக்கட்டும்.... நானும் போய்ப் பார்க்கச் சுகம்" ராசனின் முடிவுக்கு அவ்வீட்டில் மறு பேச்சு இருப்பதில்லை.

"வேணுமெண்டா உனக்காக பெரதேனியாவில படிக்கிறதெண்டாப் படிக்கிறனடா"

அவன் தங்கையை செல்லமாக முறைத்துக் கோபித்தான்.

சஞ்சுலா சிலிர்த்துக் கொண்டாள். அவள் படிக்கின்ற காலங்களில், வாரம் தவறாமல் அவளை வந்து பார்த்து, தேவையான சாமான்களை வாங்கிக் கொடுத்து, அவளை உற்சாகப்படுத்தி *'First Class'* எடுப்பதற்கு முக்கிய காரணமாய் இருந்தவன் ராசன்தான்.

அவளது இலட்சியம் தெரியாமல், அவளது விரிவு ரையாளர்களும் நண்பர்களும் அவளின் மேற்படிப்புக்கு உற்சாகப் படுத்தியபோது, ராசன் அதனை மறுத்து விட்டான்.

அவள் யாழ்ப்பாணம் சென்ற அந்த நாளை, அவளால் எளிதில் மறந்துவிட முடியாது.

"நீ யோசிக்காதயடி.... மூண்டு நாலு வருஷம் கொழும்பில இருந்திட்டாய். உனக்கு ரீச்சிங் அப்போயின் மென்ட் ஆரப்பிடிச்செண்டாலும் ஊரில எடுத்துத் தாறன்.... கவனமாப் போட்டு வா.. போனவுடன் ரெலிபோன் பண்ணு...."

அவன் கண்கலங்கி நின்றதை அன்றுதான் அவள் பார்த்தாள். சொன்னது மட்டுமல்லாமல் அவளுக்குப் பட்டதாரி ஆசிரியர் நியமனம் கிடைத்தபோது, வீட்டுக்குப் பக்கத்திலே அமைந்துள்ள பாடசாலையில் நியமனம் கிடைக்கக்கூடிய ஏற்பாட்டையும் செய்வித்திருந்தான்.

அவளுக்காக அத்தனையும் செய்த அவளின் அன்பு அண்ணன் இப்போது உயிருடன் இல்லை... அல்லது இருக்கிறானோ என்று சரியாகத் தெரியாது.

அவன் ஒரு இஞ்சினியராக இருந்தும் கூட, அவசரகாலச் சட்டத்தின் கீழ், சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு, இப்போது தாங்கள் கைது செய்யவில்லை என்று சொல்கிறார்கள். "எந்தப் பட்டியலிலும் அவன் பெயர் இல்லையாம்"

"என்ன சஞ்சுலா முதல் நாளே கடும் யோசனை யுடன்.....?" அங்கு கடமையாற்றும் அவளது பாடசாலை நண்பி வாஞ்சையுடன் அவளை அதிபரின் அலுவலகத் திற்கு அழைத்துச் செல்கிறாள்.

"சைன் பண்ணுதல்", "டியூட்டி அஸ்யூம் பண்ணுதல்" என்று தேவையான வேலைகளைச் செய்த பின்னர் வகுப்பறையை நோக்கி மெல்ல நடக்கிறாள்.

ஆசிரியை ஒருவர் "மெற்றேனிற்றி" லீவில் நின்ற படியால், பாடசாலைக்கு வந்து கடமையைப் பொறுப் பேற்ற முதல் நாளே வகுப்பறையில் கற்பிக்கக்கூடிய சந்தர்ப்பம் அவளுக்கு அதிபரினால் வழங்கப்பட்டி ருந்தது.

துள்ளல் நடையுடன், கண்களில் எதிர்பார்ப்புடன், ஆயிரம் கனவுகளைச் சுமந்து வகுப்பறைக்குள் நுழைகிறாள்.

"குட் மோனிங் ரீச்சர்"

"குட் மோனிங் பிள்ளயள்.... இருங்கோ....." அவளும் புன்னகையுடன் பதிலளிக்கிறாள்.

ஆசிரியையாகப் பணிபுரிதல் என்பது அவளின் வாழ்நாள் இலட்சியம் அல்லவா? முற்றுமுழுதான ஈடுபாட்டுடன் கற்பிக்கின்றாள்.

"விஞ்ஞான பாடத்தில் உள்ள இந்தச் சிக்கலான பகுதியையே எவ்வளவு இலகுவாகப் பிள்ளைகளுக்கு விளங்கக் கூடியதாகக் கற்பிக்கின்றேன்" என்று தனது ஆற்றலை எண்ணி அவளே வியப்படைகிறாள்.

கடைசி வாங்கில்.... கடைசி மூலையில் ஒரு மாணவன்... தனக்கும் அந்த வகுப்பறைக்கும் சம்மந்தம் இல்லாதது போல்.... அமைதியாக ஏதோ சிந்தனையில் அமர்ந்திருக்கிறான்.

நீலம் போட்டுத் தோய்க்காத "அயன்" பண்ணாத சேர்ட்....

வெளிறிப் போன நீல நிறக் காற்சட்டை....

இன்றைக்கோ, நாளைக்கோ "பென்ஷன்" வாங்கக் காத்திருக்கும் சப்பாத்து....

தோற்றத்தில் வித்தியாசமாய் இருக்கிறான்.

அது பரவாயில்லை.... அது அவரவர் பொருளாதார நிலைமையைப் பொறுத்தது என்பதை சஞ்சுலா நன்கறிவாள்.

ஆனால் அவன் வகுப்பறையில் கவனமில்லாதவ னாக அல்லவா இருக்கிறான்! அதனை எப்படி அவளால் பொறுத்துக்கொள்ள முடியும்?

எல்லா மாணவாகளையும் படிக்க வைப்பது ஒரு ஆசிரியையின் கடமையல்லவா! எல்லோருக்கும் படிப்பிக்கத் தானே அவள் வந்திருக்கிறாள்!

திடீரென்று, அவன் சற்றும் எதிர்பாராத வேளையில், வினாவொன்றைக் கேட்கிறாள். அவன் எதுவும் புரியா மல் "திரு திரு" வென்று முழித்துக் கொண்டு நிற்கிறான்.

சஞ்சுலா கோபம் தலைக்கேறி, "பளார்" என்று ஒரு அறை கொடுக்கிறாள்.

"அடியைப்போல அண்ணன் தம்பி உதவ மாட் டான்" தனக்குள் முணுமுணுக்கிறாள்.

முழு வகுப்புமே ஒரு கணம் ஸ்தம்பிதம் அடைந்து, மௌனமாகிறது.

சஞ்சுலாவிற்கும் மனது உறுத்துகின்றது. அவளால் தொடர்ந்து படிப்பிக்க முடியவில்லை.

ஒரு மாணவன் மெதுவாக எழுந்து....

"ஏன் ரீச்சர் அவனுக்கு அடிச்சனீங்கள்...? இண்டக்கு அவன்ர பிறந்தநாள்... புது உடுப்பும் இல்லை... ரொபியும் கொண்டரேல எண்டு விடிய எல்லாரும் பகிடி பண்ணி னவங்கள் ரீச்சர்...."

சஞ்சுலாவிற்கு தலை சுற்றத் தொடங்கியது. மௌ னமாய் அழுது கொண்டிருந்த அந்த மாணவன் இப்போது கேவிக் கேவி அழத் தொடங்கினான்.

சஞ்சுலா சுதாகரித்துக் கொண்டாள். "மொனிற்றர் ஓடி வாங்கோ.... கன்ரீனில போய் ஒரு ரொபிப் பக்கற் வேண்டியாங்கோ..."

அந்த மாணவன் சஞ்சுலா நீட்டிய பணத்துடன் சிட்டாய்ப் பறந்து, ரொபிப் பக்கற்றுடன் வருகிறான்.

"எல்லாரும் *happy birthday* சொல்லி அரவிந்தன் விஷ் பண்ணுங்கோ....."

பிள்ளைகள் அனைவரும் இணைந்து பாடி வாழ்த்துகிறார்கள்.

"அரவிந்தன் இஞ்ச வாரும்.... உம்மட பிறந்த நாளுக்கு ரீச்சற்ற கிப்ற் இது.... எல்லாருக்கும் ரொபி கொடும்...."

அவன் மௌனமாய் தலை குனிந்து நிற்கிறான்.

"அரவிந்தன் இந்தாரும் ரொபி.... எல்லாருக்கும் குடும்..."

தொடர்ந்து அவன் மௌனமாக....

"மொனிற்றர் ஓடி வாங்கோ.... இண்டக்கு அரவிந்தன்ர பிறந்த நாளுக்கு எல்லாருக்கும் ரொபி குடுப்பம்..."

மாணவர்கள் எல்லோரும் ஆவலாகச் சாப்பிடு கிறார்கள். அரவிந்தன் மட்டும் ரொபி எடுக்கிறான் இல்லை. சன்சுலா எவ்வளவு வற்புறுத்தியும், அவன் அசைந்து கொடுப்பதாக இல்லை.

என்ன செய்வாள் சஞ்சுலா?

தொடர்...





திருமதி.ஆர்.தயாவதி

# குழந்தைக்கல்வி -2

## போராட்டங்களும் குழந்தைகளும்...

உலகளாவிய ரீதியில் போராட்டங்களின் கோரத் தாண்டவத்தால் பாதிக்கப்பட்டவர்களில் குழந்தைகள் மிக அதிகமாகவே உள்ளனர். போர் பற்றிய எந்த விதமான பிரக்ஞையும் இல்லாத விளையாட்டுக் குழந்தைகளைப் பலியெடுத்தும் அவயக் குறைவுள்ளவர்களாக்கியும் மனவடுவுக்கு உள்ளாக்கியும் யாரோ செய்த வினையின் விளைவைச் சுமக்கும் அப்பாவிக் குழந்தைகளை இவ்வுலகம் உருவாக்கியுள்ளது. இவ்வாறான குழந்தைகள் எதிர்காலத்தைத் இழந்துவிட்ட சோகம் அவர்களாலேயே உணரப்படுவதில்லை. வறுமை, இயற்கை அனர்த்தம் மற்றும் செயற்கை அனர்த்தங்களில் பாதிக்கும் குழந்தைகளை விட ஆதிக்கப் போட்டியினால் ஏற்படும் போர்களினாலும், போராட்டங்களினாலும் அதிகளவில் சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றார்கள். இவ்வகையில் சிறுவர்கள் பாதிப்படைவதற்கு பின்வரும் பயங்கரச் சம்பவங்கள் காரணமாகின்றன.

- குண்டு வீச்சு, துப்பாக்கிப் பிரயோகங்களைக் காணுதல்,
- போர்க்காலச் சூழலில் வாழுதல், இடம்பெயர்தல்,
- தமது பெற்றோர், சகோதரர் மற்றும் உறவுகள் உயிரிழக்கப்படுதல்,
- தமது பெற்றோர், சகோதரர் மற்றும் உறவுகள் காணாமல் போதல்,
- தமது வீடுகள் கிராமங்கள் அழிக்கப்படுவதைக் காணுதல்,
- காயப்பட்டவர்கள், இறந்தவர்களைப் பார்த்தல்,
- கொல்லப்படுதல், சித்திரவதைகளை பார்த்தல்,
- தாங்களே காயப்படுதல், சுடப்படுதல்,
- பயங்கரச் சண்டைக்காட்சிகளைக் காணுதல் போன்றனவாகும்.

இலங்கையைப் பொறுத்தளவில் வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகள் மேற்சொன்னவற்றில் ஒன்றையோ அல்லது பலவற்றையோ அனுபவித்திருக்கும். இவ்வாறான அசம்பாவிதங்களைக் காண்பதற்கும், அனுபவிப்பதற்கும் ஆளான துரதிஷ்டக் குழந்தைகள் உடல் உள ரீதியிலான பாதிப்புக்களை அடைகின்றனர். இப்பாதிப்புக்களின் விளைவுகளாக பதற்றம், பயம், செயல் மாற்றம், ஒதுங்கியிருத்தல், அழுதல், விளையாட்டில் படிப்பில் ஆர்வமின்மை, முன்பு ஆர்வமாயிருந்தவற்றில் நாட்டமின்மை, அமைதியின்மை, உறக்கமின்மை, பயங்கரக் கனவு போன்ற எண்ணிக்கையில் அடங்காத துன்பங்களை அனுபவிக்கின்றனர். இவ்வாறான பிள்ளைகளுக்கு மிக விரைவான உதவி அவசியமாகின்றது. இவர்களை இயல்பு நிலைக்குக் திருப்பும் பொறுப்பும் கடமையும் பெற்றோர், ஆசிரியர்கள், சிறுவர் பணியாளர், உளவளத் துணையாளர்கள், சமூகத் தலைவர்களைச் சார்ந்ததாகின்றது.

குறிப்பாக ஆசிரியப் பணியில் ஈடுபடுபவர்கள் இது தொடர்பாக அதிக அக்கறை செலுத்துவது அவசியம். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடும்போது ஏனைய சாதாரண பிள்ளைகளோடு இவர்களை ஒன்றுபடுத்திப் பார்ப்பதும் கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் முடியாத காரியம். இவர்களுக்கென்று விசேட வழிகாட்டல்களும், ஆலோசனைகளும் அவசியமாகின்றன. இவ்வேளைகளில் பிள்ளைகளை மூன்று விதமான பாதிப்புக்களிலிருந்து நீக்குதல் அவசியமாகின்றது.

(1) போராட்ட நினைவுகளால் ஆட்கொள்ளப்பட்டு அது தொடர்பான பொருட்களைக் காணும் போதும் அது தொடர்பான நினைவுகளாலும் ஏற்படும் மனக்குழப்பத்தை நீக்குதல்.

(2) சிடுசிடுப்பு, உறக்கமின்மை, பதட்டம், கவனம் செலுத்துவதில் சிரமம் போன்ற உடலியற் தூண்டல்களைக் கட்டுப்படுத்தல்.

(3) பாதிப்புத்தரும் விடயங்களைப் பற்றி நினைத்தல், பார்த்தல், பேசுதல், சம்பவத்தோடு தொடர்புள்ள மனிதர், இடம் என்பவற்றைத் தவிர்க்கும் குணத்தை மாற்றுதல்.

இவ்வாறான விடயங்களைக் கருத்தில் கொண்டு தமது கற்றல் கற்பித்தல் உபாயங்களைத் திட்டமிடுவதில் ஆசிரியர் கவனம் செலுத்துதல் வேண்டும்.

தொடர்ச்சி பக் 28...

சந்தா விண்ணப்பப் படிவம்

"அறிவுச் சமூகத்தின் வேட்கை வினைத்திறன் மிக்க ஆசிரியர்"

# ஆசிரியம்

"Aasiriyam" 180/1/50 People's Park, Colombo - 11,
Tel: 011-2331475 E-mail :aasiriyam@gmail.com

முழுப் பெயர் ........................................................................
........................................................................

பாடசாலை முகவரி ........................................................................
........................................................................

அலுவலக முகவரி ........................................................................
........................................................................

தொலைபேசி/தொலைநகல் இல ........................................................................

மின்அஞ்சல் முகவரி ........................................................................

ஆசிரியம் அனுப்ப வேண்டிய முகவரி ........................................................................
........................................................................

இத்துடன் ரூபா..........................................................க்கான பணம்/ காசோலை

* காசோலை இலக்கம் ............................................ இணைத்துள்ளேன்.

*Commercial Bank: A/C No : 1120017031 (Chemamadu B/C)*

திகதி : கையொப்பம்

இப்படிவத்தை போட்டோ பிரதி செய்து உபயோகிக்கவும்.

## 'ஆசிரியம்'

| விளம்பரக் கட்டணம் | | சந்தா விபரம் | |
|---|---|---|---|
| பின் அட்டை | 10,000/- | தனி இதழ் | 50/- |
| உள்ளட்டை முன் | 8,000/- | ஆண்டு சந்தா | 600/- |
| உள்ளட்டை பின் | 5,000/- | ஆண்டு சந்தா (தபால் செலவுடன்) | 1,000/- |

**மேலதிக தொடர்புகளுக்கு :**

தெ.மதுசூதனன்
077 1381747 / 011 2366309/ 021 2227147
மின்னஞ்சல்: *mathusoothanan22@gmail.com*

காசுபதி நடராஜா
0777 333890


மர்சூம் மௌலானா
077 4747235

"ஆசிரியம்" - படைப்புகள் அனுப்ப : *aasiriyam@gmail.com*
*mathusoothanan22@gmail.com*

# சேமமடு பதிப்பகம்





விலை: 300.00




விலை: 560.00





விலை: 560.00




விலை: 300.00




விலை: 400.00




விலை: 400.00

## CHEMAMADU BOOK CENTRE

UG.50 People's Park, Colombo -11
Tel:011-2472362, 2321905 Fax: 011-2448624
E-Mail:chemamadu@yahoo.com, chemamadu50@gmail.com,
Website:www.chemamadu.com

# ஆசிரியம் தொடர்புகளுக்கு...

<u>வவுனியா</u>

தா.அமிர்தலிங்கம் ....................................071-8457290
ஆ.விஜேந்திரன் ....................................077-4412518
சி.ரமேஸ் ....................................077-4744810
சு.பரமானந்தம் ....................................071-8457260
ந.பார்த்தீபன் ....................................077-6231859
அறிவாலயம் புத்தகநிலையம் ....................................024-4920733

<u>மட்டக்களப்பு</u>

கி.புண்ணியமூர்த்தி ....................................077- 7034528/065-2250114
ச.ஜெயராசா ....................................065- 2225812/077-7249729
ச.மணிசேகரன் ....................................065- 2248334/077-6635969
டிகநாதன் ....................................077- 2482718

<u>யாழ்ப்பாணம்</u>

புக்லாப் (பரமேஸ்வராச் சந்தி) ....................................021- 2227290
ரி.ரவீந்திரன் ....................................077- 1285749
ந.அனந்தராஜ் ....................................077- 8293366
நெடுந்தீவு மகேஷ் ....................................077- 4687873

<u>கிளிநொச்சி</u>

பெருமாள் கணேசன் ....................................077- 0789749

<u>ஹட்டன்</u>

முரளி புத்தக நிலையம் ....................................05- 7911571/ 051-7911311

<u>கொழும்பு</u>

பூபாலசிங்கம் புத்தகசாலை - வெள்ளவத்தை .............011- 2504266/ 011- 4515775
பூபாலசிங்கம் புத்தகசாலை - கொழும்பு .............011- 2422321

<u>அம்பாறை</u>

அமீர் அலி ....................................077-2224025

<u>அனுராதபுரம்</u>

அன்பு ஜவஹர்ஷா ....................................071- 8489797

<u>திருகோணமலை</u>

இ.புவனேந்திரன் ....................................026 -2222426
ஆ.செல்வநாயகம் ....................................026 -2222765
ச.தேவசகாயம் ....................................026 -2227345
....................................077 -7294287
சத்தியன்

<u>மூதூர்</u>

க.கனகசிங்கம் ....................................077 -8730736

<u>மன்னார்</u>

ஜோதி புத்தக நிலையம் ....................................023 -2222052

<u>நுவரெலியா</u>

குமரன் புக் சென்டர் ....................................052-2223416/0777-6905096

<u>புஸ்ஸல்லாவை</u>

ஜி.லோகேஸ்வரன ....................................077-9706564/081-5619629

<u>பண்டாரவளை</u>

ஆர்.புண்ணியமூர்த்தி ....................................077-1155609